உ

பரமபதிதுணை.

S. 207

# புலிப்பாணி முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியம் நூறு,

அரும்பத உரையுடன்.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

---

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்,

இ. ராம.

குருசாமிக்கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

இதன்விலை) சுத்தப்பிரதி. (அணா 12.

உ

பரமபதிதுணை.

# புலிப்பாணி முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

# வைத்தியம் ருாா.

அண்டரண்ட மாகிநின்ற வரனேகாப்பு
ஆநந்த மாகிநின்ற உமையாள்காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியேகாப்பு
குமரகுரு வேன்முருகர் பாதங்காப்பு
புண்டரிக மானதிரு மாலுங்காப்பு
புகழ்பிரமன் முதற்குலிச னவர்காப்பு
சண்டமெனு மாருதம்போல் வைத்தியத்தில்
சாற்றுகிறேன் போகரிட பாதங்காப்பே. (1)

சுரமாத்திரை.

காப்பாகச் சுரக்குளிகை சொல்லக்கேளு
கருவான கௌரியது விராகனேந்து
சேப்பாக மிளகதுவு மதிலேபார்தி
திறமான உழுந்ததுவு மிதுநேரப்பா
வேப்பாக விருசரக்குங் கல்வத்திட்டு
விதமாக எருக்கம்பால் தன்னாலாட்டி
பாப்பாக கௌரிக்குக் கவசங்கட்டிப்
பாங்காக ரவிமுகத்தில் வைத்திடாயே. (2)

வைத்தவுட னெடுத்துவந்து துணிமேற்சுற்றி
வகையாக வெள்ளாவி தன்னில்வைத்துக்
கைத்தவுட னெடுத்துப்பின் கவசம்வாங்கிக்
கனமாக அமுரியினல் கழுவிப்போட்டுச்
செத்தவுடன் ரவிதனிலே கடிகைவைத்துச்
செயலான கல்வத்தி லிட்டுநீயும்
உய்த்தவுடன் பாச்சானை வாட்டித்தண்ணீ
ருத்தமனே நாற்சாம மரைத்துத்தீரே. (3)

தீரேநீ குளிகைசிறு பயறுபோலே
திறமாக உண்டைசெய்து நிழலுலர்த்திச்
சேரேநீ சிமிழ்தனிலே யடைத்துக்கொண்டு
செகத்திலுள்ள மனிதருக்குச் சுரத்துக்கெல்லாம்
பாரேநீ சுக்குடைய கியாழந்தன்னில்
பண்பாகக் குளிகையொன்று கொடுத்துப்பாரு
வீரேநீ மூன்றுபகல் கொடுக்கும்போது
விதமான தலைமுறையின் சுரங்கள்போமே. (4)

போமேநீ பத்தியமா யறுநாள்தள்ளு
பொங்கமுடன் வெந்நீருஞ் சாதமாகும்
ஆமேநீ மற்றொன்று மாகாதப்பா
அடைவாக ஏழாநாள் ஜலத்தைவாரு
நாமேநீ மிளகுசிறு கீரைவேரும்
நலமாகக் கிஷாயம்வைத்துக் கொள்ளச்சொல்லு
போமேநீ பத்தியந்தான் முறிக்கச்சொல்லிப்
புனிதமுடன் மற்றுநா ளெல்லாஞ்சேரே. (5)

சன்னிக்குமேல் பூசத்தைலம்.

சேரேநீ சன்னிக்குத் தயிலமொன்று
செப்புகிறேன் புலிப்பாணி விளக்கமாக
வீரேநீ வேப்பெண்ணெய் படிதானென்று
விதமான கார்த்திகையின் கிழங்குத்தண்ணீர்
பாரேநீ படிதண்ணீ ரளந்துவாரு
பாங்கான கருநாபி விராகனென்று
கூரேநீ வசம்பதுவும் விராகனேந்து
கொடிதான வெள்ளுள்ளி விராகனஞ்சே. (6)

அஞ்சான காயமது விராகனென்று
அப்பனே ஓமமது விராகனேந்து
தஞ்சான சதகுப்பை விராகனேந்து
சாதிக்காய் வெந்தோன்றி விராகன்பத்து
மஞ்சான இவையெல்லாங் கிழங்குநீரில்
மைந்தனே மைபோலே யரைத்துப்போட்டுத்
தஞ்சான எண்ணெயிலே கலக்கிக்கொண்டு
தயவான கடுகுபதந் தன்னில்வாங்கே. (7)

வாங்கியெண்ணெய் மேற்பூசச் சந்திபோகும்
வகையான குடைச்சல்முதல் வாதம்போகும்
பாங்கியே உள்ளுக்குக் கொடுக்கொணுது
பாங்காக மஞ்சளிட்டுச் சாணமிட்டு
தாங்கியே நீரிட்டுக் கழுவிப்போடு
தயவாக இந்தஎண்ணெய் யுறுதிமெத்த
ஏங்கியே யலையாதே யப்பாசொன்னே
னிதமாக வைத்தியந்தா னின்னுங்கேளே. (8)

சூதகவலிக்கு உப்பு.

கேளேநீ சூதகத்தின் வலிதான்போகக்
கெடியாகச் சொல்லுகிறேன் நன்ருய்க்கேளு
வீளேநீ போகாம லுப்பைவாங்கி
விதமான கரந்தையிட சாற்ருலாட்டி
நாளேநீ காயவிட்டுப் புடத்திற்போட்டு
நாயகனே யிம்முறையா யைந்துதீரு
பாழேநீ போகாம லெடுத்துக்கொண்டு
பண்பான ஆண்செருப்ப டையின்சாறே. (9)

சாற்ருலே யைந்துபுடம் போட்டாயாளுற்
சார்வாகச் செந்நீறு போலேயாகும்
பார்த்தாலே குடோரியது இதற்கொவ்வாது
பண்பான சூதகத்தின் வலியேகண்டாய்
மாற்ருலே எலுமிச்சம் பழச்சாற்ருலே
மைந்தனே யகஸ்தியனுர் குழம்பைக்கேளு
ஏற்ருலே பணவிடைதான் சாற்றிற்சேர்த்து
இதமாக உள்ளுக்குக் கொடுத்திடாயே. (10)

கொடுத்திடவே பேதியது அதிகங்கண்டால்
குணமாக வசம்பதனைக் கருக்கிக்கொண்டு
அடுத்திடவோர் படிசலந்தான் கூடவார்த்து
அடைவாக எட்டொன்ருய்க் குறுக்கிக்கொண்டு
தடுத்துடனே கொடுத்துவிடு பேதிநிற்கும்
கருவாகப் பத்தியமாய்க் காத்துக்கொள்ளு
சடுத்தமில்லை பச்சரிசிப் பயற்றிளுேடு
சார்வாகப் பத்தியந்தா னுப்பாகாதே. (11)

ஆகாது மற்றொன்று மாகாதப்பா
அடைவாக மற்றுநாள் மருந்தைக்கேளு
சாகாத வெள்ளுள்ளித் தயிலம்வாங்கிச்
சாதகமாய்த் துட்டெடைதா னென்றில்வார்த்து
நோகாது முன்சொன்ன வுப்பைமைந்தா
நோய்தீர விராகனென்று பொடித்துப்போடு
போகாத சூதகமாம் வலிதான்தீரப்
புகட்டிவிடு தயிலமதைக் கொடுத்திடாயே. (12)

கொடுத்திடுவா யிந்தமுறை நாள்மூன்றப்பா
குணமாகப் பத்தியமாய்க் காக்கச்சொல்லு
அடுத்திடுவாய் பச்சரிசி பருப்பினோடு
அடைவாகப் புனற்பாக மாகக்காய்ச்சிச்
சடுத்தமில்லே கொடுத்துவிடு உப்பாகாது
சார்பாக வைந்தாநாள் தலையைமுழ்கு
நடுத்திடுவா யுப்பதுவும் வறுத்துக்கூட்டு
நலமாக மற்றுநா ளெல்லாமாமே. (13)

பெரும்பாட்டுக்கு மருந்து.

ஆமேநீ பெரும்பாடு வந்தபேர்க்கு
அடைவாக நாவல்பட்டை யொருமைமோரில்
தாமேநீ வைத்திடித்துப் பிழிந்துகொண்டு
தயவாக சந்தனந்தான் விராகனேந்து
தாமேதான் புளித்தமோர் தனிற்கலக்கி
நாயகனே கொடுத்துவிடு நாள்மூன்றப்பா
வீமேநீ பெரும்பாடு எங்கேபோச்சு
விதமாகப் பத்தியமே யில்லேத்தானே. (14)

குன்மம் அறுக்கும் உப்பு.

தானேநீ குன்மவகை யாறுந்தீரத்
தவயாக உப்பொன்று சொல்லக்கேளு
மானேநீ உப்பதுவும் படிதானென்று
மைந்தனே எருமைமோர் படிதானென்று
மானேநீ வரிக்குமட்டிச் சாறுநாழி
வகையான இந்துப்பு வெடியுப்போடு
தேனேநீ சவுட்டுப்பு வளையலுப்பு
தெளிவாக வகைவகைக்கு விராகனென்றே. (15)

ஒன்றாக இதையெடுத்துப் பாண்டத்திட்டு
உத்தமனே மோருடனே சாறும்விட்டுப்
பன்றாக அக்கினியி லெரிக்கும்போது
பதரும லுப்பதுசர்க் கரைபோலாகுங்
குன்றாகப் பாண்டத்தி லெடுத்துலர்த்திக்
குணமாக உதயாதி அந்தநீரில்
நன்றாக விராகனெடை யுப்பிரண்டு
நலமாகத் தான்போட்டுக் கொடுத்திடாயே. (16)

கொடுத்திடுவாய் மண்டலந்தா னிந்தவிதங்
குணமாக அவரவர்க்கு நாள்தான்தள்ளு
தொடுத்திடுவாய் வாயுவென்ற கட்டிபோகுந்
தொந்திப்பு சோகைபோம் பொருமல்தீரும்
படுத்திடுவாய் கவிசையொடு கிறிச்சினங்கள்
பாழான கெண்டைமுதற் பறந்துபோகுங்
கடுத்திடுவாய் அகுவையென்ற கட்டிபோகுங்
கடலான உப்புடைய திறந்தான்காணே. (17)

நீரடைப்புக்கு வாழைக்கிழங்கின் நீர்.

காணேநீ நீரடைப்புக் கண்டபேர்க்குக்
கனிவாக வாழையுட கிழங்கைத்தோண்டி
ஊணேநீ மற்றநாட் பார்க்கும்போது
உத்தமனே வாழையுள்ளே தண்ணீர்நிற்கும்
வீணேநீ போகாமற் கிழங்குத்தண்ணீர்
விதமாக அரைப்படிதா னெடுத்துவந்து
பூணேநீ வெடியுப்பு விராகன்ரண்டு
போட்டதிலே கொடுக்கநீர்க் கட்டுப்போமே. (18)

மேத்தலைவியாதிக்கெண்ணெய்.

போமேதான் மெத்தலையின் வியாதிதீரப்
பொங்கமுட னெள்ளெண்ணெய் படிதானென்று
தாமேதான் பசுவின்பால் படிதானென்று
தயவாய்க்கம் பஞ்சோற்றின் நீரைவிட்டு
வேமேதா னுதொண்டை யிலையைத்தானும்
விதமாகத் தான்துவைத்துச் சாறுநாழி
வாமேதான் மிளகதுவும் பலந்தான்ரண்டு
வளமாகத் தானுடைத்துப் போட்டிடாயே. (19)

போட்டதொரு மிளகதுவு மிதக்குமட்டும்
பொங்கமுட னக்கினியி லெரிக்கவேண்டும்
நாட்டவே யிறக்கிவைத்து வடித்துக்கொண்டு
நலமான மிளகதனை யரைத்துக்கூட்டு
ஊட்டவே உதயாதி தொடங்குமுன்னே
உத்தமனே தலைமுழுகி யமுதுசொள்ளு
காட்டவே மண்டையிடி கண்ணுக்குத்து
காலமே முழுகிவர ஓடிப்போமே. (20)

அண்டவியாதிக்கு எண்ணெய்.

போமப்பா அண்டத்தின் வியாதிவந்தாற்
பொங்கமுட னெண்ணெயொன்று சொல்லக்கேளு
ஆமப்பா போகருட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி முறையைச்சொல்வேன்
தாமப்பா விளக்கெண்ணெய் படிதானொன்று
தயவான மிளகுதக் காளிச்சாறு
வாமப்பா படியொன்று அளந்துவாரு
வளமான வெந்தயந்தான் பலமும்ரண்டே. (21)

ரண்டான வெந்தயத்தைச் சும்மாபோடு
நினைவுகள்தான் பிசகாம லெரிப்பாய்நீயே
உண்டான வெந்தயந்தான் மொருமொருத்தால்
உத்தமனே கடுகோடே ஊற்றிக்கொள்ளு
பண்டான எண்ணெயைத்தான் கொள்ளவென்றால்
பாங்காகப் படியரைக்கால் கொள்ளச்சொல்லு
திண்டான கற்கமது கரண்டிவீதம்
திறமாக மூன்றுநாள் முறையாய்க்கொள்ளே. (22)

கொள்ளவே பத்தியந்தா னென்றுமாகா
கொடியதோ ராறுநாட் காத்தல்செய்வாய்
தெள்ளவே உப்பாகா புளியுமாகா
தெள்ளிமையாய்ச் சாதமன்றிச் சுவைகளாகா
மெள்ளவே பத்தியந்தா னேழாநாளில்
மேன்மையாய்த் தான்முறித்து எல்லாங்கொள்ளு
உள்ளவே அண்டமென்ற வியாதிபோகும்
உத்தமனே நாட்சென்றால் பேகாதென்னே. (23)

ஒருதலைநோய்க்கு நசியம்.

போகுமப்பா ஒருதலையின் வியாதிரோகம்
பொங்கமுடன் சமுத்திராப் பழத்தைவாங்கி
ஆகுமப்பா பெருங்காயம் நேராய்ச்சேர்த்து
அடைவான பிள்ளைப்பா லதனுலாட்டி
ஏகுமப்பா குளிகைபோல் செய்துகொண்டு
இதமான பிள்ளைப்பால் தனிலுரைத்து
வேகுமப்பா நாசியிலே விட்டபோது
விரண்டோடி யகன்றுவிடும் வீரந்தானே. (24)

பீனிசத்திற்கு நசியம்.

வீரந்தா னின்னமொரு வுபாயங்கேளு
விதமான மாதுளம்பூ எருக்கின்பூவுங்
காரந்தான் குங்குமப்பூ மூன்றுநேராய்க்
கல்வத்தி லாட்டியதைத் தனப்பால்விட்டுச்
சோரந்தா னில்லாமல் நாசியிலேபிழியச்
சோரியென்ற பீனிசந்தா னேழுந்தீரும்
பாரந்தா னில்லையப்பா சூட்சமாகப்
பாடினேன் புலிப்பாணி விளங்கத்தானே. (25)

காதுவலிக்கு எண்ணெய்.

விளங்கவே காதிலுள்ள நோய்தனக்கு
விதமான மரமஞ்சள் வெள்ளைப்பூண்டு
அளங்கவே சுக்கோடு வலம்புரிக்காய்
அடைவான கரியசீ ரகத்தினோடு
முழங்கவே நண்டிறைச்சி நத்தையோடு
முசுறுமுட்டை கருங்கோழி முட்டையோடு
புளங்கவே யிவையெல்லாம் விராகனென்று
புதுமையிலைக் கள்ளிபுனன் முருங்கைச்சாறே. (26)

சாறென்ன வகைக்குவகை படிதான்வீசம்
சார்வான பசுவினெய் படிதான்காலும்
வாறென்ன வேப்பெண்ணெய் படிதான்காலும்
வளமாக விட்டெரித்துக் காதிலூற்றப்
பாறென்ன பஞ்சுகொண்டு மூடச்சொல்லு
பாங்காக ஈராறு நாள்தான்வாரு
கூறென்ன காதிலுள்ள வியாதியெல்லாங்
குணமாகும் போகருட கடாட்சந்தானே. (27)

### கண்படலந்தீர ரத்நாதிக்குளிகை.

தானென்ற கண்ணிலப்பா படலந்தீரத்
தய்வான மிளகுடனே சுக்குங்கூட்டிக்
கானென்ற திப்பிலியுஞ் சங்குங்கூடக்
கரியமால் தாரமுடன் புங்கம்வித்தும்
வேனென்ற அதிமதுரந் துத்தத்தோடு
விதமான பீதரோ கணியுங்கூடப்
பானென்ற மனோசிலையு மேனக்கொம்பும்
பண்பான ஆமையுட வோடுங்கூட்டே. (28)

கூட்டப்பா புலிநகமும் வெள்ளியோடு
கொடிதான சேவலின்நெஞ் செலும்புங்கூட்டு
மூட்டப்பா இந்துப்பு இவையெல்லாந்தான்
முனையாக ஒரிடையாய் நிறுத்துக்கொண்டு
ஆட்டப்பா கல்வத்தில் நந்திபத்ரி
அடைவாகச் சாறுவிட்டு ஒருநாளாட்டிச்
சூட்டப்பா அதனுடபூச் சாறுதானே
சொல்லடா ஒருநாள்தா னாட்டித்தீரே. (29)

தீர்த்தெடுத்துக் கயிறுபோ லுருட்டிக்கொண்டு
திறமாக நிழலுலர்த்திப் பதனம்பண்ணு
பார்த்தெடுத்துத் தேனதிலே யுரைத்துப்போட
படலமென்ற வகைகளெல்லாம் பறந்துபோகுஞ்
சார்த்தெடுத்து முலைப்பாலி லுரைத்துப்போடச்
சார்வாக வீராறு நாளுக்குள்ளே
ஈர்த்தெடுத்த ரத்நாதி குளிகையென்பார்
இருவிழியின் படலமெல்லாம் ஏகுந்தானே. (30)

### மாலைக்கண்ணுக்கு மை.

தானென்ற மாலையிட கண்ணுக்கப்பா
தயவான சுழல்வண்டு சுட்டசாம்பல்
வேனென்ற கல்வத்திற் போட்டுக்கொண்டு
விதமாக எள்ளெண்ணெய் நீர்ப்பூண்டுச்சாறும்
பானென்ற பருத்தியிலைச் சாறுங்கூட்டிப்
பாங்கான வெள்ளுள்ளி மிளகுபத்து
வானென்ற மைப்போலே ஆட்டிக்கொண்டு
வளமாக அந்திசந்தி கண்ணிற்போடே. (31)

போடப்பா நாள்மூன்று போட்டபோது
பொங்கமுடன் மாலைகண் ரோடும்பாரு
வீடப்பா விளக்கெண்ணெய் வாரவீதம்
விதமாக நாளைந்து முழுகும்போது
சாடப்பா அருந்ததி கண்ணில்தோற்றுஞ்
சார்வாகக் கிழ்ப்பார்வைக் கண்ணிற்காணும்
நாடப்பா போகருட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (32)

கண்ணில் நீர்வடிதலுக்கு மை.

பாடினேன் கண்ணில்நீர் வடிந்ததானால்
பரிவாக வரப்பூலா இலையோர்குத்து
நாடினேன் கருவேலி னிலையோர்குத்து
நலமான தான்றிக்காய் மாசிக்காயுஞ்
சூடினேன் கடுக்காயுங் காசுக்கட்டி
சுகமாக வகைவகைக்கு விராகனென்று
கூடினே னிவையெல்லாம் பொடித்துப்போட்டு
குணமாக வேகவைத்துப் பிழிந்திடாயே. (33)

பிழிந்திடுவாய் கரண்டியிலே வேணமட்டும்
பிரியமுடன் அபினியது விராகன்கால்தான்
செழிந்திடுவாய் சீனமது பொரித்துக்கொண்டு
செயலான பொரியதுவும் விராகன்கால்தான்
குழிந்திடுவா யடுப்பிலே காயும்போது
கூசாம லாவரையின் குச்சியாலே
சுழிந்திடுவாய் மைப்போலே கடைவாயப்பா
சுகமாக்கண் ணைச்சுற்றி வழித்துப்போடே. (34)

போடுமுன்னே புளியிலையை வேகவைத்துப்
பொங்கமுடன் கண்ணையுநீ கழுவிப்போட்டு
ஆடுமுன்னே இந்தஇலை வேதுவைத்து
அடைவாகப் போட்டவுடன் கண்ணீர்நிற்கும்
நாடுமுன்னே சிவப்பெல்லாம் வாங்கிப்போகும்
நலமான அழுகுகண்ணுந் தீரும்பாரு
கூடுமுன்னே இன்னமொரு வைத்தியந்தான்
குணமாகச் சொல்லுகிறேன் கேளுகேளே. (35)

### கண்வலிக்கெல்லாம்.

கேளப்பா கண்ணுவலி வந்தபேர்க்குக்
கெடியான துளசிபுண்ணாக் கிலையினோடு
சூளப்பா புளியினிலை இந்தமூன்றுஞ்
சுகமாகத் தட்டியதைத் துணியில்வைத்து
வீளப்பா இல்லையடா கோளங்கட்டி
விதமென்ன தூளதுவும் விராகன்பத்து
பாளப்பா பழம்புளியைக் கரைத்துநீயும்
பாங்கான கண்ணுக்குப் பிழிந்துபாரே. (36)

பாரேநீ பொட்டணத்தைப் பிடிக்கச்சொல்லு
பண்பாக நாலுதர மொருநாள்வாரு
சேரேநீ வார்த்தவுடன் வலிதானிற்குஞ்
சிறப்பாக நாண்மூன்று இந்தப்பாகம்
ஆரேநீ யைந்தாநாள் சொல்லக்கேளு
ஆவரம்பூ தலையிலிட்டு முழுகச்சொல்லு
கூரேநீ கண்ணுவலி யெங்கேபோச்சு
குருவான போகருட கடாட்சந்தானே. (37)

### தந்தவியாதிக்கெல்லாம் பொடி.

தானேதான் தந்தமென்ற வியாதிக்கப்பா
தயவான அரப்பொடியும் பலந்தானென்று
வேணேதான் பீங்கானில் போட்டுக்கொண்டு
விதமாகக் கடுக்காயுந் தான்றிக்காயும்
பாணேதான் மாசக்காய் சீனக்காரம்
பண்பான கடுக்காயின் புளியுங்கூட
மாணேதான் துருசுடனே காசுக்கட்டி
வணக்காக வகைவகைக்கு விராகன்மூன்றே. (38)

மூன்றாக இவையெல்லாம் பொடித்துப்போட்டு
முகைஎலுமிச் சம்பழத்தின் சாறுவிட்டு
நன்றாக வற்றுமட்டும் ரவியில்வைத்து
நலமாக அம்மியிலே யரைத்திடப்பா
பான்றாகப் பழச்சாற்றில் மைபோலாட்டிப்
பண்பாகப் பொடியாக்கி வைத்துக்கொண்டு
கூன்றாக வருதினமும் விளக்கிவாநீ
கொடிதான பல்ரோக மோடிப்போமே. (39)

### பற்புழச்சாக.

போமேநீ இன்னமொரு விவரஞ்சொல்வேன்
பொல்லாத புழுவிருக்கும் பல்லுக்கப்பா
தாமேநீ கன்னியிட நூலைவாங்கித்
தயவாக நூலதனைச் சொல்லக்கேளு
ஆமேநீ கிழ்க்காயி னெல்லிவேரை
அடைவாகக் காப்பிட்டு ஆதிவாரம்
வாமேநீ பச்சரிசி கருப்புக்கட்டி
வைத்துமசி நசியென்று நூறுகூறே. (40)

கூறேநீ நூற்றெட்டுத் தரமுஞ்சொல்லிக்
கூறடா அவன்பேரைச் சொல்லிமைந்தா
பாரேநீ புழுச்செத்துத் தீரவென்று
பண்பாக வேதனையு மற்றுனுஞ்
சேரேநீ பிடுங்கிவிடு மறுநாட்குள்ளே
செத்ததடா புழுவங்கே சேரத்தானும்
வீரேநீ போகரிட கடாட்சத்தாலே
விதமாக இன்னமொன்று சொல்லக்கேளே. (41)

### வாய்ப்புண்ணுக்கு எண்ணெய்.

கேளப்பா வாயெல்லாம் புண்ணேவந்தால்
கெணிதமுட னெண்ணெயொன்று சொல்லக்கேளு
நாளப்பா விளக்கெண்ணெய் படிதானொன்று
நலமாஞ்சங் கஞ்சாறு படிதானொன்று
வீளப்பா பாச்சானை வாட்டித்தண்ணீர்
விதமாகப் படியொன்று அளந்துவாரு
சூளப்பா நீர்ப்பூண்டுச் சாறுநாழி
சுருக்கான கஸ்தூரி மஞ்சள்தானே. (42)

தானான கரியசீ ரகத்திேனாடு
தயவாக வகைவகைக்கு விராகன்மூன்று
கோனான பொடிபண்ணி யிதனிற்போட்டுக்
கொடிதான அக்கினியி லெரித்துவாங்கிப்
பானான எண்ணெயைத்தான் பதத்திற்பார்த்துப்
பண்பாகத் தான்வடித்து எடுத்துக்கொண்டு
நானான படியரைக்கால் வீதங்கொள்ளு
நாள்மூன்று தான்கொள்ள ரணங்கள்போமே. (43)

போயேநீ வாய்ப்புண்ணு வெள்ளைபோகும்
பொங்கமுடன் தடிப்புவகை சிரங்குந்தீருந்
தாமேநீ சூலையென்ற கட்டுந்தீரும்
தயவாகப் பத்தியந்தா னாறுநாளும்
வேமேநீ வெந்நீரு மன்னமாகும்
விதமாக மற்றொன்று மாகாதப்பா
வாமேநீ எழுநாள் முழுகும்போது
வகையாகக் கருக்கொன்று சொல்லக்கேளே. (44)

சொல்லுவேன் குதிரையஸ்தி யோமத்தோடு
சுருக்கான வூஞ்சவிட பட்டைகூட்டி
வெல்லுவேன் கருக்கியதைக் கியாழம்வைத்து
விதமாக வுள்ளுக்குக் கொள்ளச்சொல்லு
கெல்லுவே னுப்பிட்ட பருப்பின்சாறு
கெணிதமுட னீர்விட்டு அமுதுகொள்ளு
மல்லுவேன் மற்றுநாள் புளியைக்கூட்டு
மைந்தனே யெட்டுக்கு மாகாதென்னே. (45)

ஆகாது வாழையிலை வாழைக்காயும்
அப்பனே யிராறு நாள்தான் தள்ளு
வேகாது வாயுவென்ற பதார்த்தந்தள்ளு
விதமான பெண்ணுடைய மாயையாகா
போகாதில் லாவிட்டால் வியாதியப்பா
பொங்கமுடன் தானிருந்தால் பறக்கும்பாரு
நோகாது கிரந்தியெல்லா மகன்றுபோகும்
நோய்தீரும் போகருட கடாட்சந்தானே. (46)

மேகத்தடிப்புப் புஸ்ளிக்கு.

தானென்ற தடிப்புக்குச் சொல்லக்கேளு
தயவான பாச்சானை வாட்டித்தண்ணீர்
பானென்ற படிகால்தான் வடித்துக்கொண்டு
பண்பாக நாள்மூன்று கொடுத்தபோது
கானென்ற தடிப்பெல்லா மோடிப்போகுங்
கனமான புள்ளியென்ற மேகந்தீருங்
கோனென்ற மூன்றுகெடுக் கொள்ளும்போது
கொடிதாக முன்போற்பத் தியமாய்க்காரே. (47)

அரையாப்புக்கு.

காரடா அரையாப்பு வந்தபேர்க்குக்
கருவாக மருந்தொன்று சொல்லக்கேளு
பாரடா கொல்லனென்ற கொவ்வைமூலம்
பண்பாக மேற்றோலை நன்றாய்ப்போக்கி
சேரடா அப்பையிட கொவ்வைமூலஞ்
செயலான வகைவகைக்குப் பலந்தான்ரண்டு
கூரடா கொடிவேலிப் பட்டையப்பா
கொடிதாகப் பலமொன்று போடுபோடே. (48)

போடேநீ நீர்ப்பூண்டு பலந்தான்ரண்டு
பொங்கமுட னிதுவெல்லாம் நறுக்கித்தட்டிச்
சூடேநீ விளக்கெண்ணெய் படிதான்பாதி
சுகமான எள்ளெண்ணெய் படிதான்பாதி
நாடேநீ மிருதாரு சிங்கியப்பா
நாயகனே விராகன்ரண்டு பொடித்துப்போடு
கூடேநீ இவையெல்லா மொருமொரென்று
கூடையிலே இன்னமொன்று சொல்லக்கேளே. (49)

கேளேநீ சூலைவிடக் கருப்புக்கட்டி
கெடியாகப் பலம்ரண்டு சீவிப்போட்டு
வீளேநீ போகாம விறக்கிவைத்து
விதமாகப் பலமலரைதான் கொள்ளச்சொல்லிச்
சூளேநீ யெண்ணெயொரு கரண்டிகொள்ளச்
சுகமாகு மீராறு வேளையப்பா
கோளேநீ வாராமற் பத்யங்கேளு
கொடிதாக உப்பிட்ட பருப்புநெய்யே. (50)

நெய்யப்பா பசுவினெய் வெந்நீராகும்
நேராக அன்னமப்பா மற்றொன்றுகா
மெய்யான எண்ணெயைத்தான் மேலிற்பூசி
மேன்மையா யேழாநாள் நீரைவாரு
வெய்யான புளியுடனே யெல்லாஞ்சேரு
விதமாகக் கட்டியது கரைந்துபோகுஞ்
செய்யான வுரைகண்டால் கிழித்துவார்த்துச்
செப்புமேவன் ரணங்கண்டால் களிம்பைப்போடே. (51)

போடேநீ விளக்கெண்ணெய் முழுகச்செய்வாய்
பொங்கமுட னுள்விட்டு நாள்தானப்பா
நாடேநீ முறையாகப் பத்துநாளும்
நலமாக எண்ணெயைத்தான் முழுதும்போது
கூடேநீ பெண்மாயை யாகாதப்பா
குணமாகி மாசமொன்று செல்லுமட்டும்
ஆடேநீ அரையாப்புத் தீர்ந்துபோகும்
அடைவாகப் போகருட கடாட்சந்தானே. (52)

சகலரணங்களுக்கும் களிம்பு.

தானப்பா களிம்பொன்று சொல்லக்கேளு
தயவான லிங்கமுடன் மிருதார்சிங்கி
ஊணப்பா ரசகர்ப்பூ ரத்தினோடு
உத்தமனே வெள்ளையென்ற குங்கிலயந்தான்
கோணப்பா கடுக்காயும் மாசிக்காயுங்
குணமாங்கா சுக்கட்டி தான்றிக்காயும்
வாணப்பா ஒரெடையாய்க் கல்வத்திட்டு
வகையாகத் தானரைக்க விவரங்கேளே. (53)

கேளேநீ பசுவினிட வெண்ணெய்போட்டுக்
கெணிதமா யொருசாம மரைத்தபின்பு
சூளேநீ தண்ணீரில் மிதக்கவைத்துச்
சுகமாக மற்றுநா ளெடுத்துக்கொண்டு
கோளேநீ சூலையப்பா ரணத்திற்பூசக்
கொடிதான ரணங்களெல்லாம் மாறிப்போகும்
வேளேநீ களிம்பதுவுஞ் சுருக்குமெத்த
விதமாக இன்னமொன்று விளம்பக்கேளே. (54)

விக்கலுக்கு.

விளம்புவேன் விக்கலுக்குச் சொல்லக்கேளு
விதமாகச் சந்தனத்தின் கட்டையோடு
தளம்புவேன் சாம்பிராணி சமனுய்ச்சேர்த்துத்
தயவாகப் பொடிபண்ணிக் காகிதத்தாற்
குளம்புவேன் சுருட்டியதைப் புகைபிடிக்கக்
குணமாக விக்கலது தீரும்பாரு
விளம்புவே னின்னமொன்று சொல்லக்கேளு
விதமாகக் கலிக்கமொன்று சொல்லுவேனே. (55)

அகத்தீசர் கலிக்கம்.

சொல்லுவேன் கிராம்போடு மிளகுசுக்கு
சுகமான துவரையென்ற பருப்புங்கூட்டி
வெல்லுவே னிவையெல்லாம் விராகனென்று
விதமாக அகத்தியனுர் குழம்பைக்கேளு
சொல்லுவேன் விராகனது கால்தான்கூட்டிச்
சுகமான மேனிச்சா றதனுலாட்டி
மல்லுவேன் வெற்றிலையின் சாற்றுலாட்டி
மைந்தனே கயிறதுபோல் வைத்துக்கொள்ளே. (56)

கொள்ளடா முருங்கையிலைச் சாற்றிலதேய்த்துக்
குணமாகக் கண்ணிலே போட்டபோது
மெள்ளடா சந்நிமுதற் பசாசுபோகும்
மேன்மையாய் விஷத்தோடு மயக்கம்போகும்
விள்ளடா போகரிட கடாட்சத்தாலே
விளம்பினேன் புலிப்பாணி விளக்கமாகக்
கள்ளடா மனத்தோர்க்குக் காட்டொணுது
கருவான வைத்தியந்தா னின்னுங்கேளே. (57)

முகசந்நிக்கு எண்ணெய்.

கேளேநீ முகசந்நிக் கெண்ணெயொன்று
கெணிதமுடன் தேங்காய்நெய் படிதூனென்று
சூளேநீ வசம்பினெடு வெள்ளைப்பூண்டு
சுகமாக ஓமமொடு சதமாங்குப்பை
வாளேநீ வகைவகைக்கு விராகன்பத்து
வளமான பெருங்காயம் விராகனென்று
ஆளேநீ மாவிலிங்கம் ஆவின்பட்டை
அப்பனே நொச்சிபெரு மரமுமாமே. (58)

ஆமேநீ பட்டைவகை சொல்லக்கேளு
அடைவாக வகைவகைக்கு விராகன்பத்துத்
தாமேநீ யிவையெல்லா மிடித்துமைந்தா
தயவாகச் சரக்கெல்லாம் பொடியாய்ப்பண்ணி
வேமேநீ யெண்ணெயிலே போட்டுக்காய்ச்சி
விதமான கடுகுபதந் தன்னில்வாங்கிப்
போமேநீ முழுகிடவே பறக்குஞ்சந்நி
பொங்கமுட னுள்விட்டு நாள்தான்மூழ்கே. (59)

சந்நிக்கு எண்ணெய்.

முழுக்கைவிட்டு எண்ணெயொன்று சொல்லக்கேளு
முறிந்தோடுஞ் சந்நியப்பா எண்ணெய்கண்டால்
பழுக்கான வேப்பெண்ணெய் படிதானென்று
பண்பான சிறுபானை தன்னில்வார்த்து
அழுக்கான மயிற்பீலி யிலைதான்பத்து
அப்பனே நறுக்கிநன்று யதனிற்போட்டுச்
சுழுக்கான சூடனொடு சாம்பிராணி
சுக்கோடு திப்பிலியு மரத்தைகூட்டே. (60)

கூட்டப்பா பெருங்காய மோமத்தோடு
குணமான கிராம்பப்பா மிளகுங்கூட
நாட்டப்பா ரசகர்ப்பூ ரத்திேனாடு
நலமான தேசாவரஞ் சதமாங்குப்பை
கூட்டப்பா இவையெல்லாம் பொடியாய்ப்பண்ணிக்
குணமான சீலையிலே முடிந்துகொண்டு
சாட்டப்பா வகைவகைக்கு விராகனென்று
சாதகமா யடுப்பேற்றித் தீயைமூட்டே. (61)

மூட்டப்பா சிறுசட்டி கொண்டுமூடி
முக்கியமாய்க் குப்புறவே மூடவேண்டுங்
காட்டப்பா அக்கினியை யெரித்தபோது
கடிதாக எண்ணெயிலே தீயேபற்றும்
மாட்டப்பா அதையிறக்கி வைத்தபோது
மைந்தனே சுடர்காட்டப் பற்றும்பாரு
மூட்டப்பா சட்டிகொண்டு மூடும்போது
முக்கியமாய் ஏழடங்கிக் கவசமாமே. (62)

ஆமேநீ யடுப்பைமிக அணைத்துப்போடு
அப்பனே யாறவிட்டு இறக்கிவைத்து
தாமேநீ சட்டியிலே வடித்துக்கொள்ளு
தயவாயிஞ் சிச்சாறு படியுங்கால்தான்
வேமேநீ வெள்ளுள்ளித் தயிலமப்பா
விதமாகக் கால்படிதா னளந்துவாரு
போமேநீ அண்டத்தின் தயிலமப்பா
பொங்கமுடன் படிவீச மதிலேவாரே. (63)

வாரேநீ சுக்கப்பா விராகனுறு
        வகையாகச் சலமதுதான் படிதானுறு
சீரேநீ பொடிபண்ணிக் கியாழம்வைத்துச்
        சிறப்பாகக் கால்படிதா னதிலேவாரு
பாரேநீ யொட்டைத்தூள் கழஞ்சியொன்று
        பாங்காக அடுப்பேற்றித் தீயைமூட்டி
கூரேநீ கடுகுபதந் தனிலிறக்கிக்
        குணமாகக் கலசத்தில் வார்த்திடாயே. (64)

வார்த்தவுடன் கணபதியைத் துதித்துநாடி
        வகையாகச் சோடசமுந் தூபஞ்செய்து
பார்த்தவுட னுள்ளுக்குக் கொடுத்தபோது
        பாங்கான சந்நிமுதல் வலிப்புத்தோஷங்
காத்தவுடன் மூன்றுநாள் கொடுக்கும்போது
        காரடா பத்தியந்தா னென்றுமாகா
சேர்த்தவுட னேழாநாள் நீரைவார்த்துச்
        செயலான உப்புமுதல் கூட்டலாமே. (65)

சோகை காமாலை வீக்கம் நீர்க்கோவை இவைகளுக்கு கியாழம்.

ஆமேநீ நீர்முள்ளி கீழ்க்காய்நெல்லி
        அப்பனே வீழிவேர் கொவ்வைத்தண்டு
வாமேநீ பூவரசம் பட்டைகையான்
        வளமான செந்தொட்டி வேரினோடு
தாமேநீ சிறுபூளை வேரினோடு
        தயவாகச் சம்புடைய தளிருமம்பா
நாமேநீ நெருஞ்சில்வேர் சிறுகீரைவேர்
        நன்னிலவா கைஊஞ்சல் பட்டைகேளே. (66)

கேளேநீ ஊஞ்சலென்ற பட்டைகூட்டிக்
        கெணிதமுடன் வகைவகைக்குப் பலந்தானுறு
சூளேநீ சரக்குவகை சொல்லக்கேளு
        சுகமான கடுக்காய்ரோ கணியுங்கூட்டி
வீளேநீ கருஞ்சீர கத்தினோடு
        விதமாகன காட்டுச்சீ ரகமுங்கூட்டிப்
பாழேநீ யில்லைதிப் பிலியுங்கூடப்
        பண்பான வகைவகைக்கு விராகனூறே. (67)

ஆறேநீ யிவையெல்லா மிடித்துத்தோண்டி
அடைவாக ஆறுபங்காய் நிறுத்துக்கொண்டு
ஊறேநீ யொருபங்கு பாண்டத்திட்டு
உத்தமனே நாலுபடி ஜலத்தைவார்த்துக்
கூறேநீ யெட்டொன்றாய்க் குறுகக்காய்ச்சிக்
குணமாகத் தான்பிழிந்து வடிதான்கட்டு
சேறேநீ கொடுத்துவா ஆறுநாள்தான்
செயலான பத்தியந்தா னுப்பாகாதே. (68)

ஆகாத சோகைகா மாலேவீக்கம்
அடைவான நீர்க்கோவை பாண்டுபோகும்
போகாத மகோதரம்பீ லிகையும்போகும்
பொருமலுடன் மேலிளைப்புத் தீர்ந்துபோகும்
நோகாது ஏழாநாள் நீரைவாரு
நுணுக்கமா யுப்பிட்ட பருப்புக்கூட்டு
வேகாது மற்றுநாள் புளியுஞ்சேரு
விதமாக இந்தநோய் தீரும்பாரே. (69)

பித்தவேடிப்புக்கு.

பாரேநீ பித்தவெடி வந்ததானுற்
பாங்கான மருதுடைய இலேயைவாங்கிச்
சீரேநீ பசுவின்பால் தனில்துவைத்துச்
சிறப்பாக மூன்றுநாட் குடிக்கச்சொல்லு
வீரேநீ பத்தியந்தான் பாலுஞ்சோறும்
விதமாக ஏழாநாள் நீரைவாரு
பேரேநீ போகருட கடாட்சத்தாலே
பேதமில்லே புளிப்பாணி பாடினேனே. (70)

நீரிலிரத்தங்கண்டால்.

பாடினே னீர்தனிலே ரத்தம்வீழ்ந்தால்
பாங்காகப் புழுங்கரிசி பலந்தானென்று
கூடினேன் விராலியிலே பலந்தானென்று
குணமாக வரிசியைத்தா னூறவைத்துச்
சாடினே னிடித்தெடுத்துக் கொடுப்பாயப்பா
சார்வாக மூன்றுநா ளாறுவேளே
நாடினே னிந்தவிதங் கொடுத்தபோது
நடுநடுங்கி யோடிவிடுந் திண்ணந்தானே. (71)

முழங்கால் வாதத்திற்கு.

தானென்ற முழங்காலின் வாதத்திற்குத்
தகுவிழி யிலையுடன்புண் ணுக்குப்பூண்டுங்
கோனென்ற ஆவரையி னிலையுங்கூடக்
குணமாக இலைமூன்றுஞ் சமனுய்ச்சேர்த்துத்
தேனென்ற வெள்ளுள்ளிப் பூண்டோமூன்று
தெளிவாகத் தானிடித்து எடுத்துக்கொண்டு
வேனென்ற விளக்கெண்ணெ யொன்றில்விட்டு
விதமாக வேதிட்டுக் கட்டிப்போடே. (72)

போடேநீ யிந்தவித மாறுநாளும்
பொங்கமுடன் வேதிட்டுக் கட்டும்போது
ஆடேநீ முழங்காலில் வாதமெல்லாம்
அகன்றோடிப் போயிவிடு மகனுந்தானே
கூடேநீ நாட்சென்றால் பிடித்துக்கொள்ளுங்
குணமாக மாட்டாது கூர்ந்துபாரு
தேடேநீ போகருட கடாட்சத்தாலே
தெளிவாகப் புலிப்பாணி விளம்பினேனே. (73)

இரணங்களுக்குப் புகை.

விளம்பினே னின்னமொரு கருணவக்கேளு
விதமான ரணங்களென்ற வியாதிக்கெல்லாந்
தளம்புகிறேன் கொழுஞ்சியுட வேரும்படடை
தயவாக ஆறவைத்து நையத்தட்டி
குளம்புகிறேன் சுங்கானில் பட்டையிட்டு
குணமாக லிங்கமப்பா விராகன்பாதி
நளம்புகிறேன் சுங்கான்மேல் வைத்துப்பின்னும்
நலமாக முன்பட்டை நிறையமூடே (74)

மூடியபின் தணலைவைத்துப் புகையைவாங்கி
முக்கியமாய் விழுங்கியதைச் சுவாசந்தன்னில்
நாடியமுன் நாள்மூன்று வேளையாகும்
நலமாகக் குடித்தவுடன் பாற்சோறுண்ணு
தேடியபின் னைந்தாநாட் பத்யமாய்க்காரு
தெளிந்தபின்பு ஆறுநாள் தலையைமூழ்கு
பாடியபின் னேழாநா ளுப்பைக்கூட்டு
பண்பான எட்டாநாள் புளியைச்சேரே. (75)

தீரும்வியாதி.

சேரப்பா கரப்பனென்ற வகைகளெல்லாஞ்
சிறப்பாக ஈராறு நாள்தான்தள்ளு
பாரப்பா கண்ணுவலி கண்ணோயோடு
பாங்கான விப்புருதி கண்டமாலை
வீரப்பா அரையாப்புச் சூலையோடு
விதமான பிளவையொடு லிங்கப்புற்றுக்
கூரப்பா ரணங்களென்ற நோய்களெல்லாங்
கூசாம லோடிவிடுங் கொள்கைபாரே. (76)

வாய்வுக்குத்தலுக்குக் கியாழம்.

பாரப்பா வாயுவென்ற குத்துக்கேதான்
பண்பான கொடிவேலிப் பட்டையோடு
வீரப்பா சுக்குடனே பறங்கிப்பட்டை
விதமான பிரம்பினுட கிழங்குங்கூடச்
சேரப்பா வகைவகைக்கு விராகன்மூன்று
செயலான நாலுபடி ஜலத்தைவிட்டுக்
கூரப்பா எட்டொன்றாய்க் கியாழம்வைத்துக்
கொடுத்தவுடன் வாயுவென்ற மேகம்போமே. (77)

போமப்பா அந்திசந்தி மூன்றுநேரம்
பொங்கமுடன் குடித்துவிட வாய்வுதீரும்
ஆமப்பா பத்தியந்தா னுப்பாகாது
அடைவாக வைந்தாநா ளெல்லாங்கூட்டு
வாமப்பா கொடிவேலி சுக்குங்கூட்டி
வகையாகக் கியாழம்வைத் துண்டபோது
தாமப்பா கொடிவேலி சுருக்குமெத்தத்
தயவாக வாயுவெல்லாங் குணமதாமே. (78)

கிரந்திக்கெண்ணெய்.

குணமாகும் பூசுணிக்காய்ச் சாறுபடிரண்டு
குருவான தாழையுட விழுதுச்சாறு
மணமாகும் கற்றாழை குமிழினசாறு
மைந்தனே நெல்லிக்காய் கையான்சாறும்
வணமாகும் வல்லாரை வில்வத்தோடு
வளமான கொடுப்பையப்பா வீழியோடு
சிணமாகும் ஆதொண்டை இலைநீர்ப்பூண்டு
சிறப்பான அப்பையுட கிழங்குதானே. (79)

தானென்ற பாச்சானை வாட்டித்தண்ணீர்
தயவான சங்கோடு நீர்ப்பூலாவு
மானென்ற தென்னையிட பாளையப்பா
மைந்தனே தக்காளி இலையினோடு
கோனென்ற ஆனையுட நெருஞ்சிலோடு
கொடிதான ஆல்விழுதும் அறுகின்வேரும்
பானென்ற வகைக்குச்சா றுபடியொன்றும்
பாங்கான பாண்டத்தில் விட்டிடாயே. (80)

விட்டவுடன் சாறுவரா மூலியெல்லாம்
விதமாக நீர்விட்டுப் பிழிந்துகொண்டு
சட்டமுடன் அடுப்பேற்றி வற்றக்காய்ச்சிச்
சட்டிதனை இறக்கியபின் சொல்லக்கேளு
கட்டவுடன் இளநீரும் பசுவின்பாலுங்
கருவான பனிநீரும் காடித்தண்ணீர்
குட்டமுடன் கோமயமும் அத்திநீருங்
குணமாக வகைவகைக்குப் படிதான்வாரே. (81)

வாரேநீ இவையெல்லாம் எட்டொன்றாக்கி
வகையாக எண்ணெயப்பா வடிக்கக்கேளு
சீரேநீ சிற்றாம ணக்கின்முத்தைச்
சிறப்பாகக் காடியிலே ஊறவைத்துத்
தீரேநீ பசுவின்பால் விட்டுமைந்தா
திறமாக வேகவைத்து உலரப்போட்டுக்
காரேநீ இளநீரா லெண்ணெயூற்றிக்
கணக்காக ஐந்துபடி எண்ணெய்வாரே. (82)

வார்த்தபின்பு வேறுவகை சொல்லக்கேளு
வகையான நிலப்பனையும் அசுவகெந்தி
காத்தபின்பு நிலக்குமிழுஞ் சித்ரமூலங்
கருவான தாமரையின் கிழங்கினோடு
ஏத்தபின்பு பூமிச்சர்க் கரையுங்கூட்டு
இதமான தத்தியின்வேர் நீர்நெருப்புச்
சேர்ந்தபின்பு வகைவகைக்குப் பலந்தானொன்று
சேர்த்தரைத்து எண்ணெயிலே போட்டிடாயே. (83)

போட்டபின்பு சரக்குகளை சொல்லக்கேளு
பொங்கமுடன் சாதிக்காய் சாதிப்பத்ரி
கேட்டபின்பு லவங்கமதி மதுரமாஞ்சில்
கெணிதமாய் சோம்போடு ஏலமப்பா
மூட்டபின்பு திரிகடுகு திரிபலாதி
முக்கியமாய் வெந்தயஞ்சீ ரகமுமாகும்
நாட்டபின்பு கஸ்தூரி மஞ்சளோடு
நலமாக ரோசனையும் பூரமாமே. (84)

ஆமேநீ வால்மிளகு கசகசாவும்
அடைவான சிறுநாகங் கடுக்காய்ப்பூவும்
வாமேநீ மல்லிகைதா ளிசமாம்பத்ரி
வகையான சிறுலவங்கங் கார்போகந்தான்
தாமேநீ சீனிக்கற் கண்டினோடு
தலையாங்கூ கைநீறு முத்தக்காசும்
ஆமேநீ வகைவகைக்குக் கழஞ்சிமூன்று
அடைவாகப் பொடிபண்ணிப் போட்டிடாயே. (85)

போட்டபின்பு ஆவினெய் படிதானைந்து
பொங்கமுடன் தானளந்து அதனில்வாரு
நாட்டபின்பு பெழுகுபதந் தனிவிறக்கி
நாயகனே கடுகோடே ஒன்றிலூற்றிக்
கூட்டபின்பு கணபதியைப் புகழ்ந்துநாடிக்
குருவினிட தாள்பணிந்து பூசைசெய்து
ஆட்டபின்பு எண்ணெயொரு கரண்டிகொள்ள
அடைவாகப் பத்தியமே யில்லைத்தானே. (86)

தானென்ற வாயினிலே புண்ணினோடு
தயவாய்க்கேள் தடிப்புமுதல் புள்ளிமேகம்
வானென்ற செங்கிரந்தி கருங்கிரந்தி
வளமான பிரமியங்கள் கிரந்திபுண்ணு
கோனென்ற பெருஞ்சிரங்கு சிறுசிரங்கு
கொடிதான மேகமிரு பத்தொன்றும்போந்
தேனென்ற தேகமப்பா அருணன்போலாந்
தெளிவான போகருட கடாட்சந்தானே. (87)

மேகம் 21-தீதும், வாய் நாற்றத்திற்தும், எண்ணெய்.

தானான இன்னமொன்று சொல்லக்கேளு
தயவான விளக்கெண்ணெய் படிதான்ரண்டு
மானாக இளநீரும் பசுவின்பாலு
மைந்தனே சாடியுடன் பொன்னாங்கண்ணி
கோனாக ஆதொண்டை இலைவல்லாரை
குணமான வில்வஇலை அறுகின்வேரும்
வானாகக் கள்ளியையும் வாட்டித்தண்ணீர்
வளமாக நீர்ப்பூண்டு சாணிப்பாலே. (88)

பாலப்பா வகைவகைக்குப் படிதானென்று
பாங்காகச் சரக்குவகை சொல்லக்கேளு
சாலவே வெந்தயஞ்சீ ரகத்திேனாடு
சார்வாகக் கொத்துமல்லி சிறுநாகப்பூ
கோலமுடன் சாதிக்காய் கிராம்புஏலங்
குணமான அதிமதுரம் கூகைநீறுஞ்
சேலமாய்ச் சீனமென்ற காரந்தானுஞ்
செயலான வகைக்குவகை விராகனென்றே. (89)

ஒன்றான இவையெல்லாம் பொடித்துப்போட்டு
உத்தமனே சர்க்கரைதான் பலமோவொன்று
பன்றாகக் காய்ச்சியது மெழுகதானல்
பக்குவமாய்த் தான்வடித்து எடுத்துக்கொண்டு
நன்றாகத் துட்டெடைதான் கொள்ளும்போது
நலமாகு மண்டலத்தில் சூடேதப்பா
வென்றாக மேனியது ஊறம்பாரு
விதமாக வாய்நாற்றம் போகும்பாரே. (90)

நூற்றேகை.

பாரப்பா போகரிட கடாட்சத்தாலே
பண்பான புலிப்பாணி விளங்கத்தானுஞ்
சீராக இன்பமுறுந் திரட்டொன்றப்பா
திறமுடனே நூற்றேடைம் பதுவுஞ்சொன்னேங்
கூறப்பா வாடைபதி னறிற்சொன்னேங்
குருவான ஞானமொடு தொண்ணூற்றாறு
வீரடா சோசியமுந் நூற்றுக்குள்ளே
விளம்பினேன் னேத்திரம்போல் தோணும்பாரே. (91)

எலிக்கடி 18-க்கும்.

பாரேநீ இன்னுமொன்று சொல்லக்கேளு
பதினெட்டு எலிகடிக்கு மருந்தையப்பா
வீரேநீ கரும்பூனை மலத்தைவாங்கி
விதமாகக் கழற்சிக்கா யளவுகாணும்
கூரேநீ யோலையிடக் கருப்புக்கட்டி
குணமாக முள்ளிக்கா யளவுசேர்த்துச்
சேரேநீ மூன்றுநா ளாறுவேளை
செயலாகக் கொண்டிடவே தீரும்பாரே. (92)

பாரப்பா ஆறுநாள் பத்தியந்தான்
பண்பான உப்புமுத லொன்றுமாகா
வீரப்பா ஏழாநாள் தலையைமூழ்கு
விதமாக உப்பிட்ட பருப்புமாகுஞ்
சேரப்பா எட்டாநா ளெல்லாம்கூட்டு
செயலாக நாட்சென்றால் சொல்லக்கேளு
கூரப்பா மூன்றுகெடு கொண்டபோது
குணமாக எலிகடிகள் தீருந்தானே. (93)

பேய், நாய், நரிகடிக்கு, மருந்து.

தானென்ற பேய்நரியாய் கடித்ததானால்
தழைத்தமணித் தக்காளி இலைச்சாறப்பா
பானென்ற படிகால்தான் கொடுப்பாயப்பா
பாங்காக மூன்றுநா ளாறுவேளை
கோனென்ற பத்தியந்தா னுப்பாகாது
குணமாகு மேழாநாள் நீரைவாரு
வேனென்ற பேய்நரிநாய்க் கடிதான்தீரும்
விதமாகு மிதன்றழையை மேலேபூசே. (94)

பூனைக்கடிதீர மூலிகை.

பூசியே பூனையுட கடிதான்தீரப்
புனிதமுள்ள பூனைதொழும் பட்டைவாங்கி
ஆசியே பசுவின்பால் தனிலரைத்து
அப்பனே பத்தியமாய்க் குடிக்கச்சொல்லு
கூசியே முன்போல பத்தியந்தான்
குணமுள்ள நீலிவேர் தனையரைத்து
வாசியே ஈராறு நாளும்பூச
வகையாகப் பூனைகடி தீருந்தானே. (95)

வண்டுக்கடிக்கு மருந்து.

தீருமப்பா வண்டுகடி வந்தபேர்க்குத்
திறமாக மருந்தொன்று சொல்லக்கேளு
மாறுமப்பா வெள்ளாட்டுக்கறுத்தபாலு
மைந்தனே தினையரிசி படிதான்காலு
வீருமப்பா மூலியொன்று அறியச்சொல்வேன்
விதமான ஆடுதொடா மூலிச்சாறு
கூருடனே வேகவைத்து அந்திசந்தி
குணமாகக் கொண்டிடவே தீரும்பாரே. (96)

பாரேநீ சாறதுகாண் படிதான்வீதம்
பண்பான பத்தியந்தா னுப்பாகாது
கூரேநீ வெள்ளாட்டுப் பாற்சோறுண்ணு
குணமாக வுழாநாள் நீரைவாரு
சேரேநீ வசம்புடனே நீலிவேருஞ்
சிறப்பாகத் தானரைத்துப் பூசுபூசு
தீரேநீ வண்டுகடி யெல்லாம்போகுந்
திறமான போகருட கடாட்சந்தானே. (97)

தானேதா னிதுபோல விஷமுமுண்டு
தயவான மேகவகை யிதுபோலுண்டு
கூனேதான் செய்தொழிலு மிதுபோலுண்டு
குடிலமாய்த் தாமரையு மிதுபோலுண்டு
சோனேதா னிதுபோலே தீராவிட்டால்
துணிவாக ரசபதங்கங் கொள்ளச்சொல்லு
ஊனேதான் கண்டுகண்டு மருந்துசெய்நீ
உத்தமனே யில்லையென்று லேய்க்கும்பாரே. (98)

பூரான் கடிதீர.

பாரப்பா பூரான்தான் கடித்தபேர்க்குப்
பண்பான எருக்கம்பூ நரம்பைப்போக்கிச்
சீரப்பா பூவேழு கொடுத்துப்பாரு
சிறப்பாக ஞாளிமலப் புகையைக்காட்டு
கூரப்பா நாட்சென்றால் மண்டலங்கொள்
குணமாகப் பத்தியந்தா னில்லைபாரு
வீரப்பா பூரான்தான் தடிப்புமாறும்
விதமாக அதின்விஷமுந் தீருந்தானே. (99)

செய்யான் பெருச்சாளிக்கடிக்கு.

தானென்ற செய்யான்தான் கடித்தபேர்க்குத்
தயவாகக் கொல்லனிட கோவைமூலம்
பானென்ற பாக்களவு கொள்ளச்சொல்லு
பண்பான மயிற்பீலிப் புகையைப்போடு
கோனென்ற செய்யான்றன் விஷமும்போகுங்
குணமில்லாப்பெருச்சாளிக் கடிதான்தீர
வேனென்ற அறுகம்வேர் வெள்ளிதன்னில்
விதமாகக் குடித்தவுடன் தீர்ந்துபோமே. (100)

தேள்காலி விஷந்தீர மூலிகை.

போமப்பா தேள்காலி கடித்தபேர்க்குப்
பொங்கமுடன் பெரியநங்கை வேரைத்தானும்
வாமப்பா நீரிலே உரைத்துப்பூச
வளமாக மட்டிப்பால் புகையைப்போடு
ஆமப்பா கடுகடுப்பு அடங்கிப்போகும்
அப்பனே தேள்காலி விஷமுந்தீரும்
நாமப்பா போகரிட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (101)

சகலவிஷங்களுந்தீர மருந்து.

பாடியதோர் விஷங்களெல்லாந் தீரவேதான்
பண்பாக எட்டியதின் பழத்தைவாங்கி
கூடியதோர் சட்டியிலே வேணமட்டுங்
குணமாக எடுத்துவேப் பெண்ணெய்விட்டு
நாடியே அடுப்பேற்றி வேகவைத்து
நலமாக உருட்டியதைச் செப்பில்மூடி
தூடியே விஷத்தீண்டி வந்தபேர்க்குத்
தூதுவளங் காயளவு கொடுத்திடாயே. (102)

விஷத்திற்கு நசியம், கலிக்கம்.

கொடுத்திடவே விஷத்துக்கு நசியமொன்று
குணமாக நீலமென்ற துருசைவாங்கி
அடுத்திடவே விராகனரை துணியில்வைத்து
அடைவாகச் சிறுநீரால் நசியம்பண்ணு
எடுத்திடவே விஷமெல்லா மிறங்கிப்போகும்
இதமான கலிக்கமொன்று இயம்பக்கேளு
தொடுத்திடவே சிறுபூளை கசக்கிக்கண்ணில்
தோற்காமல் சிங்கென்று கொட்டிப்போடே. (103)

சிறு பாம்புகடிக்கு மருந்து.

போடப்பா சிறுபாம்பு கடித்தபேர்க்குப்
பொங்கமுடன் சிறுகுறிஞ்சான் வேரைவாங்கி
நாடப்பா வெந்நீரா லரைத்துக்கொண்டு
நலமாக அந்திசந்தி மூன்றுநாளுண்
வாடப்பா பத்தியந்தா னுப்பாகாது
வளமான ஏழாநாள் சலத்தைவாரு
சாடப்பா சிறுபாம்புத் தடிப்புமாறுஞ்
சார்பாகப் போகரிட கடாட்சந்தானே. (104)

குஷ்டத்திற்கு மருந்து.

தானென்ற குஷ்டநோய் வந்தபேர்க்குத்
தயவாக மருந்தொன்று சொல்லக்கேளு
ஊனென்ற செவ்வலரி வேரையப்பா
உலரவிட்டுக் குழித்தயில மாகவாங்கிப்
பானென்ற குப்பிதனி லடைத்துக்கொண்டு
பண்பாகச் சிறுதுச்சி தயிலத்திட்டு
ஏனென்ற ஒருதுளித்தண் ணீரிற்குத்தி
இதமாகத் தான்கலக்கிக் கொடுத்திடாயே. (105)

கொடுத்திடப்பா நாள்மூன்று காலைவேளை
குருதியப்பா வடியுமடா ரணங்கள்தோறும்
அடுத்திடப்பா பத்தியந்தா னுப்பாகாது
அடைவாக ஏழாநாள் நீரைவாரு
விடுத்திடப்பா உப்பிட்ட பருப்புக்கூட்டி
விதமாக மற்றுநாள் புளியைச்சேரு
எடுத்திடப்பா குஷ்டநோய் தீர்ந்துபோகும்
இதமான போகரிட கடாட்சந்தானே. (106)

மருந்திட்டுக்குச் சிட்சை.

தானாக இன்னமொன்று சொல்லக்கேளு
தயவாக மருந்திடு கொண்டபேர்க்குக்
கோனாக எண்ணெயிட்டு முழுகச்சொல்லிக்
குணமாக ரசம்விட்டு அன்னமீந்து
வேனாகத் தேங்காயின் பாலைவாங்கி
விதமாகக் கரும்பாலைச் சர்க்கரையுஞ்சேர்த்து
வானாகத் தேங்காயின் பாலையுண்டு
வகையாகக் கம்பளமேல் படுக்கச்சொல்லே. (107)

சொல்லப்பா முருங்கையென்ற இலையைவாங்கிச்
சோரவே வதக்கிச்சாற் றைப்பிழிந்து
அல்லப்பா சாறுபடி காலேயாகும்
அடைவாக ஆவின்பால் நேரேசேர்த்து
அல்லப்பா காலமே கொடுத்தபோது
அடைவாகப் பேதியிலே மருந்துவிழும்
நல்லப்பா விழுந்தவுடன் ஸ்நானம்பண்ணு
நலமாக வேணதெல்லாங் கூட்டிக்கொள்ளே. (108)

நஞ்சுண்டவர்க்கு.

கொள்ளவே நஞ்சுதின்ற பேர்கட்கெல்லாங்
குணமாக நீலிவேர்ப் பட்டைதன்னை
அள்ளவே காடியிலே அரைத்தூட்ட
அடைவாக நஞ்சுகக்கி மயக்கம்வாங்கும்
மெள்ளவே ஊனேறி யழிக்கவேண்டி
மேன்மையாய்ச் செந்தினையை இடித்துமாப்போல்
தள்ளவே பூநீரு படிதான்போட்டுத்
தயவாக நீருபடி யொன்றுவாரே. (109)

வாரப்பா படிகால்தான் வாங்கிக்கொண்டு
வகையாக முன்னீரில் பிசைந்துபின்பு
தாரப்பா அந்திசந்தி மறுநாளென்று
தான்கொடுக்க ஊனேறி அழிந்துவிழுங்
கூரப்பா இந்நீரை மூன்றுநேரங்
குறிகண்டால் மாவப்பா கொடுக்கப்போகா
சேரப்பா இந்தரிசி சஞ்சிவைத்துச்
சிறப்பாகக் கருப்புக்கட்டி போட்டுக்கொள்ளே. (110)

கொள்ளவே வச்சிநீ ரதிகங்கண்டாற்
குணமான வேம்பின்பட்டை நனைத்துவைத்து
நள்ளவே மோருவிட்டுப் பிழிந்துகொண்டு
நலமாக ஒருநாளி லாறுவேலே
மெள்ளவே கொடுத்துவிட உதிரம்நிற்கும்
மேன்மையா யாறுதிங்க ளப்பாகேளு
தென்ளவே வைத்தியந்தா னெவருஞ்சொல்லார்
சீருடனே செப்பிவிட்டே னுண்மைவையே. (111)

வையப்பா கிளத்திரியங் குரியைநாட்டி
வகையாகச் சுற்றியங்கே பார்க்கும்போது
ஐயப்பா உந்தியிட பள்ளம்போலே
அடைவாகக் குழியொன்று இருக்கும்பாரு
வையப்பா ஊனேறிக் குழிநான்மூடி
வகையாகத் தானிருக்கு மறிந்துபார்த்துக்
கையப்பா தோபநசி யுடன்குச்சிட்டுக்
கணக்காக நெல்நீளம் வைத்துப்பாரே. (112)

பாரப்பா வச்சிநீ ராகுமட்டும்
பண்பாக இம்முறைபோற் பாங்காய்ச்செய்நீ
சேரப்பா ஒருநாளின் முழுதுந்தானும்
செயலாக விடியுமட்டு மிந்தப்பாகம்
வீரப்பா சுரங்காணும் வலியுங்காணும்
விதமான தலைவலியு மிகவேதோணும்
கூரப்பா பச்சினியா றுலுந்தானும்
குணமாகக் கழிந்துவிடுந் திண்ணந்தானே. (113)

தானப்பா நிலப்பயிரை விதைத்துத்தானும்
சம்பமுடன் கெச்சணிக்க வேணுமென்றால்
மானப்பா சூதச்செம் பாகுங்காலம்
மைந்தனே கெச்சணிஊ னேறியில்லை
வீணப்பா யிதுவறிய மாட்டாமல்தான்
விதமான சென்னிவலை யுடையும்பாரு
ஊணப்பா இதுவல்லோ புண்யம்புண்யம்
உத்தமனே யறிவால்நீ யறிவாய்தானே. (114)

பார்வைக்குக் குளிகை.

தானென்ற பார்வைக்குக் குளிகைசொல்வேன்
தயவாப்புண் ணாக்கிலையும் வீழியோடு
மானென்ற ஆவரையுஞ் சந்தகோவை
மைந்தனே சின்னியொடு முட்டைநாறி
வானென்ற நிலவாகை இராசகனிவித்து
வளமான முசல்காது வாகையப்பை
கோனென்ற கோழியுட அவரையப்பா
குணமான அறுகம்புல் தக்காளிதானே. (115)

தானப்பா வேலியென்ற பருத்திகூட்டித்
தயவான மிளகாயி னிலையுஞ்சேர்த்துப்
பாரப்பா பெருமருந்தி னிலையுங்கூடப்
பண்பான தோதகத்தி மேனியப்பா
ஆணப்பா இலுப்பையுட இலையுங்கேளு
அடைவாக வகைவகைக்கு விராகனைந்து
ஊணப்பா பெருங்காயம் விராகனைந்து
உத்தமனே சீனமது விராகனஞ்சே. (116)

அஞ்சப்பா யிவையெல்லா மரைக்கும்போது
அடைவாக எலுமிச்சம் பழச்சாறிட்டு
மஞ்சப்பா நாற்சாம மரைக்கும்போது
மைந்தனே மெழுகுபோ லிருக்கும்பாரு
தஞ்சமாய்க் குளிகையப்பா கழஞ்சுவீதம்
தான்சேர்த்து நிழலுலர்த்திப் பதனம்பண்ணு
வஞ்சமில்லா மந்திரமா யிரந்தானோதி
வகையாகத் தேவிக்குப் பூசைசெய்யே. (117)

தேவிக்கு ஏகழலம்.

செய்யவே மந்திரந்தான் அம்-உம்-ஓமென்று
செப்படா மம்மோடே றீயுஞ்சேரு
பெய்யவே ஸ்ரீமுடனே சிங்குவங்கு
பண்பாக ஆயிரத் தெட்டேயோது
நையவே பார்வையுடன் சூனியங்கள்
நன்றாகத் தீர்ப்பதற்குக் குளிகையொன்று
உய்யவே அப்பையுட சாற்றிற்கொள்ளு
உறவான தேங்காயின் பாலிற்கொள்ளே. (118)

சூனியந்தீரப் புகை.

கொள்ளப்பா மஞ்சளை நீ யரைத்துப்பூசி
குணமான வெந்நீரில் ஸ்நானம்பண்ணு
அள்ளப்பா புகையொன்று சொல்லக்கேளு
அடைவான எட்டிவிதை எட்டிப்பட்டை
கள்ளப்பா செக்கடிக்கீழ் மண்ணும்மஞ்சள்
கனிவான கொட்டைவிரைத் தூளுங்கூட்டி
உள்ளப்பா மாவிலிங்கம் ஆலின்பட்டை
உத்தமனே வேம்பின்மேல் காக்கைக்கூடே. (119)

கூட்டேநீ ஆமையிட ஓடுங்கூடக்
குணமான குதிரையுட குளம்புங்கூட்டி
ஆட்டேநீ பாம்பின்றோல் தீட்டுச்சீலை
அடைவாகக் காக்கணம்பூ சிறுகீரைவேர்
நாட்டமாட் டுக்கொம்பு மூஞ்சூறுத்தோல்
நலமில்லாக் கம்பிளியு முசுறுமுட்டை
சாட்டேநீ இவையெல்லாம் நன்றாய்ச்சேர்த்துச்
சார்வாகத் தானிடித்து எடுத்துக்கொள்ளே. (120)

கொள்ளப்பா இந்தஎடை குங்கிலியங்
கொடிதாகத் தானிடித்து எடுத்துக்கொண்டு
மெள்ளப்பா புகைபிடிப்பாய் அந்திசந்தி
மேன்மையாய் மதியமென்ற வேளைமூன்றும்
தள்ளப்பா ஏவலென்ற குணங்கள்யாவுந்
தருவான புகைபில்லி ஆங்கைவைப்பு
விள்ளப்பா சக்கரங்கள் ஓலைவிட்டால்
விதமான வேர்பிடுங்கல் தீருந்தானே. (121)

பிரமைக்கு அண்டபற்பம்.

தானென்ற பிரமையது கொண்டபேர்க்குத்
தயவாக மருந்தொன்று சொல்லக்கேளு
கோனென்ற போகரிட கடாட்சத்தாலே
குணமாகப் புலிப்பாணி விளங்கச்செய்தேன்
ஊனென்ற கபாலத்தை எடுத்துவந்து
உத்தமனே எலுமிச்சம் பழச்சாற்றாலே
நானென்ற சீனமதைப் பொடித்துப்போட்டு
நலமான கல்வத்தி லரைத்திடாயே. (122)

அரைத்தெடுத்து வில்லைதட்டி யுலரப்போட்டு
அடைவாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளு
விரைத்தவுடன் பொடியாக்கிப் பதனம்பண்ணி
விதமாக விராகனெடை கொடுக்கக்கேளு
உரைத்தவுடன் கத்தபத்தின் வாலையப்பா
உறவாகத் துட்டெடைதா னிரண்டேயாகும்
குரைத்தவுட னிஞ்சிச்சா றதனிற்பாதி
குணமாக விதனோர்சர்க் கரையுங்கூட்டே. (123)

கூட்டப்பா ஈராறு நாளேகொள்ளக்
குணமாக அந்திசந்தி யிந்தப்பாகம்
ஆட்டப்பா நசியமது தும்பைச்சாறு
அடைவாகத் தான்விட்டுச் சொல்லக்கேளு
சூட்டப்பா பேய்ப்பீர்க்குப் பேய்மிரட்டி
சுகமான பேய்ப்புடலும் பேய்க்குமட்டி
நாட்டப்பா பேயத்தி பேயாந்தும்பை
நலமான எலுமிச்சம் பழமுமாமே. (124)

ஆமேநீ யிச்சாற்றைத் தேய்த்துத்தேய்த்து
அடைவாக நூறுகுடஞ் சலத்தைவாரு
தாமேநீ யீராறு நாள்தான்வாரு
தயவாகப் பத்தியந்தான் சொல்லக்கேளு
வாமேநீ பச்சரிசி பருப்பினோடு
வளமாகத் தான்கொடுப்பா யுப்பாகாது
ஆமேநீ தேவரொடு பிரமைபித்தம்
அடைவான வஞ்சனையுந் தீருந்தானே. (125)

கிரகசாரத்துக்கு.

தீருமப்பா சாந்தியொன்று சொல்லக்கேளு
திட்டமாய்க் கிரகமென்ற சாரந்தீரச்
சாருமப்பா பனிரண்டு ராசியோர்க்குச்
சகலமுமாங் கிரகங்க ளிருக்கும்பாரு
வீருமப்பா வீடடைத்துத் தகடுதன்னில்
வீதமாய்க் கும்பம்வைத்துச் சோடசஞ்செய்
கூருமப்பா ஓமமுதல் சாந்திக்கெல்லாம்
கூறுவோ மந்திரத்தைச் சொல்லக்கேளே. (126)

நவக்கிரகத்தியானம்.

கேளேநீ நவக்கிரகத் தியானஞ்சொல்வேன்
கெணிதமுடன் அம்ஸ்ரீயும் சம்ஸ்ரீயும்
ஆளேநீ ஸ்ரீதசிஸ்ரீ மசிஸ்ரீஉம்கிலி
அடைவாக காயுச்சறீநசி அங்கிஷநசியென்று
நாளேநீ ஆயிரத்தெட் டுருவையோதி
நலமாகச் சாந்திசெய்து மருந்தையூட்டு
கேளேநீ கடுவிஷங்க ளெல்லாம்போகுங்
கெடிதான அசாத்யமென்றுஞ் செய்யொணுதே. (127)

செய்யாதே பொய்கோபங் கொலைதிருட்டுச்
செயலான வைத்தியங்கள் செய்யும்பக்கம்
வையாதே பெண்களுடன் சேர்ந்திடாதே
மையல்மிகக் கொள்ளாதே கிருதுசெய்யேல்
வையாதே அவரிடத்தில் வீண்பேசாதே
வகையாக வல்வசையே சொல்லிடாதே
பையாதே தேகமதில் தேனையுண்டு
பண்பான வண்டதுபோல் பொருளைச்சாரே. (128)

சூனியத்திற்கு எண்ணெய்.

சாராதே சூனியங்கள் தீர்க்கஎண்ணெய்
சாற்றுகிறேன் கடுதுருத்தி தவமுருங்கை
வீராதே முயற்காது செந்நாயுருவி
விளையாகுங் கோவைமிள குத்தக்காளி
சீராதே நாய்ப்பாகல் வட்டத்துத்தி
சிறப்பான அசுவகெந்தி சிறுகீரைசூரி
மீராதே நிலவாகை நன்னாரிப்பாலை
மிதமாக வேர்பலங்கால் செப்பினேனே. (129)

செப்புநெருஞ் சியுமுருங்கை வாகையோடு
செழித்திருக்கும் முட்டியுடன் தாமக்கொவ்வை
கப்புவே பேய்ப்பருத்தி கண்டங்கத்ரி
கடியமரு ளூமத்தை பேய்ப்பீர்க்கப்பை
வெப்பகல வருமேனி பெருந்தக்காளி
வேடிதமாஞ் சின்னியிலை இவையின்சாறும்
அப்புமிகு வகைக்குவகை படியதாக
அளந்துவிட்டு எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கே. (130)

குறுக்கியே எள்ளெண்ணெய் நாழிவிட்டுக்
கூறியமுன் வேரின்வகை சூரணித்து
திருக்கியே யலைத்ததிகைப் பூண்டுமூன்று
துணியும்வவ்வால் தோல்பல மரைக்கால்சேர்த்து
முறுக்கியே வேம்பாடம் உள்ளியோமம்
முனையான கருஞ்சீர கமுங்கிராம்பு
பெருக்கியகா யங்கோஷ்டஞ் சாதிப்பத்ரி
பேணுங்கோ ரோசனையு முனையாய்க்கூட்டே. (131)

முனையாக வகைக்கரைக்கால் பலமதாக
மூட்டியிடி சூரணமும் பொடியுமொன்றாய்
வினையறுக்கு மெண்ணெயிலே பொடியும்போட்டு
விரவிவெந்து மெழுகுபதந் தனில்வடித்து
எனையாளுங் கணபதிக்கு மலருஞ்சூட்டி
யெழுபழங்காய் தட்சணையும் வைத்துப்போற்றிப்
பனையவே தேகமதில் துவாலைபோட்டால்
பறக்குமே சூநியங்கள் பகரக்கேளே. (132)

கேளேநீ முகமாறு மாம்சந்தோற்றல்
கெடியம்பு தான்றெரிதல் முட்டுச்சூன்யம்
நீளேநீ பாவமுட்டு விளக்கெரித்தல்
நிலையாணி முளையடித்தல் அட்டைதைத்தல்
சூளேநீ பெண்கட்டு ஆணிக்கட்டு
சுருக்காக அனலெரிவு குடல்கள்வெப்பு
வாளேநீ கம்பியொடு சூஸ்திரங்கள்
வட்டதில தம்மெதிரேற் றுஞ்சூனியமாமே. (133)

சூனியமாங் கட்டையிலே பதலிபாம்பு
சுணங்குடனே பச்சோந்தி விரியன்பல்லி
வானியமாப் புலிமுயல்கள் கழுதைப்பன்றி
வலுமுதலை நரியுடும்பு தவளைமீன்கள்
ஈனியானை எலிபட்சி தலையில்வைத்து
இதமாக ஈமமொடு சந்திபாதை
கானியா மோலைமுதல் சக்ரம்வாட்டுக்
கடுப்பெதிரே வைத்திடுசூ னியமும்போரே. (134)

போரான நரம்புசுற்றி யுடம்பெரிவுதானும்
பொலிவுடனே விகாரமுடன் ரத்தம்விக்கல்
நேரான பாவைசெய்து முடங்களாக்கி
நிலையாத பிரமையொடு மயக்கஞ்செய்தல்
மாரான கண்படலங் கண்டமாலை
மதிகெட்ட விப்புருதி மாருட்டங்கள்
வீரான கொடிமரங்கள் பாவைவைப்பு
வெடிமலங்கள் வஞ்சனைசூ னியமும்போமே. (135)

மூலரோகத்துக்குச் சூரணம்.

போமேநீ மூலமென்ற ரோகந்தீரப்
பூட்டுகிறேன் மருந்தொன்று சொல்லக்கேளு
ஆமேநீ தூதுவளை மூலத்தோடு
அடைவான மருட்கிழங்கு கருணைமூலம்
தாமேநீ பிரண்டைவேர் நல்லஆரை
தயவான காட்டுடைய கருணைமூலம்
வாமேநீ மிளகருணை மூலந்தானும்
வளமான அறுகினிட கிழங்குதானே. (136)

தானென்ற நீர்ப்பூண்டு கிளங்குமூலி
தயவாக உரலிலிட்டுத் தூளாச்செய்து
கோனென்ற பொடியெல்லாஞ் சமனுய்ச்சேர்த்துக்
கொடுப்பாயே விரற்கடைதான் தேனிற்கொள்ளே
நானென்ற நாற்பதுநாள் கொள்ளும்போது
நடுநடுங்கி மூலமெல்லாம் ஓடும்பாரு
வானென்ற போகரிட கடாட்சத்தாலே
வளமான புலிப்பாணி விளம்பினெனே. (137)

கிரந்தி அரையாப்புக்கு எண்ணெய்.

விளம்புகிறே னெண்ணெயொன்று 'சொல்லக்கேளு
விதமான சங்கோடு சங்கங்குப்பி
விளம்புகிறேன் கருநொச்சி சுடுதரத்தி
விதமான வெள்ளறுகு சின்னியோடு
தளம்புகிறேன் கிரந்திநா யகமுங்கூட
தயவான பூவரசம் பட்டையோடு
குளம்புகிறேன் பாச்சாளை வாட்டித்தண்ணீர்
குணமான நீர்ப்பூண்டுச் சாறுவாரே. (138)

வாரப்பா வகைவகைக்குப் படிதான்வீதம்
வகையாக அளந்துவிட்டு எண்ணெய்நாழி
சேரப்பா ஒருநாள்தான் ரவியில்வைத்துச்
சிறப்பாக மற்றுநா ளனலேமூட்டு
மாரப்பா எட்டொன்றுய்க் காயும்போது
மைந்தனே சரக்குவகை சொல்லக்கேளு
கூரப்பா பரங்கியிட பட்டைதானுங்
குணமான கருஞ்சீரங் கார்போகமே. (139)

ஆமேநீ கஸ்தூரி மஞ்சளோடு
அடைவான வசம்புடனே வெள்ளைப்பூண்டு
தாமேநீ வகைவகைக்கு விராகனைந்து
தயவாக எண்ணெயிலே பொடித்துப்போட்டு
வாமேநீ மெழுகுபதந் தனில்வடித்து
வகையாகப் படியரைக்கால் கொள்ளச்சொல்லு
போமேநீ மூன்றுநாள் கொண்டபின்பு
பொலிவான பத்தியந்தா னூறுநாளே. (140)

நாளான எழாநாள் தலையைமூழ்கி
நலமான வுப்பிட்ட பருப்பைச்சேரு
கோளான நாற்பதுநாள் கடுகைநீக்கு
குணமான வாழையிலே வாழைக்காயுந்
தேளான கரப்பனென்ற எல்லாந்தள்ளு
தெளிவான பெண்மயக்கஞ் சற்றுமாகா
பாழான கிரந்தியரை யாப்புச்சூலை
பண்பாக மேகமெல்லாந் தீருந்தானே. (141)

பிரமனுக்கும், வாசவனுக்குஞ்சாபம்.

தானான முன்யுகத்தில் பிர்மாவுக்குத்
தாயான பார்வதியாள் தந்தசாபம்
கோனான தண்டாயு தம்பூசித்துக்
கொடிதான சாபமது நிவர்த்தியாச்சு
தேனான திரேதா யுகத்திலப்பா
தேவேந்த்ர னுக்குத்ரு வாசர்சாபம்
மானான தேவர்கோன் பூசைசெய்து
மைந்தனே முனிசாபந் தீர்ந்துபோச்சே. (142)

கற்சிலை.

போனபின்பு சொக்கலிங்கந் தனையர்ச்சித்துப்
பொன்னுலகில் தேவேந்த்ரன் பட்டமாச்சு
ஆனபின்பு துவாபுரியில் போகநாதர்
அடைவான கற்சிலையில் அம்மனென்று
கோனபின்பு கொங்கணருங் கருவூராரும்
கூட்டிவந்து முன்விட்டா ரையன்முன்னே
கோனபின்பு கற்சிலையைச் சேர்ந்தபோது
சிந்தைதனிற் சிலையென்று அறிந்திட்டாரே. (143)

அறிந்தபின்பு அச்சிலையைப் பார்த்துஅம்மா
அபசார மடியேற்கு நிவிர்த்தியென்ன
வறிந்தபின்பு சிவகிரியில் தண்டபாணி
மன்னவரைப் பூசிக்க நிவிர்த்தியாகும்
புரிந்தபின்பு தேவியென்ற சிலைதான்சொல்லப்
போகருமே துவாபுரியில் பூசைசெய்தார்
சரிந்தபின்பு அபசாரம் நிவிர்த்தியாச்சே
சார்வான கலியுகத்தில் சொல்லக்கேளே. (144)

கேளேநீ கலியுகத்தில் இருநூற்றைந்தில்
கேசரிபோல் புலிப்பாணி பேரும்பெற்றேன்
சூளேநீ சலந்திரட்டிக் கரத்திலேந்தி
சுகமாக வேங்கையின்மேல் ஏறிச்சென்று
நாளேநீ சிவகிரியில் தண்டபாணி
நாதரடி பூசித்து அருளைப்பெற்று
ஆளேநீ போகரிட குகைமேலையா
அஷ்டசித்தி பதிதனிலே வாழ்ந்தேன்பாரே. (145)

மேருக்கு வடக்குமனிதர்.

பாரேநீ யுகந்தோறும் சொல்லக்கேளு
பண்பான மேருவுக்கு வடபாகத்தில்
தீரேநீ மனிதரப்பா தங்கவண்ணம்
திகழ்மதியா முயரமப்பா சொல்லக்கேளு
வாரேநீ நாலாயிர முளமேயாகும்
வளமான ஆலங்க னியும்நீரோடே
சீரேநீ அருந்துவது அதுதானப்பா
சிறப்பான சதாசிவமே தெய்வந்தானே. (146)

தானாகும் வயததுதான் நாலுலட்சம்
தாயாகச் சத்தியத்தைக் கைவிடாதார்
கோனான பொய்யொன்றுஞ் சொல்விடாதார்
குவலயங்கள் கைலையல்லால் வேறொன்றில்லை
சேனான மேருவுக்கு வடபாகத்தில்
செயலான மனிதரிட செய்கையப்பா
தேனான போகரிட கடாட்சத்தாலே
தெளிவாகப் புலிப்பாணி விளம்பினேனே. (147)

விளம்புகிறேன் மேருவுக்குக் கிழக்கேயப்பா
விதமான மனிதர்கள்தாம் நீலவண்ணம்
தளம்புகிறே னுயரமது நானூறுகும்
தயவாக நவ்வலங் கனிநீரோடே
கிளம்புகிறே னருந்துவது இதுதானப்பா
கிருபையுள்ள விஷ்ணுவுமே தெய்வமாகும்
நளம்புகிறேன் வயததுதா னிரண்டுலட்சம்
நலமில்லா அசத்தியங்க ளில்லேத்தானே. (148)

இல்லான மேருவுக்கு மேற்கேயப்பா
இருப்பார்கள் மனிதரப்பா ரத்தவண்ணம்
வல்லான வயதுமது நாற்பதாகும்
வகையான மாங்கனியு நீருமாக
எல்லாரு மருந்துவது இதுதான்பாரு
இதமான பர்ாசத்தி தெய்வமாகும்
சல்லான வயதுதான் லட்சமாகும்
சார்வாசத் தியமுரைப்பர் பொய்சொல்லாரே. (149)

பொய்யில்லே மேருவுக்குத் தெற்கேஐயா
பொங்கமுடன் மனிதரிட நிறத்தைக்கேளு
மையில்லா நிறமதுதான் அந்தவண்ணம்
மைந்தனே யுயரமது முழந்தானுலு
செய்யில்லா அறுசுவையு மநேகவர்க்கஞ்
செயலான அந்தமொடு சருகுநீரும்
எய்யான பாலோடு கிழங்குகாய்கள்
இதமான அமுதமது கொள்வாருண்டோ. (150)

உண்டான அநேகவித தெய்வமுண்டு
உத்தமனே சாஸ்திரங்க ளநேகமுண்டு
பண்டான பொய்க்கொலேயுங் களவுமுண்டு
பண்பில்லா விசுவாசம் பாவமுண்டு
செண்டான முறைமைகெட்டு மையல்கொண்டு
செயலான பாக்கியமும் வறுமையுண்டு
கொண்டான வயதுதா னூறென்பார்கள்
கொற்றவனே நிச்சயந்தா னில்லேத்தானே. (151)

தானென்ற கோயில்குளம் ஆறுமுண்டு
தயவான புண்ணியமும் பாவமுண்டு
மானென்ற சித்தரென்றும் முனிவரென்றுந்
மகிமையாந் தபோதனர்கள் பெரியோரென்றும்
கோனென்ற வரசரென்றும் குருக்களென்றும்
கொடிதான பிர்மலபி கடந்தோரென்றும்
வானென்ற கிரகங்கள் நோய்களென்றும்
வகைவகையாய்ப் பலசாதி யநேகந்தானே. (152)

தானான போகரிட கடாட்சத்தாலே
தயவாகப் புலிப்பாணி விளக்கஞ்செய்தேன்
வீணாக அவரவர்கள் செய்தகர்மம்
விளைந்ததடா நோய்போல அநேகங்கோடி
கோணாக வந்தகர்மந் தீரவேண்டிக்
குணமாகத் தானதர்மஞ் செய்யவேண்டும்
தேனாகத் தருமங்கள் செய்யாவிட்டால்
தேகமது நோயிட்ட பாண்டமாமே. (153)

மருந்தீடுமுறிய.

ஆமேநீ மருந்திடு முறியவேண்டில்
அப்பனே இலவினிட பட்டைகொண்டு
தாமேநீ யெலுமிச்சங் காயின்சோடு
தயவாக அரைத்துக்கா டியிற்கலக்கி
வாமேநீ துட்டெடைசர்க் கரையுங்கூட்டி
வளமாகக் கொடுத்தவுடன் மயக்கந்தீரும்
போமேநீ பெண்மயக்கம் ஆண்மயக்கம்
போச்சேநீ மூன்றுநாள் கொடுத்தபோதே. (154)

சூலைக்கு.

போதேநீ சங்கம்வே ரிழைத்தரைத்துப்
பொங்கமுடன் புன்னைக்காய் வீதமாக
சூதேநீ யில்லையடா காடியிற்கொள்
சுருக்கான மண்டலத்தில் வியாதியெல்லாம்
ஊதேநீ யோடிவிடும் நாடுவிட்டு
உத்தமனே பத்தியந்தா னில்லையப்பா
தாதேநீ வெள்ளாட்டு அமுரியிற்கொள்
சார்வான சூலையது தீருந்தானே. (155)

### கர்ப்பழண்டாக எண்ணெய்.

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு
தயவான வீழியிலைச் சாறுநாழி
மானேதான் தைவேளைச் சாறுநாழி
மைந்தனே பிரமியிலைச் சாறுநாழி
கோனேதான் * கொட்டையிலைச் சாறுநாழி
கொடிதான நிலவாகைச் சாறுநாழி
தேனுதா னுவின்பால் படிதானுழி
தெளிவாகச் சரக்குவகை செப்பக்கேளே. (156)

கேளேநீ மஞ்சளுடன் கடுகுகூடக்
கெணிதமுட னிந்துப்பு வெண்காரந்தான்
நாளேநீ கடுக்காயும் வெள்ளைப்பூண்டு
நலமான ஆண்வசம்பு சுக்குங்கூட
பாளேநீ வகைவகைக்கு விராகன்மூன்று
பண்பாகப் பொடிசெய்து இதனிற்போட்டுக்
கோளேநீ விளக்கெண்ணெய் நாழிவிட்டுக்
கொடிதாக மெழுகுபதந் தன்னில்வாங்கே. (157)

வாங்கியே கணபதிக்கு முன்னேவைத்து
வகையாகச் சோடசங்கள் செய்தபின்பு
பாங்குடனே மாதவிடாய் மூன்றும்நாள்தான்
பண்பாகத் தலைமுழுகிக் கரண்டிஎண்ணெய்
தாங்கியே கொடுத்துவிடு நாண்மூன்றப்பா
தயவாக மறுபத்ய மொருநாட்காரு
தூங்கியே திரியாதே ஐந்தாநாளில்
துருசாகச் சிரசுக்கு நீரைவாரே. (158)

வாரேநீ வறுத்தவுப்பு பொரிச்சாரப்பா
வளமாக மற்றுநா ளெல்லாஞ்சேரு
தீரேநீ மற்றுநாள் நசியமொன்று
தீர்க்கமாய் வேலியிலை வேரைத்தட்டிக்
கூரேநீ வலதுநா சியிற்பிழிந்தால்
கொற்றவனே ஆண்பிள்ளை பிறக்கும்பாரு
சீரேநீ யிடதுநா சியிற்பிழிந்தால்
சிறப்பான பெண்ணென்றுஞ் செப்பினேமே. (159)

துவாலே.

செப்பினேந் துவாலையொன்று சொல்லக்கேளு
சிறப்பான மாவிலைமா துளையுஞ்சேர்த்துத்
தப்பினேங் கஸ்தூரி மஞ்சளோடு
தாயகமா யிவைமூன்றுஞ் சமனாய்ச் சேர்த்து
அப்பினேஞ் சலம்விட்டு அரைத்துமைபோல்
அடைவாக மேனியெங்கும் பூசச்சொல்லு
வெப்பினே மேனோக்கி யுதிர்த்துப்போடு
விதமாக வுதிர்ந்ததைத்தான் சேரவாரே. (160)

புகை.

வாரினதை மாவிலையி னுள்ளேவைத்து
வகையாக முகங்காட்டித் தலையைச்சுற்றிக்
கோரினே னடுவாசல் குழியைத்தோண்டிக்
குணமாகத் தான்புதைத்துச் சொல்லக்கேளு
ஆரினேன் சலமதுதான் சிரசில்வார்த்து
அப்பனே புகையொன்று சொல்வேன்பாரு
தூரினேன் சாம்பிராணி அகிலின்கட்டை
தூளிடித்துப் புகைகாட்டு நாள்தான்மூன்றே. (161)

மூன்றுநாள் துவாலையிட்டுப் புகையும்போடு
மூர்க்கமுள்ள சிதம்பரத்தை மாறிக்கட்டு
ஈன்றுபோல் மூன்றுதிங்க ளிந்தப்பாகம்
இதமான மாதவிடாய்ப் பக்குவத்தில்
கூன்றுபோ லிம்முறையைச் செய்யும்போது
குணமாகக் கர்ப்பமது தரிக்கும்பாரு
ஊன்றுபோம் போகரிட கடாட்சத்தாலே
உத்தமனே புலிப்பாணி பாடினேனே. (162)

சிவகிரிவளப்பம்.

பாடினேன் சிவகிரியின் மாற்றேதென்னில்
பண்பாக ஆயிரத் தெட்டுமாற்றுச்
சூடினே னவலோக மிதிலேயுண்டு
சுருக்கப்பா சாஸ்திரமும் வேதையோடும்
வாடியே திரியாதே நரையும்மாறும்
வயதப்பா அளவில்லை மௌனியாவாய்
நாடியே சுன்னமொடு சிந்தூரக்காடு
நாயகனே அஷ்டசித்தி நடனந்தானே. (163)

தானென்ற நவசித்தர் கோடாகோடி
    தாநடன மதிகமடா சித்தர்கூட்டங்
கோனென்ற மலையுள்ளே விருட்சமூலி
    குற்றமில்லை வேதையுந்தா னநேகஞ்செய்வார்
வானென்ன தேவரொடு முனிவர்சித்தர்
    வருகிறதும் போகிறதுங் காணச்செய்யு
மானென்ற தேவரொடு தவமேசெய்தோர்
    மைந்தனே சித்திமுத்தி பெறுவர்தானே. (164)

வாரககிரி.

தானென்ற வாரககிரிச் சரிவில்மைந்தா
    தயவான வோடைகளும் ஆறுந்தோற்றுந்
தேனென்ற அருவியிட மண்ணுங்கல்லுந்
    தெரியாமல் தங்கமா யிருக்குமப்பா
பானென்ற மூலிகையால் வேதையாகும்
    பட்டமண்ணுங் கல்முதலாய்த் தங்கமாகுங்
கோனென்ற சிலைபோலே கிடக்கும்பாரு
    கொற்றவனே யறியார்க ளாருந்தானே. (165)

சதுரகிரி.

தானான சதுரகிரி மேலேயப்பா
    தயவான உதகமொன்று இருக்குதப்பா
மானான காஞ்சனமாங் காயசித்தி
    மைந்தனே அஷ்டசித்தி கவனசித்தி
கோனான தேவர்முதல் கணங்கள் யாவுங்
    கூப்பிட்டால் கேள்விவந்து கேட்கும்பாரு
வானான சித்தரிட கூட்டமெத்த
    வளமான சஞ்சீவி மூலியுண்டே. (166)

உண்டான மூலியைத்தான் குகையினுள்ளே
    ஒளித்துவைத்தார் சித்தரெல்லாம் வெளியாமென்று
பண்டான சித்தருக்கு மூலிகிட்டும்
    பாவிகட்குங் காமிகட்குங் கிட்டுமோசொல்
சென்டான பூவுலகில் மனிதரெல்லாஞ்
    செத்தவர்க ளெழுந்திருப்பார் திடங்கொள்ளாது
கொண்டான விதியாளி வந்தானாகில்
    கூப்பிட்டுத் தான்கொடுப்பார் சித்தர்தானே. (167)

### இருமலுக்கு லேகியம்.

தானான லேகியந்தான் சொல்லக்கேளு
தருவான கரிப்பான்சா றுபடியொன்று
பானுங்கா ணிச்சாறு நாழியொன்று
பண்பாஞ்சங் கம்பழத்தின் சாறுநாழி
வானான தேன்படிதா னரையுங்கூட்டு
வளமான ஆவினெய் படிகால்சேர்த்துக்
கோனான திப்பிலியு மிளகுசுக்கு
கொடிதான சிற்றரத்தை கடுக்காய்தானே. (168)

தானப்பா வகைக்குவகை விராகனைந்து
தான்பொரித்து வடிகட்டி லேகியமாய்க்கிண்டு
வானப்பா நெல்லிக்கா யளவாய்க்கொள்ள
வளமாக ஈராறு நாளுக்குள்ளே
கோனப்பா அந்திசந்தி கொண்டபோது
கொடிதான இருமலெல்லாங் குடியெபோகும்
நாமப்பா பத்தியந்தா னில்லையையா
நாயகனே லேகியந்தான் மேருவென்னே. (169)

### சூலைவாயு மேகத்துக்குத் தைலம்.

என்னவே தயிலமொன்று சொல்லக்கேளு
இதமான கொடிவேலி மூலிதானும்
பன்னவே துலாமரைதா னிடித்துப்போட்டுப்
பண்பாம்ஆ வின்பட்டை சங்கம்வேரு
நன்னவே வகைக்குவகை துலாமேகால்தான்
நாயகனே இத்துடனே கூடச்சேர்த்து
அன்னவே தூணிநீர் விட்டுக்காய்ச்சு
அப்பனே எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கே. (170)

வாங்கியே எள்ளெண்ணெய் நாழிவாரு
வகையான மிளகுபல மரைத்துப்போடு
தாங்கியே பசுவெண்ணெய் பலந்தானென்று
தயவாக வேப்பெண்ணெய் படிகால்வாரு
பாங்கியே மெழுகுபதந் தனில்வடித்துப்
பண்பாக முழுகிவரச் சூலையேகுந்
தூங்கியே திரியாதே மேகமெல்லாந்
துடித்துவிழுந் தேயோடு மெதிர்நில்லாதே. (171)

### பிரமேகத்துக்கு எண்ணெய்.

நில்லாத பிரமேகந் தீரவேண்டில்
நிச்சயமாய்த் தேங்காய்ப்பால் படிதானென்று
வல்லான பொடுதலைச்சா றுபடியொன்று
வளமாம்ப்ர மிச்சாறு படிதானென்று
நல்லாக எரித்திறத்து எண்ணெய்வாங்கி
நாயகனே மூன்றுநா ளாறுவேளை
செல்லாகக் குடித்தவுடன் பிரமியங்கள்
சிறப்பாகத் தீருமடா திண்ணந்தானே. (172)

திண்ணமாய்ப் பத்தியந்தா னாறுநாளுஞ்
சிறப்பான ஆவின்பா லாகுமல்லால்
வண்ணமாய் மற்றொன்று மாகாதப்பா
வளமாக ஏழாநாள் தலையைமூழ்கி
உண்மைமாஞ் சீப்பிரம்யம் ரத்தப்பிரம்யம்
உத்தமனே தீருமடா இந்தஎண்ணெய்
எண்ணமொன்று மில்லையடா விசனம்போகும்
என்னசொல்வே னெண்ணெய்யிட வீரந்தானே. (173)

### சுகபேதிச் சூரணம்.

வீரந்தான் பேதியொன்று சொல்லக்கேளு
விதமான சிவதைவேர் பசுவின்பாலில்
சீரந்தான் மிதக்கவிட்டுச் சுண்டக்காய்ச்சு
திறமாக உலர்த்தியதைத் தூளாய்ப்பண்ணி
வாரந்தான் சரியெடைசர்க் கரையுஞ்சேர்த்து
வளமாக ஏலமது அரைக்கால்சேர்த்துப்
பாரந்தான் வெருகடித்தூள் வெந்நீரிற்கொள்
பகருநற் சீதமுதற் கழிந்துபோமே. (174)

### விற்புருதிக்கு மருந்து.

போமேநீ விற்புருதி வந்தபேர்க்குப்
பொங்கமுடன் சல்லிவேர்க் கிழங்குவாங்கி
தாமேநீ கழுவியதைத் தோலைப்போக்கித்
தயவாக நாலுபல மொருவேளைக்கு
வாமேநீ கம்புமா வரைப்படியும்போட்டு
வளமாகக் களிக்கிண்டி அந்திசந்தி
ஆமேநீ பசுவின்நெய் கருப்புக்கட்டி
அடைவாக மூன்றுநாள் கொண்டிடாயே. (175)

கொண்டபின்பு மறுபத்ய மூன்றுநாளுங்
குணமாக வெந்நீரும் அன்னமாகுங்
கண்டபின்பு ஏழாநாள் சலத்தைவாரு
கருவான விற்புருதி கரைந்துபோச்சு
அண்டபின்பு சின்னிபொடு தலையின்சாறு
அப்பனே பத்தியந்தா னிந்தபாகம்
உண்டிடவே அரையாப்பு விற்புருதிதீரும்
உத்தமனே மேகசலக் கட்டிபோமே. (176)

மருந்தீட்டுக்கு முறிவுசத்தியாக.

போமேநீ மருந்திடு வாந்தியாகப்
பொங்கமுடன் கரிப்பான்சா றதனைவாங்கித்
தாமேநீ யிருப்புடைய படியிலப்பா
தாழ்வாக்காற் படிச்சாறு படியில்தானும்
வாமேநீ எலுமிச்சம் பழத்தின்சாறு
வளமாக அந்திசந்தி படியில்விட்டு
ஆமேநீ யுதையாதி தொடங்குமுன்னே
அப்பனே உள்ளுக்குக் கொடுத்திடாயே. (177)

கொடுத்திடவே வாந்தியது காணும்பாரு
கொடிதான மருந்திடு எல்லாம்வீழும்
அடுத்திடவே வாந்தியது அதிகங்கண்டால்
அடைவாகப் பச்சரிசி பருப்பினோடு
கடுத்திடவே கஞ்சியது கொண்டபோது
களங்கமற வாந்தியது நிற்கும்பாரு
தொடுத்திடவே மருந்திடு தீர்ந்துபோச்சு
தோஷமது விலகிற்று தொழிலைப்பாரே. (178)

சாதிலிங்கக்கட்டு.

பாரேநீ லிங்கமது விராகன்பத்துப்
பாங்கான தனப்பாலி லொருநாள்போட்டு
சீரேநீ விராகனெடை தங்கரேக்கு
சிறப்பான லிங்கத்தின் மேலேசுற்றித்
தேரேநீ வெண்காரம் பொரித்துப்பூசிச்
சிறப்பாய்ச்சேங் கொட்டைபடி நறுக்கிப்போடு
வீரேநீ யிடித்தப்பா தேங்காய்மட்டம்
விதமாக லிங்கத்தைப் பொதித்துமூடே. (179)

மூடியே சிறுசட்டி நடுவில்வைத்து
மூர்க்கமுள்ள பசுவெண்ணெய் தேங்காய்விதம்
நாடியே சேங்கொட்டை யுருண்டைமேலே
நலமாக வைத்தெரிக்கக் கனல்தான்மீறி
ஆடியே தீயெரிந்து சாம்பலாகும்
அப்பனே ஆறவிட்டு எடுத்துப்பாரு
கூடியே லிங்கமது வுருகிக்கட்டி
கொற்றவனே உருக்கதுபோ லிருக்கும்பாரே. (180)

சூலை 18-க்கும் கியாழம்.

பாரடா சிவன்வேம்பு சங்கம்வேரு
பாங்காக முக்கழஞ்சி சித்ரமூலங்
கூரடா வெள்ளறுகு அசுவகெந்தி
கொடிதாஞ்சங் கங்குப்பி மூலத்தோடு
வீரடா பிரமனிட் கிழங்குகூட
விதமான பூவரசன் பட்டையோடு
சீரடா நஞ்சுண்ட பட்டையப்பா
சிறப்பாக வகைவகைக்குப் பலந்தான்ரெண்டே. (181)

இரண்டான வாய்விளங்க மிளகுசுக்கு
இரதமிலாக் காட்டுச்சீ ரகமுமப்பா
பண்டான வகைவகைக்குப் பலம்ரண்டாகப்
பசுமூலி சரக்கையுஞ்சேர்த் திடித்தெடுத்து
முண்டாறு பங்காக்கி யொருபங்கப்பா
முக்கியமாய்க் கியாழம்வைத்துப் பரங்கிப்பட்டை
பண்டாகக் காற்பலந்தான் முடிந்துபோட்டுப்
படிசலந்தான் விட்டெரித்தெட் டொன்றாய்வாங்கே. (182)

வாங்கியே பரங்கியிட பட்டைதன்னை
வளமாகக் கியாழத்தி லரைத்துமைபோல்
தூங்கியே திரியாமல் கலக்கிப்போடு
துடிகொண்ட கட்டுலிங்கம் பணவிடையில்
தாங்கியே யுரைத்துவிடு இந்தப்பாகந்
தயவாக ஈராறு வேளைகொள்ளப்
பாங்கியே சூலைபதி னெட்டுந்தீரும்
பாங்காகப் பத்தியந்தா னொன்றுகாதே. (183)

ஒன்றான வெந்நீரும் அன்னங்கொள்ளு
ஓகோகொ மறுபத்ய மறுநாட்காரு
நன்றாக இப்படியே காத்தாயானால்
நாயகனே நோயேது சூலேயேது
சென்றான வியாதியது அணுகுமோசொல்
செம்மையாய்ச் சடமங்கே வலுத்துப்போகும்
கன்றான போகரிட கடாட்சத்தாலே
கருவாகப் புலிப்பாணி பாடினேனே. (184)

செங்கிரந்தி தடிப்புக்கு.

பாடினேன் கொடிக்கள்ளிப் பயறுபோலே
பாங்காக வொருதுலாம் பாண்டத்திட்டு
நாடினேன் ஒருகுடத்தில் சலத்தைவிட்டு
நாயகனே யெட்டொன்றாய்க் குறுகக்காய்ச்சி
கூடினேன் வடிகட்டுந் தரந்தானேழு
கொற்றவனே படியரைக்கா லந்திசந்தி
நாடினேன் திரியாதே கொண்டாயானால்
நலமாகச் செங்கிரந்தி தடிப்புப்போமே. (185)

போமேநீ மூன்றுநா ளாறுவேளை
பொங்கமுடன் மறுபத்ய மூன்றுநாளாம்
நாமேநீ யறுநாளி ராறுவேளை
நாயகனே உப்பில்லாக் கஞ்சியாகும்
ஆமேநீ ஏழாநாள் பத்யந்தீரு
அடைவாக விளக்கெண்ணெய் முழுகிவாநீ
தேமேநீ கிரந்திவகை யெல்லாந்தீருந்
திறமான போகரிட கடாட்சந்தானே. (186)

தானென்ற ஒடுக்காளைப் பிடித்துவந்து
தயவாகச் செஞ்சீலை மேலேசுற்றி
வானென்ற சலாகையிலே குத்திக்கொண்டு
வளமாக வேப்பெண்ணெய் மேலேவாரு
கோனென்ற தீப்பிடித்து வேகவேகக்
கொற்றவனே சுடரெண்ணெய் மேலேவாரு
பானென்ற எண்ணெயையே முதரம் ஈந்தால்
பண்பான எண்ணெயது தயிலமாச்சே. (187)

ஆச்சேநீ தயிலம்துட் டெடையதாக
அப்பனே உள்ளுக்குக் கொடுத்தபோது
வாச்சேநீ மந்தார சந்நியேது
வகையாக மூன்றுநா ளாறுவேளை
வீச்சேநீ யாறுநாள் பத்யமைந்தா
வித்தகனே உப்பில்லாக் கஞ்சியாகும்
பாச்சேநீ முன்தயிலந் துவாலைபோடு
பண்பாகா வெழாநாள் நீரைவாரே. (188)

காதடைப்புக்குத் தைலம்.

வாரேநீ பின்னுமொன்று சொல்லக்கேளு
வளமாகத் துலாமிளகாய் நிறுத்துப்போடு
சேரேநீ தூணிநீ ரெட்டொன்றுக்கிச்
செப்பமுடன் மண்சட்டி தனிலிறுத்து
காரேநீ எள்ளெண்ணெய் நாழிவிட்டுக்
கனிவாக மிளகுபல மரைத்துப்போடு
தீரேநீ மெழுகுபதந் தனில்வடித்துத்
தீர்க்கமாய் முழுகிவரப் பலனைக்கேளே. (189)

கேளேநீ நீர்ச்செறிப்புத் திமிருவாதங்
கெணிதமாய்ச் சோகையொடு மண்டைக்குத்து
வீளேநீ மேல்வலிகள் சூலைநோயும்
விதமான புடைசூலை மேகவாய்வும்
பாளேநீ சொரிசிரங்குந் தீரும்பாரு
பண்பான காதடைப்புக் காதுக்குத்துச்
சூளேநீ யிவையெல்லாந் தீருந்தீருஞ்
சுகமான போகரிட கடாட்சந்தானே. (190)

வயிற்றுக்கடுப்புக்கு.

தானென்ற சுக்கப்பா விராகன்ரண்டு
தயவாக மோருவிட்டு மைபோலாட்டிக்
கோனென்ற அரசிலையில் வைத்துத்தைத்துக்
குணமாக மோருவிட்டு வேகவைத்து
மானென்ற எழுதா மிந்தப்பாகம்
மைந்தனே தயிருவடி கட்டிநேரே
வானென்ற தயிரில்வைத்து விழுங்கும்போது
வயிறறிலரச்சல் கடுப்புமுதல் தீர்ந்துபோமே. (191)

பேதிமாத்திரை.

போமேநீ நேர்வாளஞ் சுத்திசெய்து
பொங்கமுட ஞமணக்கு காசுக்கட்டி
ஆமேநீ யோரெடைபாய் நிறுத்துக்கொண்டு
ஆவின்பால் விட்டரைத்துத் துவரைபோலே
தாமேநீ குளிகையொன்று வெந்நீரிற்கொள்
தயவாகப் பேதியது ஆகும்பாரு
வாமேநீ பேதியது அதிகமானல்
வளமாக வசம்புதட்டிக் கியாழங்கொள்ளே. (192)

தலைவலி சந்நிக்குப்புகை.

கொள்ளவே இன்னமொன்று சொல்லக்கேளு
கொடிதான பெருங்காய மோமஞ்சுக்குத்
தெள்ளவே சாம்ப்ராணி மிளகுசாரம்
தெளிவான சிற்றரத்தை கழற்பருப்பு
மெள்ளவே சீரகமும் லிங்கங்கூட
மேன்மையாய்ச் சமன்கொண்டு எருக்கம்பாலில்
தள்ளவே திரியாக்கிப் புகைதான்காட்டத்
தலைவலியுஞ் சந்நிமுத லோடிப்போமே. (193)

கர்ப்பூரக்குளிகை.

போமேநீ சாதிக்காய் சாதிபத்ரி
பொங்கமுடன் தக்கோலம் ஏலம்கோஷ்டம்
வாமேநீ சந்தனம்வால் மிளகுங்கூட
வகைவகைக்கு விராகனெடை நிறுத்துப்போடு
தாமேநீ கிராம்பதுவும் விராகன்மூன்று
தயவான கஸ்தூரி பச்சைப்பூரம்
ஆமேநீ குங்குமப்பூ வகைவகைக்கு
அடைவாக விராகனெடை யரையுமாமே. (194)

ஆமப்பா இளநீரா லரைத்துமைபோல்
அடைவாக் குன்றிமணி போலுருட்டித்
தாமப்பா நிழலுலர்த்தித் தாம்பூலத்தில்
தயவாகத் தின்றுவரப் பலனைக்கேளு
வாமப்பா முகவசியந் தேககாந்தி
வளமான பல்லிலுள்ள வியாதிதீரும்
வேமப்பா அக்கினியா மந்தந்தீரும்
விதமான சந்நிமுதல் மேசம்போமே: (195)

போமப்பா கொடிவேலி நிலப்பனையின்மூலம்
பொங்கமுடன் தண்ணீர்விட் டான்கிழங்கு
நாமேநீ சீனிசர்க் கரையுங்கூட
நாயகனே வகைவகைக்குப் பலந்தான்கேளு
தாமேநீ பலந்தானே முப்பதாகுந்
தயவான சேங்கொட்டை நாற்பதாகும்
வாமேநீ தூளிடித்துச் சூரணம்செய்
வளமாகச் சர்க்கரையும் நேரேகூட்டே. (196)

கூட்டப்பா யிதிற்பாதி தேனுஞ்சேர்த்துக்
குணமாக இதினேரே ஆவினெய்யை
நாட்டப்பா நாற்பதுநா ளந்திசந்தி
நாயகனே பத்தியந்தான் பாலுஞ்சோறும்
வாட்டப்பா சர்க்கரையுஞ் சீனியாகும்
வளமான விராகனெடை யைந்தேகொள்ளு
ஆட்டப்பா இதனுடைய பலனைக்கேளு
அப்பனே பதினெட்டுச் சூலைபோமே. (197)

போகுமடா பதினெட்டுக் குஷ்டந்தீரும்
பொலிவான வலிப்பைந்து முதிரமெட்டுந்
தாமடா அஷ்டகுன்மம் பாண்டுஆறும்
தயவாய்க்கேள் விஷக்கடியு மேகந்தீரும்
ஆமடா பலமுண்டு நரையுமாறும்
அடைவான தேகமது அழகோகாந்தி
நாமடா போகரிட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (198)

பல்லுக்குப்பொடி.

பாடியே அரக்குடனே சினக்காரம்
பண்பான திருசுடனே கடுக்காயப்பா
நாடியே மாசக்காய் வகைவகைக்கு
நலமாக விராகனெடை நிறுத்துக்கொண்டு
ஆடியே கடுக்காயுந் தான்றிக்காயும்
அரப்பொடியும் வகைக்குவகை விராகன்மூன்று
கூடியே யெலுமிச்சம் பழச்சாற்றுள்ளே
குணமாக வுலரவைத்துப் பொடியாய்ச் செய்யே. (199)

பொடியெடுத்து விளக்கிவரப் பலனைக்கேளு
புழுச்சாகு மெயிற்கரையுந் திரும்பாரு
இடியெடுத்த பல்லசைவு பல்லுக்குத்து
எரிவான வாய்ப்புண்ணு நாற்றந்தீரும்
வடிவான பல்லொளிவு வசியமுண்டு
வளமான பல்லினுள்ள வியாதிதீரும்
துடியான போகரிட கடாட்சத்தாலே
துலக்கமாய்ப் புலிப்பாணி பாடினேனே. (200)

வாய்வு விக்கல் சோகைக்கு மருந்து.

பாடித்திப் பிலிசுக்கு மிளகுங்கூடப்
பண்பாக ரோசனையும் பரிந்துசேரு
நாடியே வகைவகைக்குப் பலந்தானென்று
நாயகனே கடுக்காய்த்தோல் பலந்தானு
கூடியே யிடித்துச்சூ ரணமேசெய்து
குணமாகப் பனைவெல்லம் பலந்தானு
ஆடியே கோசலத்தி லப்பாகாய்ச்சி
அப்பனே நெய்தேனிற் கிண்டிப்போடே. (201)

போடேநீ கழற்சிக்கா யளவுகொள்ளப்
பொருமலுடன் வயிற்றுவலி விக்கல்சோகை
ஆடேநீ மலக்கட்டுக் கிருமிதோஷம்
அடைவான மேகசவஞ் சூலைவாயு
நாடேநீ நீர்ச்செறிப்பு மேல்வலியும்போகும்
நாயகனே வாயுவென்ற ரோகம்போகும்
கூடேநீ போகரிட கடாட்சத்தாலே
குணமாகப் புலிப்பாணி பாடினேனே. (202)

கடுகெண்ணெய்.

பாடினேன் கடுகெண்ணெய் படிதானென்று
பண்பான பெருங்காயம் வசம்புசுக்கு
நாடியே கருநாவி சாம்பிராணி
நாயகனே வெள்ளுள்ளி யோமம்குப்பை
ஆடினேன் மாவிலிங்கப் பட்டைகூட
அடைவாக வகைக்குவகை விராகன்மூன்று
கூடினேன் மேனிச்சா றுவிட்டரைத்துக்
குணமாகக் கடுகுபதந் தனில்வடித்தே. (203)

வடித்தஎண்ணெய் துவாலையிடச் சந்நிபோகும்
வளமாக வலிப்புடனே சயித்யந்தீருந்
தடித்தவுடன் கால்குடைச்சல் மேல்வலியுந்தீருந்
தயவான காதிரைச்சல் மண்டைக்குத்து
கொடிதான எண்ணெயடா வீரம்வீரங்
கொற்றவனே எண்ணெயிட அருமைமெத்த
கெடியான போகரிட கடாட்சத்தாலே
கெணிதமாய்ப் புலிப்பாணி பாடினேனே. (204)

பஞ்சீகரணச்சிந்தூரம்.

பாடியே தங்கமது ஒன்றரையுமாகும்
பண்பான காரீய மொன்றேகாலாம்
ஆடியே செம்பதுவு மொன்றேயாகும்
அப்பனே இரும்பதுவு முக்காலாகுங்
கூடியே நாகமது அரையுமாகுங்
குணமான ரசமதுதான் விராகனைந்து
நாடியே கெந்தகந்தான் விராகனைந்து
நாயகனே அரிதாரம் விராகனொன்றே. (205)

ஒன்றான இவையெல்லாம் பொற்றலையின்சாற்றால்
ஒளிவாக இருசாம மைபோலாட்டிப்
பன்றாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றிப்
பண்பான மாக்கல்லுக் கொண்டுமூடி
வன்றாகக் குப்பிக்குச் சீலையேழு
வளமாகத் தான்செய்து வாயைவிட்டு
நன்றாகச் சட்டியிலே மணல்தானப்பா
நலமாக விரல்நாலு உயரம்போடே. (209)

போடேநீ குப்பிவாய் தெரியமூடிப்
பொங்கமுடன் தானெரிப்பாய் கமலம்போலே
ஆடேநீ காற்சாம மெரித்தபோது
அப்பனே சிந்தூர மாகும்பாரு
கூடேநீ ஆவின்பால் வெண்ணெய்தன்னிற்
குணமாகப் பணவெடையில் பாதிகொள்ள
நாடேநீ நாற்பதுநாள் கொண்டபோது
நாயகனே வியாதியெல்லாந் தீருந்தானே. (207)

தானென்ற தேகமது வலுத்துப்போச்சு
　　தயவான வசிகரமுங் காந்தியுண்டாங்
கோனென்ற ரசிதமது ஏழுகூட்டிக்
　　குணமான செம்பதிலே மூன்றுஞ்சேர்த்து
தானென்ற தங்கமது ஒன்றுங்கூட்டி
　　வளமாகத் தானுருக்கிக் குருவொன்றீயத்
தேனென்ற கரிபோலே யிருக்கும்பாரு
　　செம்மையா யோட்டினில்வைத் தூதிப்போடே. (208)

போடேநீ மாற்றைந்து இருக்கும்பாரு
　　பொங்கமுட னெடைக்கெடைதான் தங்கஞ்சேர்த்து
ஆடேநீ சீவனத்தைச் செய்துகொண்டு
　　அடைவான சாஸ்திரத்தை யறிந்துபாரு
கூடேபஞ் சீகரணச் சிந்தூரந்தான்
　　குணமாகுந் தேகமது இறுகும்பாரு
தேடேநீ போகரிட கடாட்சத்தாலே
　　தெளிவான புலிப்பாணி பாடினேனே. (209)

சோகை காமாலைக்கு லேகியம்.

பாடியே சுக்குடனே மிளகுகூடப்
　　பண்பான திப்பிலிசீ ரகமுமோமம்
ஆடியே காட்டுச்சீ ரகமுமிஞ்சி
　　அப்பனே சாதிக்காய் கிராம்புசோம்பு
நாடியே கடுக்காய்ரோ கணிப்பு மேலம்
　　நலமான கழல்பருப்பு அரத்தைசிறுதேக்கு
கூடியே வகைவகைக்கு விராகன்மூன்று
　　கொற்றவனே தூளிடித்துச் சூரணம்செய். (210)

செய்யப்பா வெள்ளாட்டுப் புழுக்கைத்தூளுஞ்
　　செயமாக வடிகட்டிச் சரக்கின்நேரே
வையப்பா கரிப்பான்சா றுபடியொன்று
　　வளமாகப் பனையுடைய கருப்புக்கட்டி
நெய்யப்பா எழுபலம் நிறுத்துக்கொண்டு
　　நலமாகத் தேன்படியு மரைதான்வாரு
கையப்பா ஆவின்நெய் படிதான்பாதி
　　கனிவாக லேகியமாய்க் கொண்டிடாயே. (211)

கொள்ளேநீ நெல்லிக்கா யளவுகொள்ள
குணமில்லா நீர்க்கோவை பாண்டுசோகை
அள்ளேநீ காமாதி சோகைவாயு
அப்பனே நெஞ்செரிவு நீர்ச்செறிப்பு
விள்ளேநீ அக்கினியா மைந்தாதீரும்
விருன மத்தமுதல் குன்மந்திரும்
நள்ளேநீ போகரிட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (212)

பஞ்சீகாண மாத்திரை.

பாடினேன் தாரமொன் றரையுமாகும்
பண்பான சவ்வீரம் ஒன்றேகாலாம்
நாடியே கௌரியது ஒன்றேயாகும்
நலமான வெள்ளையது முக்கால்சேரு
ஆடியே லிங்கமது அரையாம்பாரு
அப்பனே பொடிசெய்து வுருக்கிவாரு
கூடியே திரிகடுகுப் பொடியுந்தேனுங்
கொடுப்பாயே பணவெடைதான் நோய்கள்போமே. (213)

போமேதான் வாயுவொடு குன்மரோகம்
பொல்லாத நெஞ்சடைப்புப் பிரமைமூர்ச்சை
தாமேநீ சயரோகம் வாந்தியேப்பம்
தபவில்லாச் சுரங்களொடு தொண்டைக்கம்மல்
ஆமேநீ விஷபாகங் காமாலைசோகை
அப்பனே சன்னியொடு வலிப்புந்தீரும்
நாமேதான் போகரிட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினோமே. (214)

பஞ்சமுகச்சிந்தூரம்.

பாடினேன் சாதிலிங்கம் ரசமுங்கெந்தி
பண்பான வீரமுடன் தாரங்கூட்டி
ஆடினே னிவையெல்லாஞ் சமனாய்க்கொண்டு
அடைவாக்காட் டாமணக்கின் பாலாலாட்டி
நாடியே வில்லைதட்டி யுலரவைத்து
நலமான புடமதுதான் கோழியாகுங்
கூடியே யாறவிட்டு எடுத்துப்பாரு
கொற்றவனே சிந்தூர மாகுந்தானே. (215)

தாமென்ற சிந்தூரம் பணவெடைதான்கொள்ளத்
தயவான திரிகடுகுப் பொடியிலப்பா
பாமென்ற தேனுகும் வெண்ணையாகும்
பண்பான பனையுடைய கருப்புக்கட்டி
வேமென்ற விளைவுகளிலே கொள்ளும்போது
வெடிசூலை குஷ்டமுதல் கருப்புவெள்ளை
கோமென்ற மேகத்தா லெடுத்தரோகங்
கொற்றவனே குன்மமுதல் வாயுபோமே. (216)

இரசசெந்தூரம்.

போமேதான் ரசம்பத்து கெந்திபத்து
பொங்கமுட னரிதாரம் ஒன்றுங்கூட்டி
ஆமேதான் அம்மியிலே பொடியாய்ப்பண்ணி
அப்பனே வறுத்தெடுகை பாகமாகத்
தாமேதான் அண்டத்தைப் பொடித்துக்கொட்டித்
தயவாக அதிற்பாதி போட்டுமூடி
வாமேதான் மணலில்வைத்துக் குக்குடத்தைப்போடு
வளமான செந்தூர மாகும்பாரே. (217)

பாரேதான் பணவெடைநீ பனைவெல்லத்தில்
பாங்காகக் கொண்டவுடன் பரங்கிசூலை
சேரேதான் கிரந்தியொடு குஷ்டரோகம்
செயலான தாதுநஷ்டம் லிங்கப்புற்று
தீரேதான் அரையாப்பு விற்புருதியோடுந்
திரமாகத் தேகமது காந்தியுண்டாம்
வீரேதான் போகரிட கடாட்சத்தாலே
விளம்புகிறேன் புலிப்பாணி விளங்கத்தானே. (218)

நீரெரிவுக்கு

தாமென்ற நீரெரிவு கண்டதானால்
தயவாகக் கட்டுகொடி யிலையரைத்து
வாமென்ற நிம்மக்கா யளவுதானும்
வகையாகக் கால்படியாஞ் சலத்திற்சேர்த்துக்
கோமென்ற சீரகமும் ஏலந்தானும்
கொடிதாக விராகனெடை பொடித்துப்போட்டு
ஆமென்ற சீனிசர்க் கரைதான் கூட்டு
அடைவாகக் சலந்துகொண்டு உண்டுபாரே. (219)

புரையாதி ரணங்களுக்குத் தயிலம்.

பாரேதான் நொச்சிவேர் அழிஞ்சிவேரும்
பண்பான விழுதிவேர் சமனாய்ப்போட்டுச்
சீரேதான் குழித்தயில மாகவாங்கிச்
சிறப்பாகப் புரைகளுக்கு விட்டபோது
கூரேதான் விற்புருதி கண்டமாலை
குறிப்பான அரையாப்புக் கன்னப்புற்று
கேரேதான் தொடைவாழை குழிவாழையோடு
நேரான பிளவையொடு தீரும்பாரே. (220)

பரங்கிப்பட்டைப்பதங்கம்.

பாரேதான் பரங்கியுட பட்டையப்பா
பாங்காகப் பலமைந்து நிறுத்துக்கொண்டு
சேரேதான் பொடிப்பொடியாய்க் கண்டமாக்கிச்
சிறப்பாக வேசரியின் லத்திச்சாற்றில்
வீரேதான் பிசரியதை யுலர்த்திவைத்து
விதமாமே ணிச்சாறு பொடுதலைச்சாறு
கூரேகை யான்சாறு குப்பிச்சாறுங்
குணமான பசுவின்பா லின்னுங்கேளே. (221)

கேளேநீ வெவ்வேறே யுலர்த்திக்கொண்டு
கெணிதமுடன் கெந்தகமும் பலந்தானென்று
வாளேநீ ரசமைந்து லிங்கமைந்து
வகையாகப் பொடிபண்ணி மூன்றும்போடு
வீளேநீ மறுசட்டி தமர்கள்போட்டு
விதமாகச் சட்டிவாய் தன்னில்மூடிச்
சூளேநீ பட்டையைத்தான் மேலேவைத்துச்
சுகமாக மறுசட்டி கொண்டுமூடே. (222)

மூடியே மண்சீலை வலுக்கச்செய்து
முசியாமல் தானெரிப்பாய் சாமமொன்று
ஆடியே யாறவிட் டெடுத்துலர்த்தி
அப்பனே சூரணமாய்ச் செய்துகொண்டு
நாடியே கழஞ்சியொன்று கொண்டாயானால்
நலமாக மேகவகை யிருபத்தொன்றும்
ஓடியே போகுமடா சூலையெல்லாம்
உத்தமனே கருங்கிரந்தி தீருந்தானே. (223)

தீருமே கக்கறுப்பு வெள்ளைதானும்
திறமான பிடிப்புவகை ரணங்கள்யாவும்
ஆறுமே ரணங்கள்வகை சிரங்குகுஷ்டம்
அப்பனே சேந்தாமைத் தடிப்புந்தீரும்
கூருமே வாய்நாற்றந் தர்க்கச்சூலை
குணமாக மண்டலந்தான் தின்றால்தீரும்
பாருமே பத்தியந்தா னிதற்கோஇல்லை
பண்பாகப் போகருட கடாட்சந்தானே. (224)

வல்லாதித்தயிலம்.

தானான வல்லாதித் தயிலமொன்று
தயவாகச் சேங்கொட்டை அழிஞ்சிக்கொட்டை
மானான பூவந்திக் கொட்டையோடு
மைந்தனே யெட்டியிட கொட்டைதானும்
வானான வேம்பின்புண் ணாக்குங்கூட
வகையான சிவன்வேம்பு இவைகளெல்லாங்
கானான சரியெடையாய்த் தூக்கிக்கொண்டு
கனிவான கற்றாழைச் சாற்றிற்போடே. (225)

போடேநீ யொருநாள்தா னூறவைத்துப்
பொங்கமுட னிருநாள்தா னெடுத்துலர்த்தி
ஆடேநீ குழித்தயில மாகவாங்கி
அப்பனே காசெடைதான் கொண்டாயானால்
நாடேநீ பனைவெல்லந் தன்னிற்கொள்ளு
நாயகனே சூலைபதி னெட்டுந்தீரும்
வாடேநீ போகாமல் மண்டலங்கால்கொள்ள
மைந்தனே பத்தியந்தா னொன்றுகாதே. (226)

இடிவல்லாதி.

ஒன்றான வல்லாதி சொல்லக்கேளு
உத்தமனே சேங்கொட்டை பலந்தான்பத்து
நன்றான மூக்குவெட்டிச் சாணிப்பாலில்
நலமாக மூன்றுநா ளூறவைத்து
அன்றான கல்லூரவிற் றனேபோட்டு
அப்பனே யெள்ளதனை யிடித்துப்போட்டு
கன்றான கொப்பரைத்தேங் காயிரண்டு
கனிவாகத் தானிடித்து நினைவாய்ப்போடே. (227)

போடே நீ பறங்கியிட பட்டையப்பா
　　பொங்கமுட னமுக்கரா சித்ரமூலம்
கூடே நீ கஸ்தூரி மஞ்சளோடு
　　குணமான கருஞ்சீரம் வாலுழுவையோடு
தேடே நீ குரோசானி யோமத்தோடு
　　தெளிவான வெற்றிலையின் காம்புதானும்
நாடே நீ கடுக்காயுந் திப்பிதானும்
　　நலமான கோஷ்டம்வகை வகைக்குக்கேளே. (228)

கேளேதான் வகைவகைக்கோர் பலமாய்த்தூக்கிக்
　　கெணிதமுடன் சூரணமாய்ச் செய்துகொண்டு
வாளேதான் கல்லுரவில் மயனம்போலே
　　வகையாக இடித்ததனைச் சொல்லக்கேளு
ஆளேதான் ரசகர்ப்பூ ரத்தையப்பா
　　அடைவாக விராகனெந்தே பொடித்துப்போட்டு
சாளேதான் பனைவெல்லம் பலந்தானைந்து
　　சார்வாகப் போட்டிடிப்பாய் தயவாய்த்தானே. (229)

தானென்ற வல்லாதி அந்திசந்தி
　　தயவாக வெருகடிமண் டலமேகொள்ள
வானென்ற குஷ்டமொடு கிரந்திசூலை
　　வகையாக அரையாப்பு மேகமெல்லாம்
கோனென்ற குன்மமெட்டுஞ் சுக்லவாய்வு
　　குணமில்லா ரணரோகங் கிரந்திதீரும்
ஏனென்ற பத்தியந்தா னிச்சாபத்யம்
　　இதமான வுப்புமுதல் வறுத்துக்கூட்டே. (230)

கூட்டப்பா தயிர்மோரு நெய்யுமாகுங்
　　குணமான துவரையுட பருப்புமாகும்
நாட்டப்பா பாசியென்ற பயறுமாகும்
　　நலமான நல்லாரை பொன்னாங்காணி
ஆட்டப்பா கரப்பனென்ற பதார்த்தந்தள்ளு
　　அடைவாக மற்றெல்லா மாகும்பாரு
ஆட்டப்பா விளக்கெண்ணெய் தேய்த்துமுழ்க
　　அடைவாகச் சந்திரன்போல் தேகந்தானே. (231)

நோயின்நட்சத்திரங்களறிய.

தானென்ற அசுபதிநாள் முதற்காலப்பா
தயவாக வொன்பதுநாள் சுரமேதீரும்
தேனென்ற ரண்டாங்கால் கொல்லுமப்பா
திறமாகப் பத்தாநாள் மரணமாவான்
கோனென்ற மூன்றுங்கால் பதினைந்தாகும்
குணமாக நாலாங்கால் மரணஞ்செய்யும்
வானென்ற பரணிதனின் முதற்கால்மூன்று
வளமான ரண்டாங்கா லேழாமென்னே. (232)

என்னவே மூன்றுங்கால் பதினைந்தாகும்
எளிதில்லா நாலாங்கால் பதினைந்தாகும்
நன்னவே கார்த்திகைக்கு முதற்காலானால்
நலமான வொன்பானாள் தீரும்பாரு
பன்னவே ரண்டாங்கால் பத்தேயாகும்
பண்பான மூன்றுங்கால் பதினைந்தாகும்
அன்னவே நாலாங்கால் நாற்பத்தெட்டு
அடைவாக ரோகணியில் முதற்கால்பத்தே. (233)

பத்தான ரண்டாங்கால் பதினெட்டாகும்
பண்பான மூன்றுங்கால் எண்ணாங்கப்பா
பெத்தான நாலாங்கால் எண்பத்திரண்டு
பேதமில்லை தீர்ந்துவிடு மின்னுங்கேளு
முத்தான மான்றலையின் முதற்காலப்பா
முப்பதுநா ளானபின்பு தீரும்பாரு
சித்தான ரண்டாங்கா லிருபத்தெட்டு
திறமான மூன்றுங்கால் பதினைந்தாமே. (234)

ஆமேதான் நாலாங்கால் முப்பத்தைந்து
அடைவான ஆதிரைநாள் முதற்காலொன்பான்
தாமேதான் ரண்டாங்கால் மரணமாகும்
தயவாக மூன்றுங்கால் நாள்தான்பத்து
வாமேதா னாலாங்கா லிருபத்தைந்து
வளமான புனர்பூசம் நாள்தானேழு
போமேதா னிரண்டாங்கால் நாள்தான்பத்து
டொங்கமுடன் மூன்றுங்கால் பதினெட்டாமே. (235)

ஆமப்பா நாலாங்கால் மரணஞ்செய்யும்
அடைவான பூசமப்பா முதற்காலேழு
சோமப்பா ரண்டாங்கால் பனிரண்டாகுஞ்
சுகமான மூன்றுங்கா லொன்பதாகும்
காமப்பா நாலாங்கா லிருபத்தேழு
கனிவான வாயிலிய முதற்காலொன்பான்
தாமப்பா ரண்டாங்கா லிருபதாகுந்
தயவாமூன் றுங்கால்தொண் ணூறதானே. (236)

தானான நாலாங்கால் முப்பத்தொன்பான்
தயவான மகமுதற்கால் மரணஞ்செய்யும்
வானான ரண்டாங்கால் முப்பதாகும்
வளமான மூன்றுங்கால் எண்பத்தைந்து
கூனான நாலாங்கால் நாள்தானைந்து
குணம்பூர முதற்கால்தான் சாவுமாகுந்
தேனான ரண்டாங்கா லிருபத்தைந்தில்
சிறப்பான மூன்றுங்கா லிருபத்தாறே, (237)

ஆறான நாலாங்கா லெண்பத்தொன்றும்
அடைவான வுத்திரந்தான் முதற்காலெட்டு
வீறான ரண்டாங்கால் முப்பதாகும்
விதமாமூன் றுங்காலேம் பத்திரண்டாங்
தீறான நாலாங்கால் மரணமாகும்
திறமான அஸ்தமுதற் கால்தானெட்டு
கூறான ரண்டாங்கால் பதினைந்தாகுங்
குணமான மூன்றுங்கா லிருபத்தெட்டே. (238)

எட்டாநா லாங்காலெண் பத்திரண்டு
எளிதான சித்திரையு முதற்காலொன்பர்ன்
நெட்டான ரண்டாங்கால் பதினைந்தாகும்
நேரான மூன்றுங்கால் பன்னிரண்டு
கிட்டான நாலாங்கால் நாற்பத்தொன்று
கெதியான சோதிமுதற் காலீராறு
குட்டான ரண்டாங்கால் மரணஞ்செய்யுங்
குணமான மூன்றுங்கா லெண்பத்தெட்டே. (239)

எட்டான நாலாங்கால் பன்னிரண்டு
எழிலான விசாகமுதற் கால்தானென்பான்
தட்டான ரண்டாங்கால் நாள்தான்மூன்று
தயவான மூன்றுங்கால் நாற்பதாகும்
பட்டான நாலாங்கால் எண்பத்தொன்று
பாங்கான அனுஷமுதற் கால்தான்சாவு
சிட்டான ரண்டாங்கா லிருபதப்பா
செயலான மூன்றுங்கால் தொண்ணூறென்னே. (240)

என்னவே நாலாங்கால் நாற்பதாகும்
எழிலான கேட்டைமுதற் கால்தான்சாவு
நன்னவே ரண்டாங்கா லிருபதப்பா
நாயகனே மூன்றுங்கால் முப்பத்தொன்று
வன்னவே நாலாங்கா லெண்பத்திரண்டு
வளமான மூலமுதற் கால்தான்சாவு
அன்னவே ரண்டாங்கா லொன்பதாகும்
அடைவான மூன்றுங்கால் நாள்தான்பத்தே. (241)

பத்தான நாலாங்கால் பதினெட்டாகும்
பண்பான பூராட முதற்காலொன்பான்
சித்தான ரண்டாங்கால் மரணஞ்செய்யுஞ்
செயலான மூன்றுங்கால் நாள்தான்பத்து
வித்தான நாலாங்கா லைம்பத்துநாலு
விதமான உத்திராட முதற்காலேழு
நித்தான ரண்டாங்கா லிருபதாகும்
நேரான மூன்றுங்கா லைம்பதாச்சே. (242)

ஆச்சப்பா நாலாங்கால் நாற்பதாகும்
அடைவான ஓணமுதற் பதினொன்றப்பா
பேச்சப்பா ரண்டாங்கால் பத்துநாளாம்
பேதமில்லை மூன்றுங்கால் நாள்தானெட்டு
வீச்சப்பா நாலாங்கால் மரணஞ்செய்யும்
விதமான அவிட்டமுதற் கால்தானென்பான்
நீச்சப்பா ரண்டாங்கால் பதினைந்தாகும்
நிசமான மூன்றுங்கால் முப்பத்திரண்டே. (243)

இரண்டான நாலாங்கால் முப்பத்தொன்பான்
இதமான சதயமுதற் கால்தானேழு
வரண்டான ரண்டாங்கால் பத்தாம்பாரு
வளமான மூன்றுங்கால் நாள்தானாலு
திரண்டான நாலாங்கால் நாள்தானைந்து
திறமாம்பூ ரட்டாதி முதற்கால்சாவு
கொண்டான ரண்டாங்கால் பதினாறுகுங்
குணமான மூன்றுங்கா லெழுபத்தொன்றே. (244)

ஒன்றான நாலாங்கால் நாற்பத்தொன்று
ஒளிபுத்தி ரட்டாதி முதற்காலேழு
நன்றான ரண்டாங்கால் பதினெட்டாகும்
நலமான மூன்றுங்கா லேழாம்பாரு
குன்றான நாலாங்கா லிருபத்தெட்டு
குணமான ரேவதியு முதற்கால்சாவு
அண்டான ரண்டாங்கால் பதினென்றப்பா
அடைவான மூன்றுங்கால் பதினெட்டாமே. (245)

மரணநாளறிய.

ஆமேநீ நாலாங்கா லிருபத்தாறு
அடைவான மரணமென்ற நாள்தான்சொல்வேன்
வாமேநீ அருக்கநாள் பரணியாகா
வளமான திங்கட்சித் திரையுமாகா
தாமேநீ செவ்வாய்க்கு வுத்திராடங்
தயவான புதனுக்கு அஸ்தமாகா
நாமேநீ குருநாள்தான் கேட்டையாகா
நலமான புகர்நாள்பூ ராடந்திதே. (246)

தீதான சனிநாள்ரே வதியுமாகா
தீங்குவரு மிந்நாளில் நோய்கள் கண்டால்
வாதான நமனுக்கு அறுதியாகும்
வந்தநோய் தீராது கொல்லுங்கொல்லுந்
தானான வைத்தியரே நூலைப்பார்த்துத்
தயவாக வைத்தியங்கள் செய்யவேணும்
கோனான போகரிட கடாட்சத்தாலே
கொற்றவனே புலிப்பாணி சொன்னேன்பாரே. (247)

சகலமேகங்களுக்கும் ரசகெந்திமெழுகு.

பாரேநீ ரசகெந்தி ரசகர்ப்பூரம்
பண்பான அரிதார முசிக்காந்தம்
சீரேநீ துருசுதுத்த மிருதார்சிங்கி
சிறப்பான சுக்குடனே ஓமமஞ்சள்
வாரேநீ திப்பிலியு மரத்தைகோஷ்டம்
வளமான வாலுழுவை சோம்புஏலம்
கூரேநீ சாதிக்காய் மிளகுசீரகங்
குணமான கார்போக மாசிக்காயே. (248)

காயான தேசாவரம் வாய்விளங்கம்
களியசம்பு லவங்கமுடன் பரங்கிப்பட்டை
காயான சேங்கொட்டை கடுக்காய்த்தோலும்
கருஞ்சீர கம்காட்டுச் சீரகந்தான்
பாயான சிறுதேக்குத் தாளிசப்பத்ரி
பண்பான முந்திரிகை பிரம்மிமூலம்
வாயான எட்டிவிதை தேற்றான்வித்து
வளமான நீர்ப்பூண்டு எள்ளுமாமே. (249)

ஆமேநற் கொள்ளுடனே தேங்காய்கூட
அடைவான சின்னிவேர் சங்கம்வேரும்
தாமேநீ அமுக்கரா கொல்லன்கோவை
தயவான கொடுவேலி மூலத்தோடு
வாமேநீ வகைவகைக்கு விராகனென்று
வளமான கோழிமுட்டை இரண்டுவாரு
போமேநீ இவையெல்லாம் பொடியாய்ச்செய்து
பொங்கமுடன் கல்லுரலில் போட்டுக்குத்தே. (250)

குத்தப்பா இதுபேரே பனைவெல்லந்தான்
குணமாக நாற்சாம மிடித்துத்திரு
பெத்தப்பா வழித்தெடுத்துச் சிமிழில்வைத்து
பேதமில்லை சுண்டைக்காய் வீதங்கொள்ள
முத்தப்பா மோருஞ்சோ றுண்டுமுன்னே
முசியாம லருந்துநீ மண்டலந்தான்
சித்தப்பா முழுகுநாள் மருந்துண்ணாதே
சிறப்பாகப் பத்தியந்தா னில்லைத்தானே. (251)

தானென்ற வெடிசூலை மேகசூலை
தயவான இடிசூலை புடைக்குஞ்சூலை
வானென்ற துடிவாத சூலையாகும்
வளமான கால்குடைச்சல் கரணைதீரும்
மானென்ற ஆம்புலிப் புருதிமாலை
மதியாத குட்டமொடு விழநீர்தீரும்
கோனென்ற குறைநோயுஞ் சிரங்குந்தீரும்
குணமில்லாப் புழுவெட்டுத் தடிப்பும்போமே. (252)

போமேநீ யோனிதன்னி லிங்கந்தன்னில்
பொலிவாக ஆமையடி சிலந்திமேகம்
தாமேநீ செங்கிரந்தி கருங்கிரந்தி
தயவான அரிகிரந்தி சொரிகிரந்தி
வாமேநீ பருகிரந்தி யிடிகிரந்தி
வளமான யிடிவிழுந்து புரைமேற்புண்ணு
ஆமேநீ அரைக்கடியுக் தண்டிற்புண்ணு
அடைவான குள்ளிமாதேவியாமே. (253)

ஆமேநீ துடைவாழை முட்டுவாழை
அடைவான குழிவாழை முதுகுவாழை
சேமேநீ புழுவாழை புலாவில்வாழை
செயலான தமக்காய்ச் சிலந்தியோடு
ஓமேநீ குழிப்புற்று மற்றப்புற்று
ஒளிவான இடிப்புற்று சுன்னப்புற்று
தாமேநீ பலச்சிலந்திக் கன்னத்தோசை
சதைவளருங் கண்ணுசை போகும்பாரே. (254)

பாரடா பிளவையொடு பிளவைப்பூச்சி
பண்பான ராசனென்ற பிளவையோடு
கூரடா நேத்திரம்மேல் பிளவையோடு
கொடிதுகடிச் சிலந்திபுடைச் சிலந்தியோடு
கோரடா பவுத்திரங்கள் மூலைமூலங்கள்
கொடியாத பதமெட்டுச் சக்கரத்திஞேடு
வீரடா இவைகளெல்லாந் தீரும்தீரும்
விதமான போகருட கடாட்சந்தானே. (255)

பில்லிக்குத் துவாலே.

தானேதா வின்னமொன்று சொல்லக்கேளு
தனிக்காட்டுச் சீரகத்தி னிலையைவாங்கி
வானேதான் கசக்கியதைத் தடவும்போது
வளமான வெடிபில்லி யெரிவுவீக்கம்
கோனேதான் மேலெரிவு தீரும்பில்லி
குணமாகும் பார்வைமுதல் திட்டிதீரும்
ஆமேதான் போகருட கடாட்சத்தாலே
அணியாகப் பாடுகிறேன் புலிப்பாணியாமே. (256)

குமட்டிக்காய்ப் பதங்கம்.

ஆமேகேள் குமட்டிக்காய்ப் பதங்குஞ்சொல்வேன்
அப்பனே தழுதாழை மாவின்பட்டை
காமேநீ கொடிவேலி யமுக்கராவேர்
தயவாகப் பாவட்டை முடக்கற்றானும்
வாமேநீ வெள்ளைச்சா ரணையுங்கூட
வளமான சத்திச்சா ரணையுமாகும்
காமேநீ வகையுடனே நல்லவேளை
நலமான தாதுவளை கடைச்சியாமே. (257)

ஆமப்பா குப்பைமே னியதுகூட
அடைவாகச் சிவன்வேம்பு அவுரிகூட்டி
தாமப்பா வில்வவேர் மாவிலிங்கந்
தயவாக பிரம்பினுட கிழங்கிஞேடு
வாமப்பா வகைவகைக்குப் பலந்தான்வேறு
வளமாகத் தூக்கிச்சூ ரணமேசெய்து
கோமப்பா சரக்குவகை சொல்லக்கேளு
குணமாகப் போகருட கடாட்சந்தானே. (258)

தானென்ற சுக்குடனே கிராம்புவோமம்
தயவான சடாமாஞ்சில் சிறுநாகப்பூ
வானென்ற மிளகுதா ளிசையம்பத்திரி
மைந்தனே திப்பிலிவால் மிளகுகூட்டு
கானென்ற திப்பிலியின் மூலமப்பா
கருவான சதகுப்பை பரங்கிப்பட்டை
கோனென்ற அரத்தையதி விடயங்கூட
குணமான கருஞ்சீர கந்தான்கூட்டே. (259)

கூட்டப்பா வகைவகைக்கு விராகனேந்து
குணமாகச் சூரணமாய்ச் செய்துகொண்டு
நாட்டப்பா இருதூளுங் கல்வத்திட்டு
நலமான திருகுகள்ளிப் பால்தான்கேளு
மாட்டப்பா விராகனிடை பைந்துவாரு
மைந்தனே வேலியென்ற பருத்திச்சாறு
ஆட்டப்பா கொள்ளுமட்டும் விட்டுஆட்டி
அப்பனே மைபோலே யரைத்துலர்த்தே. (260)

உலர்ந்தபின்பு குமட்டிக்காய் கொண்டுவந்து
உத்தமனே விதையதையும் போக்கிப்போடு
அலர்ந்தபின்பு அதிற்செலுத்தி வாயைமூடி
அப்பனே பாண்டத்தி னுள்ளேவைத்து
மலர்ந்தபின்மண் சட்டியில்மண் சீலைசெய்து
மைந்தனே குழிவெட்டிப் புதைத்துக்கேளு
கலந்தபின்பு வெள்ளாட்டு உரிவைகொண்டு
கனமாகப் பாண்டத்தைப் புதைத்துப்போடே. (261)

போடப்பா லகுபுடம தாகப்போடு
பொங்கமுடன் கருகாம லெடுத்துச்கொண்டு
நாடப்பா துளேயெல்லாம் வென்றிற்கொட்டி
நலமாக நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
கூடப்பா சாதிக்காய் விராகன்பத்து
குணமான குங்குமப்பூ விராகன்பத்து
ஆடப்பா பொடியைச்சூ ரணமாய்ச்செய்து
அப்பனே வெருகடியாய்க் கொண்டிடாயே. (262)

கொண்டபின்பு எருமைமோர் சோறுமுண்ணு
கொற்றவனே உப்பதுதான் வறுத்துக்கூட்டு
கண்டபின்பு மற்றதொன்று மாகாதப்பா
கருவான மூன்றுநா ளாறுவேளை
உண்டபின்பு வயிறளைந்தால் நிறுத்திப்போடு
உத்தமனே யிலாவிட்டால் மருந்தையுண்ணு
விண்டபின்பு போகருட கடாட்சத்தாலே
விதமாகப் புலிப்பாணி விளம்பினேனே. (263)

விளம்புகிறேன் நோய்தீரும் விவரங்கேளு
விதமான வாதமொடு வாதசூலை
களம்புகிறேன் காலுகை முடங்கினாலுங்
களவில்லாப் பக்ஷமென்ற வாதம்போகும்
கிளம்புகிறேன் கிரிச்சனமும் பொருமல்தீருங்
கிருபையிலா வயிற்றுவலி குன்மம்போகும்
விளம்புகிறேன் போகருட கடாட்சத்தாலே
விதமாகப் புலிப்பாணி யருளினேனே. (264)

துக்கச் செந்தூரம்.

அருளாலே யின்னமொன்று சொல்லக்கேளு
அடைவான கெந்தகந்தான் விராகனென்று
பொருளான ரசந்துதான் விராகனென்று
பொங்கமுட னிருசரக்குங் கல்வத்திட்டு
மிருளாற்சிற் றாமணக் கெண்ணெய்விட்டு
மீறாமல் மெழுகதுபோ லரைத்துருட்டு
திருளாலே நார்ப்பட்டு மேலேசுற்றி
திறமாஞ்சித் திரமூலப் பட்டை-கேளே. (265)

கேளேநீ பட்டையைத்தான் தண்ணீர்விட்டுக்
கிருபையுடன் அரைத்தெடுத்துக் கவசங்கட்டி
நாளேநீ குகையினுள்ளே சிப்பித்தூளை
நன்றாகத் தான்போட்டு மேலேவைத்துத்
தாளேநீ மேலுமந்தப் பொடியைப்போடு
தயவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
ஆளேநீ புடமாற்றி எடுத்துப்பாரு
அப்பனே செந்தூரம் நல்லதாமே. (266)

ஆமப்பா நோய்களெல்லா மகன்றுபோகும்
அடைவாகத் தேகமது சிவந்துமின்னும்
போமப்பா பெரியோர்கள் கடாட்சஞ்செய்வார்
பொங்கமுடன் தேவதைகள் கிருபைகூருந்
தாமப்பா சிந்தூர முண்டோர்க்கெல்லாந்
தாழ்வொன்றும் வாராது கன்மந்தீரும்
நாமப்பா போகருட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (267)

விளம்புகிறேன் நோய்தீரும் விவரங்கேளு
விதமான வாதமொடு வாதசூலே
களம்புகிறேன் காலுகை முடங்கினாலுங்
களவில்லாப் பக்ஷமென்ற வாதம்போகும்
கிளம்புகிறேன் கிரிச்சனமும் பொருமல்தீருங்
கிருபையிலா வயிற்றுவலி குன்மம்போகும்
விளம்புகிறேன் போகருட கடாட்சத்தாலே
விதமாகப் புலிப்பாணி யருளினேனே. (264)

துக்கச் செந்தூரம்.

அருளாலே யின்னமொன்று சொல்லக்கேளு
அடைவான கெந்தகந்தான் விராகனென்று
பொருளான ரசமதுதான் விராகனென்று
பொங்கமுட னிருசரக்குங் கல்வத்திட்டு
மிருளாற்சிற் றாமணக் கெண்ணெய்விட்டு
மீறாமல் மெழுகதுபோ லரைத்துருட்டு
திருளாலே நார்ப்பட்டு மேலேசுற்றி
திறமாஞ்சித் திரமூலப் பட்டை-கேளே. (265)

கேளேநீ பட்டையைத்தான் தண்ணீர்விட்டுக்
கிருபையுடன் அரைத்தெடுத்துக் கவசங்கட்டி
நாளேநீ குகையினுள்ளே சிப்பித்தூளே
நன்றாகத் தான்போட்டு மேலேவைத்துத்
தாளேநீ மேலுமந்தப் பொடியைப்போடு
தயவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
ஆளேநீ புடமாற்றி எடுத்துப்பாரு
அப்பனே செந்தூரம் நல்லதாமே. (266)

ஆமப்பா நோய்களெல்லா மகன்றுபோகும்
அடைவாகத் தேகமது சிவந்துமின்னும்
போமப்பா பெரியோர்கள் கடாட்சஞ்செய்வார்
பொங்கமுடன் தேவதைகள் கிருபைகூருந்
தாமப்பா சிந்தூர முண்டோர்க்கெல்லாந்
தாழ்வொன்றும் வாராது கன்மந்தீரும்
நாமப்பா போகருட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (267)

கெந்தக ரசாயனம்.

பாடினேன் கெந்தகந்தான் வேணமட்டும்
பாங்காக வாங்கிவந்து சொல்லக்கேளு
ஆடியே கலசமதிற் பசுவின்பாலை
அடைவாகத் தானூற்றிப் புதைத்துப்போடு
கூடியே சிறுகலசந் தமர்கள்போட்டுக்
குணமாகக் கெந்தகத்தை யதற்குளிட்டு
நாடிப்பாற் கலசத்தின் மேலேவைத்து
நாயகனே சில்லிட்டுச் சிலைசெய்யே. (268)

செய்தபின்பு லகுபுடம தாகப்போடு
சிறப்பான கெந்தியது திறமதாச்சு
கொய்தபின்பு அதையெடுத்துக் கழுவிப்போட்டுக்
குழியம்மி தன்னில்நீர்ப் பூண்டின்சாற்றில்
பைதபின்ப தனையரைப்பாய் சாமமைந்து
பாங்காக அதையெடுத்துக் வைத்துக்கொண்டு
செய்தபின்பு விராகனெடை பாதிதானுந்
தீவிரமாய்ப் பனைவெல்லந் தன்னிற்கொள்ளே. (269)

கொள்ளவே மண்டலத்தில் குட்டரோகம்
குணமான வெள்ளையொடு கறுப்புந்தீரும்
தள்ளவே சொரிசிரங்கு மேகரோகந்
தடிப்புடனே செவ்வன்மைக் கடிரணங்கள்
விள்ளவே பத்தியந்தா னிதற்கோஇல்லை
விதமான செய்பாலு தயிர்மோருண்ணு
அள்ளவே போகருட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. (270)

வேதுநீர்.

அருளாலே யின்னுமொன்று சொல்லக்கேளு
அடைவாக ஆலரசு அத்திப்பட்டை
பொருளாலே வகைவகைக்குப் பலந்தான்பத்துப்
புகழ்ந்திடித்துப் பாண்டத்தில் போட்டபின்பு
திருளாமல் பூண்டுடனே சலத்தைவிட்டுத்
திறமாகக் காய்ச்சியதை மேலேவாரு
யிருளாதே யிராறு நாள்தான்வாரு
இதமாக அந்திசந்தி மருந்தையுண்ணே. (271)

உண்ணப்பா சிவகரந்தை மால்கரந்தை
யுடனரைத்துப் புன்னைக்காய் வீதங்கொள்ளு
பண்ணப்பா உள்மூல முளைகளெல்லாம்
பதறியே யோடிவிடும் பரிந்துபாரு
நண்ணப்பா பத்தியங்க ளிதற்கோயில்லை
நாயகனே யீராறு நாளுக்குள்ளே
திண்ணப்பா தீர்ந்துவிடுங் கண்டுபாரு
திறமான போகருட கடாட்சந்தானே. (272)

பயித்தியந்தீர.

தானென்ற சிறுகீரை வேரையப்பா
தானரைத்து எலுமிச்சங் காய்தான்வீதம்
வானென்ற மூன்றுநா ளாறுவேளை
வளமாக வெந்நீரிற் கொடுத்துப்பாரு
கோனென்ற ஆறுநா ளுப்பாகாது
கொற்றவனே யேழுநா ளெல்லாமாகும்
ஊனென்ற பயித்தியந்தான் தீர்ந்துபோகும்
உத்தமனே போகருட கடாட்சந்தானே. (273)

தானப்பா உப்பாகும் நீர்க்கடம்புவேரை
தான்கொடுப்பாய் பயித்தியந்தான் தீரும்பாரு
வானப்பா பூண்டுதும்பை மிளகுசேர்த்து
வளமாக நசியமிட்டு ஆறுவேளை
சீனப்பா மயக்கமுதல் கிறுகிறுப்பு
சிறப்பான அறுநினைவுந் தீர்ந்துபோகும்
ஆனப்பா போகருட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. (274)

சகுனம்.

பாடினே னின்னுமொன்று சொல்லக்கேளு
பண்பில்லாத் தலைவிரித்தல் மொட்டையப்பா
நாடினேன் சகுனி செட்டிதட்டான்
நலமான குயவன்மூக் கரையன்செக்கான்
கூடியே நாவிதனும் பிணிநோயாளன்
குணமில்லாக் கட்டையொடு விலங்குயாக்கை
சூடினேன் கயிறுசக் கிரியுமாகா
சுணைகெட்ட சட்டுச்சோ ருகாதென்னே. (275)

ஆகாது புகையோடீ பின்புதும்மல்
அப்பனே அழுகையொடு முசலுமாகா
வாகாது நீர்ப்பானை யுடைத்தபோது
வழியிலே யடித்துவிழக் காணப்போகா
பாகாது மரம்வெட்டல் அடியுஞ்சண்டை
பண்பான கட்டில்நாற் காலிமுக்காலி
சோகாது இவைமூன்றும் வந்துகண்டால்
சுருக்கப்பா மாணமென்று சொல்லிப்போடே. (276)

போடேநீ தேவதைகள் ராசயானை
பொலிவான பூஷணமாய் பெண்கள்பிள்ளை
நாடேநீ பூரணமாங் கும்பத்தோடு
நலமான தயிரோடு பாலும்பானை
சூடேநீ குதிரையொடு மறையோர்கூட்டஞ்
சுகமான குடைசுருட்டி சிவிகைகள்ளு
ஆடேவெண் சாமரைசு கந்தபுஷ்பம்
அப்பனே வாத்தியங்கள் கேட்கநன்றே. (277)

சுரங்களுக்குக் கியாழம்.

நன்றாக இன்னுமொன்று சொல்லக்கேளு
நலமான தூதுவளை கண்டங்கத்ரி
பன்றாக நிலவேம்பு முத்தக்காசு
பாங்கான ஆடாதோடை விஷ்ணுகாந்தி
குன்றாத பற்படகம் சீந்தித்தண்டு
குணமாஞ்சிற் றாமுட்டி வேரிளுேடு
அன்றாத செந்தொட்டி மூலமப்பா
அடைவான வேம்பினது பட்டைதானே. (278)

பட்டையப்பா முசுக்கைமா துளையின்வேரும்
பாங்கான தும்பைபேய்ப் புடலுங்கூட்டி
நிட்சயமாய் நாய்த்துளசி வேருமையா
நிசமாக வகைவகைக்கு விராகன்பத்து
தட்டையாம் உரல்தனிலே யிடிக்கும்போது
தனியாகச் சரக்குவகை சொல்லக்கேளு
கட்டமாம் தேக்குதா ளிசமாம்பத்ரி
நலமான சுக்குடன்சிற் றரத்தையாமே. (279)

ஆமேதான் தேசாவரந் திப்பிலியப்பா
அடைவாக வகைவகைக்கு விராகன்மூன்று
தாமேதா னிவையெல்லா மிடித்துத்தோண்டித்
தயவாக ஆறுபங்கு வைத்துப்பின்னே
வாமேதான் பாண்டத்தி லெடுத்துப்போடு
வளமாக ரெண்டுபடி சலத்தைவிட்டுப்
போமேதா னெட்டொன்றாய்க் குறுக்கியப்பா
பொங்கமுடன் மூன்றுநாள் கொடுத்திடாவே. (280)

கொடுத்திடுநீ மூன்றுநா ளாறுவேளை
குணமாகும் புளிபுகையு மோருந்தள்ளு
அடுத்திடவே கொடுத்திடுவா யிந்தப்பாகம்
அப்பனே சுரமேக மெல்லாந்தீரும்
கடித்திடுநீ யிதுமிஞ்சிச் சுரமேவந்தால்
கற்பமொன்று சொல்லுகிறேன் கனிந்துகேளு
வடுத்திடுந்திப் பிலிசுக்கு சிற்றரத்தை
வளமான தேசாவரங் கோஷ்டமாமே. (281)

ஆமேதான் தேக்குஅதி மதுரங்கிராம்பு
அப்பனே கருஞ்சீரகம் வாய்விளங்கம்
போமேதான் தாளிசபத் திரியாமாஞ்சில்
பொங்கமுடன் மிளகுடனே அக்கிராகாரம்
அதிவிடய மதிமதுர மாகக்கூட்டி
அடைவாக வகைவகைக்கு விராகன்வாங்கி
வாமேதான் பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு
வளமாகப் பொடிபண்ணி வைத்துக்கொள்ளே. (282)

கொள்ளேநீ யிஞ்சியைத்தான் சுரசஞ்செய்து
குணமாக வெருகடிதான் பொடியைப்போட்டு
அள்ளேநீ மூன்றுநா ளாறுவேளை
அப்பனே கொடுத்தவுடன் சீரும்பாரு
தள்ளேநீ யிதுமிஞ்சி யங்கமானால்
தயவான கோசசன்னி அடுத்ததானால்
சுள்ளேநீ சின்னியுடன் மாவிலிங்கஞ்
சுகமான நொச்சியுடன் முருங்கையாமே. (283)

வாரேதான் முலைப்பாலு முள்ளிப்பாலும்
வளமாக முசுறுமுட்டைப் பாலுஞ்சோறு
கூரேகான் வெள்ளுள்ளித் தைலங்கொஞ்சம்
குணமான பாலுடைய யிண்டுகொஞ்சம்
நேரேதான் கோழியுட முட்டைகொஞ்சம்
நிச்சயமாய்க் கஸ்தூரி ரோசிணையுங்கூட்டி
சாரேதான் கொடுத்திடுவா யாறுவேளை
சாந்தமாய்ப் போகுமடா கண்டுபாரே. (284)

பாரேநீ வலிப்புடைய சன்னிதோஷம்
பறக்குமடா இச்சுரங் கண்டபோதே
தேரேநீ விதியிருந்தால் பிழைக்கும்பாரு
திறமாக சாத்தியம சாத்யங்காணும்
வீரேநீ சத்தியந்தா னிருந்தால்செய்நீ
விதமாய சாத்யமென்றால் சொல்லொணாது
கூரேநீ போகருட கடாட்சத்தாலே
கொற்றவனே புலிப்பாணி பாடினேனே. (285)

பாடினேன் தளமொன்று சொல்லக்கேளு
பாங்காகப் பொன்வெள்ளி பவளஞ்சிங்கி
நாடினே னுமையென்ற வோடுமப்பா
நலமான வில்லோடு விளாவிேனாடு
கூடினேன் கிராம்புஅதி மதுரஞ்சுக்கு
குணமாந்தே சாவரந்திப் பிலியரத்தை
ஆடினேன் உருத்ராக்க மிவையெல்லாந்தான்
அடைவாக முலைப்பாலி லுரைத்திடாயே. (286)

உரைத்தெடுத்து மயிற்பீலி சுட்டசாம்பல்
உட்ன்சத்தி நாவதனில் தளமாய்ப்போட்டு
கரைத்தெடுத்து நாவதனில் சலந்தானூறுங்
கனமில்லா தோஷமது தணியும்பாரு
மறைத்தெடுத்த பேய்க்குமட்டி வேரைத்தட்டி
மைந்தனே கொடுத்துவிடு அடக்கிக்கொள்ளத்
திரைத்தெடுத்த தேகத்தில் வந்ததோஷந்
துன்பமது தான்விலகும் கண்டுபாரே. (287)

### தாகத்துக்குக் கியாழம்.

பாரேதான் விளாவிளையு மாடாதோடை
பாங்கான அரசினிட கொழுந்துமப்பா
சேரேதான் வகைவகைக்குப் பிடிதானென்று
சிறப்பான மணலும்அரைப் படிதான்போட்டுக்
கூரேதான் முத்திரிக்காய் மதுரந்தானும்
குணமாக வகைவகைக்கு விராகனென்று
வீரேதான் இவையெல்லாங் கருகுமட்டும்
விதமாகத் தான்வறுத்துத் தண்ணீர்வாரே. (288)

வார்த்தப்பா தானெரித்துக் குறுகக்காய்ச்சி
வடிகட்டித் தான்கொடுப்பாய் தாகந்தீரும்
கோத்தப்பா இந்தவித மூன்றுநாளுங்
கொடுத்திடவே தாகமென்ற தெல்லாந்தீரும்
பார்த்தப்பா சுரதாக முஷ்ணதாகம்
பரிவாமந் திரதாகம் பாவைதாகம்
போர்த்தப்பா குடிநீரைக் குடித்தபோது
பொங்கமுடன் தீருமடா திண்ணந்தானே. (289)

### வாய்வுகளுக்கு.

திண்ணமாய்ச் சங்கம்வேர் முக்கொழுஞ்சி
திறமான கொடிவேலி பறங்கிப்பட்டை
வண்ணமாய்ச் சுக்குடனே வாய்விளங்கம்
வளமான சிறுதேக்கு கொத்துமல்லி
எண்ணமாய் வகைவகைக்கு விராகன்ரண்டு
இடித்தெடுத்துப் பாண்டத்தி விதமாய்ப்பேரட்டு
நண்ணமாய்ச் சலமதனைப் படிதான்விட்டு
நாயகனே யெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கே. (290)

வாங்கியே மிளகதுவும் விராகனென்று
வளமாகப் பொடிபண்ணி யிதனிற்போட்டு
தங்கிவிளக் கெண்ணெய்துட் டெடைதான்விட்டுத்
தான்கொடுப்பாய் மூன்றுநா ளாறுவேளை
எங்கியே புளிபுகையுந் தள்ளுதள்ளு
இதமான வாய்வுடனே மேகவாயு
வோங்கியே மேல்கடுப்பு புளித்தவப்பம்
ஓடிவிடும் வாயுவெலாந் தீருந்தானே. (291)

சூட்டேக்க நீர்.

தீருமே இன்னமொன்று சொல்லக்கேளு
திறமான இளநீரு படிதான்மூன்று
ஆறுமே சம்பழச் சாறுநாழி
அப்பான சுண்ணநீர்த் தெளிவுதானும்
ஏறுமே படியரைதா னளந்துவாரு
இசையாங்கு மரிச்சாறு பலந்தானும்
வீருமே சீரகமும் பலந்தானென்று
விதமான ஏலமரைப் பலந்தான்போடே. (292)

போடேநீ ஏலமதைப் பொடித்துப்போடு
பொங்கமுடன் புதுச்சட்டி தன்னிற்சேர்த்து
நாடேநீ மணலிட்டு ஈரஞ்செய்து
நாயகனே யிதன்மேலே சட்டிவைத்துக்
கூடேயீ ரச்சிலை யதனால்மூடிக்
குணமாக வைத்திருநீ பகற்காலந்தான்
சாடேநீ ராக்காலம் பனியில்வைத்துச்
சார்வாக மண்டலமுங் கால்தான்கொள்ளே. (293)

கொள்ளவே காற்படிதா னந்திசந்தி
குணமாங்கு மரிச்சாறு பலமுங்கானு
உள்ளேநீ கொண்டுவா இந்தப்பாகம்
உத்தமனே நீரெரிவு ரத்தம்வெள்ளை
தள்ளேநீ யுள்ளெரிவுங் கடுப்புந்நீருந்
தயவில்லாக் காங்கையது தணியும்பாரு
அள்ளேநீ போகரிட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. (294)

வண்டுகடி தடிப்புக்கு சவ்வீரக்களிம்பு.

பாடினே னின்னுமொன்று சொல்லக்கேளு
பண்பான வீரமது விராகனென்று
ஆடினேன் வெண்ணெயிலே போட்டுரைத்து
அடைவாக மேற்பூச வகையைக்கேளு
கூடினேன் மேல்தனிலே மேகத்தாலே
கொற்றவனே சொரிசொரியாய்ப் புள்ளிகாணும்
நாடினே னதையும்வண்டு கடிதானென்று
நாட்டிலே சொல்வார்க ளறிந்துபாரே. (295)

### பூரக்களிம்பு.

பாரேநீ புள்ளியின்மேல் மூன்றுநாள்தான்
பண்பாகத் தான்பூச ரணமதாகும்
சேரேநீ ரசமென்ற பூரமப்பா
செயலாக விராகனெடை வாங்கிவந்து
தீரேநீ பசுவெண்ணெய் விராகனேந்தில்
திறமாகத் தான்போட்டு அரைத்துமைபோல்
வீரேநீ பூசிடவும் ரணங்களாறும்
விதமான போகரிட கடாட்சந்தானே. (296)

### காங்கைக்கு குடிநீர்.

தானேதா னின்னுமொன்று சொல்லக்கேளு
தயவான அறுகின்வேர் நெருஞ்சில்வேரும்
மானேதான் முருங்கையிட ஈர்க்குமப்பா
மைந்தனே வகைவகைக்குப் பிடிதானென்று
வானேதான் பொடிப்பொடியாய் நறுக்கிப்பொன்போல்
வறுக்கையிலே சீரகமும் மிளகும்போட்டு
ஆனேதான் கசகசா விராகன்ரண்டு
அப்பனே தான்போட்டுச் சலத்தைவாரே. (297)

வாரேநீ படிசலந்தா னெட்டொன்றாக்கி
வளமாகப் பசுவெண்ணெய் கழஞ்சுபோட்டுச்
சேரேநீ கொடுத்தவுடன் உஷ்ணக்காந்தல்
சேர்ந்துவந்த வயிற்றுவலி கடுப்புத்தீரும்
கூரேநீ யிந்தவித மூன்றுநாள்தான்
கொடுத்திடவே உஷ்ணத்தின் காங்கைதீரும்
தீரேநீ போகருட கடாட்சத்தாலே
திறமாகப் புலிப்பாணி சொன்னேன்தானே. (298)

### குடைச்சலுக்குத் தைலம்.

தானையா மயிற்பீலி பலந்தான்ரண்டு
தான்போட்டுச் சட்டியிலே கருக்கிக்கொண்டு
வானையா மனோசிலைதான் விராகன்பத்து
வளமாகத் தான்போட்டு வுருகும்போது
சேனையா வேப்பெண்ணெய் படிதான்விட்டுச்
செயலாகத் தானெரித்து எடுத்துக்கொண்டு
மானையா பூசியல்லோ பிடிக்கும்போது
மைந்தனே குடைச்சல்முதல் தீர்ந்துபோமே. (299)

போமேநீ யிலைக்கள்ளி கொண்டுவந்து
பொடிப்பொடியாய்க் கண்டமதாய் நறுக்கிப்போடு
நாமேநீ சலமதுதான் பதக்குவிட்டு
நலமாக எட்டொன்றாய்க் குறுக்கிக்கொண்டு
தாமேநீ சிறுசட்டி தனிலிறுத்துத்
தயவாக வெள்ளாட்டு அமுரிதானும்
வாமேநீ படிரண்டு கூடவிட்டு
வளமாகப் பாகுபோற் காய்ச்சிடாயே. (300)

காய்ச்சியே மேலெங்கும் பூசச்சொல்லிக்
கனிவாக ஆட்டுத்தோல் கலைத்தோல்தன்னில்
ஆச்சியே படுத்திருக்கச் சொல்வாய்நீயும்
அப்பனே சாயரட்சை தன்னிற்கேளு
வாச்சியே நொச்சியிலை முடக்கற்றானும்
வளமாகத் தழுதாழை மாவிலிங்கம்
தாச்சியே மேனியுடன் தும்பைகொண்டு
தயவான பூவரசம் பட்டையாமே. (301)

ஆமேநீ வெட்டியப்பா வட்டைவாகை
அடைவான எருக்கம்பூ கடம்பின்பட்டை
தாமேகாட் டெலுமிச்சை யிலையினோடு
தயவாக உத்தாமணி திருகுகள்ளி
வாமேதான் இலுப்பையிட பட்டைதானும்
வளமான நெல்லுமியு மிவைகளெல்லாம்
போமேதான் சலம்விட்டு வேகவைத்துப்
பொங்கமுடன் மூன்றுநாள் போதுவாரே. (302)

வாரேதான் அந்திசந்தி வார்த்தபோது
வளமில்லாச் சூலையொடு பிடிப்புத்தானும்
மீரேதான் கால்குடைச்சல் கைகுடைச்சல்
மிகுத்ததொரு மேல்கடுப்புக் குத்துத்தீரும்
பாரேதான் சருவாங்க வாதம்போகும்
மாண்பான புடைசூலை சரனைபாதம்
தீரேதான் போகரிட கடாட்சத்தாலே
திறமாகப் புலிப்பாணி சொன்னதாமே. (303)

### மாந்ததோஷத்துக்குக் குளிகை.

தாமப்பா இன்னுமொன்று சொல்லக்கேளு
தயவான வில்வமப்பா விளாவும்வேளை
மாமப்பா நாய்வேளை கஞ்சாங்கோரை
மைந்தனே சின்னியொடு காட்டுமொச்சை
தேம்ப்பா திருநீற்றுப் பச்சைதும்பை
தெளிவான சிறுதும்பை கண்டங்கத்ரி
வாமப்பா அமுக்கரா சங்குதாங்கி
வளமான நுணுவேலிப் பருத்தியாமே. (304)

ஆமேதான் முடக்கற்றான் வெண்காவேளை
அடைவான சாரணையு முட்டைநாறி
தாமேதான் கொழுஞ்சிவேர் புண்ணாக்குப்பூடு
தயவான பிரமியொடு சித்ரமூலம்
வாமேதான் கொவ்வையுடன் மணித்தக்காளி
வகையான கையானுங் கீழ்க்காய்நெல்லி
போமேதான் இந்தவகை மூலமெல்லாம்
பொங்கமுடன் வகைவகைக்குக் கழஞ்சுதூக்கே. (305)

தூக்கப்பா வசம்புடனே ஓமஞ்சுக்கு
துன்பமில்லாச் சதகுப்பை திரிகடுகுகூட
வாக்கப்பா தேசாவர மரத்தைகோஷ்டம்
வளமான சாதிக்காய் வெள்ளைப்பூண்டு
ஆக்கப்பா திரிசுசீ ரகமுங்காயம்
அடர்கோரோ சனைகருஞ்சீ ரகமுமப்பா
தாக்கப்பா வகைவகைக்குக் கழஞ்சியொன்று
தான்தூக்கிக் கல்வத்தி லரைத்திடாயே. (306)

அரையப்பைச் சாறுநாய் வேளைச்சாறு
அடைவான அகத்திச்சா றிண்டம்பாலும்
துரையப்பா சாமமது மயனம்போலே
துருசாக ரண்டுபங்கு ஆக்கியப்பா
விரையப்பா துவரைபோ லுருட்டிப்போடு
விதமாக ஒருபங்கில் விவரங்கேளு
இரையப்பா சுத்திசெய்த வாளத்தானும்
இதமாகக் கடுகுரோ கணியும்பாரே. (307)

பாரப்பா வகைவகைக்குக் கழஞ்சு தூக்கிப்
பாங்காக முன்மருந்தை யிதிலேசேர்த்து
வாரசத்திச் சாறுநில வாகைச்சாறு
வளமாக விட்டரைப்பாய் சாமமூன்று
வீரப்பா துவரைபோ லுருட்டிச்சேர்த்து
விதமாக நிழலுலர்த்தி எடுத்துக்கொண்டு
நேரப்பா குழந்தைகள்தம் பிணிகட்கெல்லாம்
நிச்சயமாய்த் தான்கொடுக்கத் தீரும்பாரே. (308)

பாரப்பைச் சாறுநாய் வேளைச்சாறு
பண்பாந்து ளசிச்சாறு சிறுதும்பைச்சாறு
வீரேதான் எருமுட்டை நாறிச்சாறும்
விதமான காட்டுமொச்சை யிலைச்சாரப்பா
கூரேதான் வயிறுகட்டிப் பிணிநோய்கண்டால்
கொடுப்பாயே நேர்வாளஞ் சேர்த்ததப்பா
தேரேதான் வயிறெடுத்துப் பிணிநோய்கண்டால்
செலுத்திடுகு ளிகைச்சாற்றால் தீருந்தானே. (309)

தீருமே மாந்தத்தின் வகைகள்யாவுந்
திறமான தோஷமொடு வலிப்புக்காய்ச்சல்
ஆறுமே அக்கினியின் மாந்தமப்பா
அன்பில்லா அநேகவித நோயும்போகும்
கூறுமே சிசுவருத்தந் தீர்ந்தோர்க்கெல்லாங்
குற்றமொன்றும் வாராது வறுமைநீங்கும்
வீருமே போகரிட கடாட்சத்தாலே
விதமாகப் புலிப்பாணி பாடினேனே. (310)

பாடினே னின்னுமொன்று சொல்லக்கேளு
பாங்கான அரிதாரக் கட்டியப்பா
கூடிநீ கடுக்காய்த்தோல் நீராலாட்டு
குணமாக மேல்கவசம் வலுக்கச்செய்து
நாடினேன் குகையிலிட்டுச் சில்லுப்போட்டு
நலமாக மண்சீலை வலுக்கச்செய்து
ஆடினே னிரண்டெருவில் புடத்தைப்போடு
அடைவாகப் பற்பத்தை எடுத்துக்கொள்ளே. (311)

கொள்ளேநீ பொடிபண்ணி வைத்துக்கொண்டு
குணமாகத் தேனதிலே விராகன்கால்தான்
அள்ளிநீகொடுத்தவுடன் சுரங்கள்யாவும்
அப்பனே அகன்றோடிப் போகும்பாரு
தள்ளேநீ இருமலொடு பாண்டுசோகை
தயவில்லா எலிகடியுந் தீரும்பாரு
சுள்ளேநீ பித்தமொடு மருளுந்தீருஞ்
சுகமான போகருட கடாட்சந்தானே. (312)

தானப்பா புகையோடு புளியுந்தள்ளு
தயவான வமூநாள் நீரைவாரு
வானப்பா நீலிவேர்க் கியாளங்கொள்ளு
வளமாக மற்றுநா ளெல்லாங்கூட்டு
கோனப்பா குடிலங்க ளொன்றுமில்லை
குணமாகுஞ் சயமுதலாய் சுரங்கள்போகுந்
தேனப்பா போகருட கடாட்சத்தாலே
தெளிவாகப் புலிப்பாணி சொன்னேன்பாரே. (313)

குன்மம்-வாந்தி-ஏப்பம்-வாய்நீரூறலுக்குங் கியாளம்.

பாரேநீ ஏலமொடு நெல்லிமுள்ளி
பாங்கான பசும்பயறு மிளகுகூட்டச்
சேரேநீ நெற்பொரியும் வில்வவேரும்
சிறப்பாக வகைக்குவகை சொல்லக்கேளு
தீரேநீ கண்டரைதான் பலமதாகத்
திறமாகத் தூளாக்கி வைத்துக்கொண்டு
கூரேநீ இரண்டுபங்கு குணமாய்ச்செய்து
கொற்றவனே இளநீரும் நேராம்ரண்டே. (314)

இரண்டான இளநீரின் சலத்திலப்பா
அணுவளவு பிசகாமல் மைபோலாட்டி
கொண்டான பாண்டத்தி லெட்டொன்றுக்கிக்
கொடுப்பாயே ஈராறு வேளைதன்னில்
கண்டான குன்மவகை வாந்தியேப்பங்
கனிவில்லா வாய்நீரும் பொருமல்தீரும்
பண்டான அன்னமது செரிக்கும்பாரு
பாங்கான வரோசியமும் வலிப்பும்போமே. (315)

போமப்பா பத்தியந்தான் சொல்லக்கேளு
பொங்கமுட னுப்பிட்ட பருப்புமாகும்
ஆமப்பா பசுவின்மோர் வெந்நீராகும்
அடைவான தூதுவளை பொன்னாங்காணி
தாமப்பா கொடிவிளங்காய் நெல்லிக்காயுந்
தயவான பசுவின்நெய் தேனுமாகும்
வாமப்பா எழாநாள் சலத்தைவாரு
வளமாக வெட்டாநாள் புளியைச்சேரே. (316)

வயிற்றிரைச்சல் பேதிக்கு.

சேரேநீ யின்னுமொன்று சொல்லக்கேளு
செயலான மிளகுபல மிரண்டுவாங்கி
நேரேநீ வேலியிட பருத்திச்சாறு
நிறையவிட்டு ஊறவைத்து உலரப்போட்டு
கூரேநீ வறுத்துமிகப் பொடியாய்ச்செய்து
கொற்றவனே வெருகடியாய்த் தேனிற்கொள்ள
வீரேநீ வயிற்றிரைச்சல் பேதிநிற்கும்
விதமான பொருமலிட வாயுபோமே. (317)

வயிற்றிரைச்சல்-இரத்தக்கடுப்புக்கு.

போமேநீ இன்னுமொன்று சொல்லக்கேளு
பொலிவாக நீர்ப்பூண்டு பலந்தான்ரண்டு
ஆமேநீ எழுத்தாணி இலையைத்தானும்
அடைவாக ரண்டுபல மெடுத்துக்கொண்டு
தாமேநீ நெய்தனிலே வதக்கிமைந்தா
தயவான ஏலமது விராகனென்று
வாமேநீ சீனிபல மொன்றுகூட்டி
வகையாகத் தானரைத்து எடுத்துக்கொள்ளே. (318)

கொள்ளப்பா முள்ளிக்காய் வீதமாகக்
கொற்றவனே மூன்றுநா ளாறுவேளை
தெள்ளப்பா வயிற்றிரைச்சல் கடுப்புரத்தந்
தெளிவில்லா மூலத்தின் சூடுந்தீரும்
அள்ளப்பா பத்தியந்தா னிதற்கோயில்லை
ஐயனே தயிர்பாலும் நெய்யுங்கூட்டு
விள்ளப்பா போகரிட கடாட்சத்தாலே
விதமாகப் புலிப்பாணி பாடினேனே. (319)

முளைமூலத்துக்குக்-கட்டு.

பாடினே னின்னுமொன்று சொல்லக்கேளு
பண்பான கோவையிட இலையைத்தட்டி
நாடினேன் கம்பஞ்சோ றுக்கிப்பின்னை
நலமாகத் தானுருட்டி நீரைவாரு
கூடினே னெட்டுநாள் கடந்தசோறு
கொற்றவனே முன்னிலையு மெடையாய்ச்சேர்த்து
ஆடினே னாறுநாள் கட்டும்போது
அடியோடே முளைமூல மகன்றுபோமே. (320)

இராமபாணந் துளிகை.

போமேநீ இன்னுமொன்று சொல்லக்கேளு
பொலிவான வெள்ளியுடன் காவிக்கல்லு
ஆமேநீ சரிஎடையாய் நிறுத்துக்கொண்டு
அப்பனே வெற்றிலையின் சாற்றாலாட்டித்
தாமேநீ நாழிகையே முரையுமானால்
தமவாக மிளகதுபோ லுண்டைசெய்து
வாமேநீ சுக்குடைய கியாழந்தன்னில்
வளமாக மூன்றுநாள் கொடுத்திடாயே. (321)

கொடுத்தவுடன் சுரங்களெல்லா மோடிப்போகுங்
கொற்றவனே ஏழாநாள் நீரைவாரு
அடுத்தவுடன் சிறுகீரை மிளகுநீவி
அப்பனே கியாழம்வைத்துக் கொடுப்பாய்நீயுங்
கடுத்தவுட னேழேநாள் புளியைக்கூட்டு
கழிவில்லா வீக்கமது காணுதப்பா
தொடுத்தவுடன் சுரக்குளிகை ராமபாணந்
துளவமணி மார்பரிட சரமுமாமே. (322)

கெந்தக ரசாயனம்.

ஆமேதான் கெந்தகத்தின் ரசாயனந்தான்
அடைவாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
தாமேதான் திரிகடுகு கிராம்புஏலந்
தனிலவங்கப் பட்டையுடன் லவங்கப்பத்ரி
வாமேதான் சாதிக்காய் தாளிசப்பத்ரி
வளமான சிறுநாகப் பூவினோடு
போமேதான் விளாமிச்சின் வேருமோமம்
போலுஞ்சீ ரகங்குரோ சானியாமே. (323)

ஆமடா சிற்றரத்தை சித்ரமூலம்
அடைவான திப்பிலியின் மூலத்தோடு
நாமேபூ லாங்கிழங்கு யானைத்திப்லி
நலமான கருஞ்சீரங் கூகைநீரும்
தாமேநீ முந்திரிகை சந்தனந்தக்கோலங்
தயவான அதிமதுரம் மூத்தக்காசும்
வாமடா சடாமாஞ்சில் கொத்துமல்லி
வசமான பேரீச்சம் பழமுமாமே. (324)

ஆமேநீ திரிபாலை சாதிப்பத்ரி
அடைவான வெட்டிவேர் குங்குமப்பூ
தாமேநீ நிலைப்பனைவேர் அசுவகெந்தி
தயவான நெருஞ்சின்முள்ளி நீர்முள்ளிவித்து
வாமேநீ பூனையென்ற காலிவித்து
வளமாக வகைவகைக்கு விராகனுவு
போமேநீ நிறுத்தெடுத்துப் பொடிபாய்ச்செய்து
பொங்கமுடன் சுத்திகெந்தி பலமும்நாலே. (325)

நாலான பரங்கிப்பட் டைப்பால்சுத்தி
நலமான தூளுபல மிருபதோடு
சேலாஞ் சர்க்கரைபலந்தா னிருபதாகும்
சீனிச்சர்க் கரைபலமே பத்தாமப்பா
பாலான நீர்விட்டான் கிழங்குச்சாறு
படியாறு பாண்டத்திட் டாவிநெய்தான்
மாலான படியொன்று கூடச்சேரு
வண்மையுள தேன்படியொன் றதனிற்கூட்டே. (326)

கூட்டப்பா பாகதுபோல் பதத்தைப்பார்த்துக்
கொற்றவனே இறக்கிவைத்துப் பொடியைப்போட்டு
ஆட்டப்பா கிளறியதை எடுத்துக்கொண்டு
அப்பனே குபக்கலசந் தன்னில்வைத்து
நாட்டப்பா நெற்புடமும் பத்துநாள்தான்
நலமாகத் தான்வைத்து எடுத்துக்கொண்டு
ஊட்டப்பா கழற்சிக்காய் வீதங்கொள்ளு
உத்தமனே தீரும்நோய் விவரங்கேளே. (327)

திருமேவியாதிகள்.

கேளேநீ வாதமது எண்பதுக்கும்
கெடியான பித்தமது நாற்பதுக்கும்
ஆளேநீ கிரிச்சனங்க ளாறுக்குந்தான்
சுகமில்லாக் கிரந்திபதி னெட்டுஞ்சூலே
நாளேநீ குன்மமொடு பாண்டுசோகை
நலமில்லாச் சயரோகம் மேகமெல்லாம்
வாளேநீ அக்கினியின் மந்தந்தீரும்
வளமான பரிதிகண்ட இருள்போற்போமே. (328)

போமடா பத்துநாள் கொண்டபின்பு
பொலிவான பத்தியந்தான் சொல்லக்கேளு
ஆமடா பசும்பயறு துவரையாகும்
அப்பனே தூதுவளை மணித்தக்காளி
தாமடா கத்திரிக்காய் முருங்கைப்பிஞ்சு
தயவான கொத்துமல்லிக் கீரையாகும்
வாமடா புளியுப்பு பசுவினெய்யும்
வளமான மோர்தயிரும் பாலுமாமே. (329)

வலிகளுக்கு சாதிலிங்கக்கட்டு.

ஆமேநீ யின்னுமொன்று சொல்லக்கேளு
அடைவாக அஞ்சண்டம் வெண்கருவைவாங்கிப்
போமேநீ வீரமது பச்சைப்பூரம்
பொலிவான வெடியுப்பு சுண்ணத்தோடு
வாமேநீ வகைவகைக்கு விராகனென்று
வளமாகப் பொடிபண்ணி வெண்கருவிற்போட்டு
ஓமேநீ மஞ்சளுட கருவைப்போக்கி
வுத்தமனே வெண்கருவை யடைத்துவைய்யே. (330)

வையப்பா ஆறுநாள் கடந்தபின்பு
வகையாக லிங்கமது விராகன்பத்து
கையப்பா வெண்கருவில் தோய்த்துத்தோய்த்துக்
கனிவாக ரவிதனிலே கணக்காமபத்து
பையப்பா கருமத்தின் தழைமேற்சுற்றிப்
பாருமணற் புடந்தான்முப் பத்திரண்டு
செய்யப்பா யிந்தவிதந் தோய்த்துச்சுற்றிச்
செயலான ஒன்றெருமுப் பத்திரண்டே. (331)

இரண்டான புடந்தனக்கு உபரியென்று
ரேகிப்பாம் புடம்பத்து ஏற்றிக்கொள்ளு
கண்டான லிங்கமது உருகிக்கட்டுங்
கனிவாகத் தானதையே எடுத்துக்கொண்டு
பண்டான இஞ்சிரசந் தன்னிற்கொள்ளப்
பணவெடைதான் கணக்காக வுரைத்துப்போடு
தெண்டான மூன்றுநா ளாறுவேளை
திண்ணமாய்த் தான்கொடுக்கத் தீரும்பாரே. (332)

தீரும்வியாதிகள்.

பாரேநீ முசல்கண்டன் குமரகண்டன்
பரிவான முசல்வலியன் குதிரைக்குட்டி
சேரேநீ காக்கைவலி புறவீச்சோடு
சிறப்பான உள்வீச்சு சன்னிதோஷம்
கூரேநீ வாலையென்ற பைத்யத்தோடு
குணமான நெஞ்சுமுதல் வாயுக்குத்து
வீரேநீ இவைகளெல்லாந் தீரும்பாரு
விதமான சுடர்கண்ட இருள்போல்போமே. (333)

பாங்கிப்பட்டை ரசாயனம்.

போமப்பா இன்னுமொன்று சொல்லக்கேளு
பொலிவான சங்கம்வேர், சங்கங்குப்பி
ஆமப்பா கொடிவேலி வேரினோடு
அடைவான நிலப்பனைவே ரசுவகெந்தி
தாமப்பா இருகுமிழி நெருஞ்சிவேருந்
தயவான பூவரசம் பட்டையாகும்
வாமப்பா செங்கத்தாரிப் பட்டையோடு
வகைவகைக்குத் தூள்செய்து பலந்தானென்றே. (334)

ஒன்றான திரிகடுகு ஓமங்கோஷ்டம்
உத்தமனே சீரகமு மரத்தையிஞ்சி
நன்றான சிறுலவங்கப் பட்டையோடு
நாயகனே லவங்கமென்ற பத்திரிகூடப்
பன்றான வகைக்குவகை அரைப்பலந்தான்
பரங்கிப்பட் டைபலந்தா னேந்துமாகுங்
கன்றான சர்க்கரையும் பலந்தான்பத்து
கனிவான நெய்தேனும் நாழிவாரே. (335)

வார்த்தேநீ பிசைந்துநன்றாய்க் கலசந்தன்னில்
வளமாகத் தானடைத்து வைத்துக்கொண்டு
பார்த்தேநீ நல்லநாள் தன்னிற்கொள்ளப்
பாங்காக முள்ளிக்காய் வீதமாகச்
சேர்த்தேநீ யந்திசந்தி நாற்பதேநாள்
செயலாகக் கொண்டிடவே தீரும்நோய்கள்
காத்தேபத் தியமிளகு கடுகுமாகா
கனிவான வாழையிலே கரப்பான்தள்ளே. (336)

தள்ளையிலே மேகமெல்லாம் பறக்கும்பாரு
தயவில்லாச் சூலையொடு விரணரோகம்
அள்ளையிலே கிரந்திவகை வாயின்ரோகம்
அடைவான குஷ்டமொடு பிரமியங்கள்
தெள்ளையிலே குன்மமொடு வாயுமூர்ச்சை
தெளிவில்லா வாய்நாற்ற மக்னிமந்தம்
விள்ளுபறங் கிப்பட்டை ரசாயனந்தான்
விண்ணவர்கள் மருந்தென்னக் கொள்ளலாமே. (337)

சீரகச்சூரணம்.

கொள்ளவே யின்னுமொன்று சொல்லக்கேளு
குணமான சீரகமோ பலந்தானைந்து
தெள்ளவே வாங்கிவந்து பீங்கான்தன்னில்
தெளிவாகப் போட்டுபழச் சாறுவாரு
அள்ளவே மிதக்கவிட்டு ஊறவைத்து
அடைவாக நிழல்தனிலே யுலரப்போட்டு
விள்ளவே தானெடுத்து இந்தப்பாகம்
விதமாகத் தான்போட்டு விவரம்பாரே. (338)

பாரேநீ கருப்பஞ்சாறு முசுமுசுக்கை
பாங்காக நெல்லிக்காய்ச் சாறுங்கூடச்
சேரேநீ தூதுவளைச் சாற்றினோடு
செயலான வேம்பின்பட் டைச்சாறுகும்
தீரேநீ தும்பையிலைச் சாறும்விட்டுத்
திறமாக வெவ்வேறு யுலரப்போட்டுச்
சீரேநீ தூளிடித்து வடிதான்கட்டிச்
சீனியது காற்பங்கு கலந்துகொள்ளே. (339)

கொள்ளந்திசந்திநாற் பதுநாட்கொள்ளக்
குணமாக வெருகடிதான் வீதம்பாரு
தெள்ளப்பா பித்தமெல்லா மகன்றுபோகும்
தெளிவில்லாக் கிறுகிறுப்பு வாந்திதீரும்
உள்ளப்பா அக்கினியா மந்தந்தீரும்
உஷ்ணமாங் காங்கையெல்லா மகலும்பாரு
விள்ளப்பா போகரிட கடாட்சத்தாலே
விதமாகப் புலிப்பாணி பாடினேனே. (340)

அரிதார பற்பம்.

பாடினே னரிதாரப் பற்பந்தன்னைப்
பண்பாகச் சொல்லுகிறேன் பரிந்துகேளு
நாடினே னரிதாரக் கட்டிதன்னை
நலமான சுற்சுண்ணந் தன்னில்நீற்றித்
தேடினேன் மேனியிலைக் கல்லுசுண்ணாஞ்
சேர்த்தரைப்பாய் சமன்கொண்டு மைபோலாட்டிச்
சூடினேன் கட்டியின்மேல் கவசங்கட்டிச்
சுகமாக மண்சீலை வலுக்கச்செய்யே. (341)

செய்யப்பா குக்குடத்தில் நீறிப்போகுஞ்
செயமான பற்பத்தை யெடுத்துக்கொண்டு
வையப்பா சயங்கள்விஷ பாகம்பாண்டு
வளமான சுரங்களொடு பித்தரோகம்
கையப்பா எலிகடியும் பயித்யந்தீருங்
கருத்தான பற்பமிது அறிந்துகொள்ளு
நெய்யப்பா போகரிட கடாட்சத்தாலே
நிச்சயமாய் வயித்தியத்தைச் செய்துபாரே. (342)

சகலரோகத்துக்குஞ் சூக்ஷுகுளிகை.

பாரடா ரசமுந்திரி பாலைகெந்தி
பண்பான மிளகுடனே கடுகுஞ்சேர்த்து
நேரடா பொடியாக்கிப் பனையின்வெல்லம்
நேர்சேர்த்துச் சுண்டைக்காய் போலேயுண்டை
வீரடா வொருவுண்டை யுதயந்தன்னில்
விழுங்கிவிட்டுங் கடிகையா நேரஞ்சென்று
சீரடா ஆவின்பால் படியுங்கால்தான்
சிறப்பாகத் தான்குடிப்பாய் திண்ணந்தானே. (343)

தானேதா னிந்தவிதம் நாற்பத்தெட்டு
தயவாக நாட்கொள்ளத் தீரும்நோய்கள்
மானேதான் குஷ்டமொடு குன்மஞ்சூலை
மைந்தனே பெருவயிறு பிரம்மைபித்தம்
கோனேதான் குறைநோவு சொரியுமாறுங்
கொடிதான பத்தியந்தா னில்லைப்பாரு
கானேதான் போகரிட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (344)

பித்த பயித்தியத்துக்குப் பற்பம்.

பாடினேன் நாய்மண்டை மாட்டுமண்டை
பாங்கான மனுஷருட மண்டையோடு
நாடியே சரியெடையாய்க் கல்வத்திட்டு
நலமான கழுதைப்பால் தன்னாலாட்டி
ஆடியே மைபோல வழித்தெடுத்து
அடைவாக வில்லைதட்டி யுலரப்போட்டுத்
தேடியே குக்குடத்திற் புடத்தைப்போடு
தெளிவாகப் பற்பமது தவளமாச்சே. (345)

ஆச்சப்பா கழுதைப்பால் துட்டெடைரண்
டடைவாமிஞ் சிச்சாறு துட்டெடைதான்விட்டு
வாச்சப்பா சர்க்கரை துட் டெடைதான்போட்டு
வளமான பற்பமது கழஞ்சுகூட்டி
யேச்சப்பா கொடுத்துவிடு ஈராறுவேளை
யெழுந்தபித்த பயித்தியமும் பிரமையேவல்
போச்சப்பா தேவதைக ளிதற்கோடு
புதைபில்லி வைப்புமுதல் தீருந்தானே. (346)

பில்லி பயித்தியத்துக்கு.

தானென்ற கழுதையுட இடபாகத்தில்
தான்வளர்ந்த சடையுடனே பாம்புச்சட்டை
மானென்ற வேப்பெண்ணெய் செஞ்சீலைசுற்றி
மைந்தனே சுடரென்ற தயிலம்வாங்கிக்
கோனென்ற வுள்ளுக்குக் காண்டிவீதங்
கொடுத்திடுவாய் மூன்றுநா ளாறுவேளை
தேனென்ற மேலுக்கும் பூசுபூசு
தெளிவாகப் பயித்தியம்பில் லிகள்நாளாறே. (347)

### சகல ரோகத்துக்கும் சித்ரமூல எண்ணெய்.

ஆரூத சூட்டுக்கு எண்ணெய்சொல்வேன்
அடைவாக எள்ளெண்ணெ யாவினெய்யும்
கூரூத வகைக்குவகை படிதான்பாதி
கொடிதான சித்தருட மூலப்பட்டை
நேராத பலமொன்று நீர்விட்டாட்டி
நேராக எண்ணெயிலே கலக்கிப்போட்டு
மீரூத மெழுகுபதந் தனிலிறக்கி
மிஞ்சாமல் துட்டெடைதான் கொண்டுபாரே. (348)

பாரேநீ நாற்பதுநாள் கொண்டபோது
பாங்கான சூடெங்கே மேகமெங்கே
வீரேநீ விப்புருதி கண்டமாலை
விதமான புண்புரைகள் சிலந்திதீரும்
தீரேநீ வாயுவொடு சூலைக்குத்து
திறமான செங்கிரந்தி தடிப்புமாறும்
சேரேநீ பத்தியந்தா னிதற்கோயில்லை
செயலான போகரிட கடாட்சந்தானே. (349)

### ஆக்கிராணம்.

தானுன ஆக்கிராணஞ் சொல்வேன்கேளு
தயவான சுண்டைவேர் சித்ரமூலம்
வானுன அழுஞ்சிவேர் கண்டங்கத்ரி
வளமாந்தூ துவளைமிள கருணைவேளை
மானுன ஆடுதொடா குப்பைமேனி
வளமான வெள்ளைச்சா ரணையும்வேலி
பானுன வகைக்குவகை விராகனென்று
பண்பான வெருக்கிலையின் சுணையும்பாரே. (350)

பாரேநீ சமுத்திராப் பழமுஞ்சுக்கு
பாங்கான அக்கரா காரம்ஓமம்
சேரேநீ அதிவிடையம் அரத்தைசாயஞ்
செயலான திப்பிலியுந் திப்லிமூலம்
வீரேதே சாவரங்கஸ் தூரிமஞ்சள்
வீறுன வால்மிளகு கடல்நுரையுங்கடுகு
தீரேநீ குரோசானி யோமம்ரோகணி
திறமான கருஞ்சீரம் பேரரத்தைகாணே. (351)

காணேநீ வசம்புவெட்பா லரிசியோடு
கனிவான சாம்பிராணி வகைவகைக்குத்
தானேநீ விராகனெடை நிறுத்துக்கொண்டு
தயவாகச் சரக்கெல்லா மொன்றாய்க்கூட்டிப்
பானேநீ யத்தியின்பால் வெள்ளாட்டுநீரும்
பாங்காக பிசரிவைத் துலர்த்திக்கொண்டு
மானேநீ பொடித்துப்பேய்ச் சுரைக்குடுக்கை
மைந்தனே தூளடைத்து வைத்துக்கொள்ளே. (352)

கொள்ளவே பணவெடைதா னுசிக்கேற்றக்
கொற்றவனே சன்னியது விலகும்பாரு
அள்ளவே காகிதத்தில் வைத்துச்சுற்றி
அடைவாக வேப்பெண்ணெய் தன்னில்வைத்து
மெள்ளவே பொருத்தியதை யாற்றிப்போட்டு
மேன்மையாய்ப் புகையதனை நாசிக்கேற்று
தள்ளவே சிரசிலுள்ள வியாதிதீருந்
தலைவலியு மொருதலையி னிடிப்பும்போமே. (353)

போமேநீ நீர்ப்பாய்ச்சல் சயமும் பித்தம்
பொல்லாத கபாலத்தின் சூலைவாயு
ஆமேநீ பீனசமுஞ் சகலதோஷம்
அடைவாமண் டைக்குத்துக் கெற்பநோயுந்
தாமேநீ சிரசிலுள்ள வியாதிக்கெல்லாம்
தாக்கடா இப்புகையைச் சண்ணுஞ்சண்ணும்
மாமேநீ பின்னுமொரு சூட்சஞ்சொல்வேன்
மாறாத ரணங்களுக்கு வழுத்துவேனே. (354)

இரணங்களுக்குப் புகை.

வழுத்துவேன் கண்டத்தின் மேலேயுள்ள
வாயுமுதல் கண்செவியின் நோயுந்தீரும்
பழுத்துவேன் பற்கிட்டுச் சன்னிதோஷம்
பாங்கான முனிகறுப் பெதுவானாலும்
கொழுத்துவேன் பணவெடைஆக் கிராணத்தோடே
குணமான நவச்சாரம் நேரேசேர்த்துச்
சுழற்றுவேன் கற்சுண்ணங் கொஞ்சங்கூட்டிச்
சுறுக்காக மத்தித்து நாசிக்கேற்றே. (355)

ஏற்றேநீ ஆக்கிராணங் கழஞ்சியொன்று
இதமான அரிதாரம் லிங்கம்பூரம்
பாற்றேநீ கொடிக்கள்ளிப் பட்டைத்தூளும்
பாங்கான கழுதைதலத்திப் பொடியுமப்பா
போற்றேநீ வகைவகைக்குக் கழஞ்சுஒன்று
பொங்கமுடன் திருகுகள்ளிப் பாலாலாட்டிச்
சேற்றேநீ யுலரவைத்து எடுத்துக்கொண்டு
செயமான புங்குபுளி தன்னிற்கேளே. (356)

கேளேதான் தணலிலே பொடியேபோட்டுக்
கெடியான புண்களிலே புகைதான்சாரச்
சூளேதான் வெடிசூலே மேகவெட்டை
சுடுகிரந்தி யரையாப்புப் பௌத்திரங்கள்
கோளேதான் இப்புகையில் தீரும்பாரு
கொற்றவனே பொடியெடுத்து அலரிப்பாலில்
நாளேதான் மர்த்தித்து இரணத்திற்போட
நாயகனே ரணங்களெல்லாந் தீருந்தானே. (357)

சூட்டுக்குழகத் தாமரைத்தயிலம்.

தானான எள்ளெண்ணெய் படிதானென்று
தகுகுளிர்தா மரைச்சாறு படிதானென்று
பானான பதந்தனிலே காய்ச்சியப்பா
பக்குவமாய்க் கீழிறக்கித் தானேவைத்து
மானும்பூ லாங்கிழங்குப் பச்சிலேதான்
வகைவகைக்கு விராகனேந்து நிறுத்துக்கொண்டு
தேனகப் பொடிபண்ணித் தூவிப்போட்டுத்
தெளிவாக வடித்திறுத்து முழுகுவாயே. (358)

முழுகையிலே சூடெல்லாந் தணிந்துபோகு
முன்னிலையாக் கண்ணெரிவு குளிர்ச்சியாகும்
பழுகாது திரேகமது பொன்போல்மின்னும்
பண்பான நீர்க்கடுப்பு வினையுந்தீரும்
அழுகாது விந்துவங்கே இறுகும்பாரு
அடைவாக மூலத்திற் சூடும்போகும்
கழுகாது சூலேயுட கருணைவாங்கும்
நலமான போகரிட கடாட்சந்தானே. (356)

வைத்தியமுப்பூ.

தானான வைத்திய முப்பூமார்க்கம்
தயவாகச் சொல்லுகிறேன் தருமமாகக்
கோனான பங்குனிசித் திரையிற்பூநீர்
கொற்றவனே மண்படா தெடுத்துவந்து
மானான நாலுபடி பாண்டத்திட்டு
மைந்தனே கடலுப்புப் படிதான்ரண்டு
வானான சுற்சுண்ணம் படிதான்ரண்டு
வளமான அமுரியது படிதானெட்டே. (360)

எட்டதுதான் வார்த்தபின்பெள் ளெண்ணெயப்பா
இதமாகப் படிஅரைதான் அளந்துவாரு
தொட்டதுதான் கலக்கியதன் தெளிவிறுத்துத்
தோணவே உப்பாகு மட்டுங்காய்ச்சி
விட்டதுதான் அமுரிபடி யெட்டேவிட்டிவ்
விதமாகப் பத்துமுறை காய்ச்சுகாய்ச்சு
பட்டதுதான் குழம்பதுபோ லாகும்பாரு
பாங்கான எருச்சாம்பல் சொல்லக்கேளே. (361)

கேளேதான் எருச்சாம்பல் பரப்பிமைந்தா
கெணிதமுடன் சல்லாவை விரித்துப்போட்டு
நாளேதான் இதில்வாரு இறுகும்போது
நலமாக உண்டையதா யுருட்டிப்போடு
சூளேதான் ரவியில்வைத்து எடுத்துக்கொண்டு
சுகமாக நெறிபிசறி ஒருபாண்டத்தில்
வாளேதா னரைப்பாண்ட மதனில்விட்டு
வளமாக அதன்மேல்மல் லிகையிலையே. (362)

மல்லிகையி னிலைபரப்பி யிந்தஉண்டை
மைந்தனே மேல்வைத்து இலைபால்மூடி
அல்லியே யதின்மேலே நெல்லிட்டப்பா
அடைவாச்சட் டியைமூடி யெரியவைநீ
வல்லியே நெல்லுவெந்த பின்னெடுத்து
வளமாகச் சிப்பிநூ றிறைச்சிபொக்க
கல்லிலே துவாரமிட்டுச் சொல்லக்கேளு
கருத்தாவி ரம்பச்சைப் பூரந்தானே. (363)

தானான பூரமுடன் பூநீறப்பா
தயவாக வகைவகைக்கு விராகன்மூன்று
கோனான இவைநான்கும் பொடியாய்ச்செய்து
கொற்றவனே சிப்பியுட துவாரந்தன்னில்
மானான சிப்பிதொறுங் கொஞ்சம்போடு
மைந்தனே சட்டியின்மேல் பரப்பிவைத்துப்
பானான செயநீரும் இறங்கும்பாரு
பாங்காக இதையெடுத்துப் பதனம்பண்ணே. (364)

பண்ணப்பா நாதவிந்து ரண்டுதானும்
பண்பான இளநீருஞ் சமனாய்ச்சேர்த்து
நண்ணப்பா பாடுவண்டு உரமுஞ்சூதம்
நலமாகக் கருநாவி பச்சைபூரம்
உண்ணப்பா ஆறுபுள்ளி வண்டின்முட்டை
உத்தமனே சீனமுடன் சாரமப்பா
வண்ணப்பா வகைவகைக்குப் பணவெடைதான்
வ்கையாகப் பொடித்திளநீ ரதனிற்போடே. (365)

போடேதான் றெளியவிறத் துண்டைதன்னைப்
பொங்கமுடன் இளநீரால் சாமமாட்டி
யாடேதான் வில்லைதட்டி ரவியிற்போட்டு
அடைவாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
நாடேதான் பேரண்டம் பொடியதாக்கி
நலமான ஒட்டின்மேல் பரப்பிவைத்துக்
கூடேதான் அதன்மேலே வில்லைவைத்துக்
குணமாக அதன்மேலே பொடியைப்போடே. (366)

போடப்பா மேல்மூடிச் சீலைசெய்து
புனிதமுடன் பத்தெருவில் புடத்தைப்போடு
காடப்பா இம்முறையால் ஐந்துபோடு
கசடறவே சுண்ணமா யிருக்கும்பாரு
பாடப்பா பேரண்டஞ் சிற்றண்டத்தோடு
பங்கான சிப்பியுநண் டோடுநத்தை
மாடப்பா இதையெல்லாம் வெவ்வேறாக
மைந்தனே சிற்றண்டக் கருவாளட்டே. (367)

ஆட்டியே யுலரவைத்து உலையிலூத
அப்பனே அஞ்சுதான் சுண்ணமாகும்
நாட்டியே அஞ்சுசுண்ணஞ் சமனுய்க்கூட்டி
நலமாக முன்விட்ட செயநீர்விட்டுக்
கூட்டியே தானரைத்துக் குகைபிடித்துக்
குணமாகச் சில்லுசெய்து முன்சுண்ணத்தை
வாட்டியே செயநீரால மைபோலாட்டி
வளமாகத் தான்ரவியி லுலரப்போடே. (368)

போடேநீ அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துப்
போதகமா யஞ்சுண்ணஞ் சில்லுப்போட்டு
ஆடேநீ சுண்ணும்புச் சீலைசெய்து
அடைவாகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
நாடேநீ அஞ்சுதா மிந்தப்பாகம்
நலமாகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
மாடேநீ நாதாக்கள் சாபந்தீர
மைந்தனே ஆத்தாளைப் பூசைபண்ணே. (369)

பண்ணவே சுண்ணத்தால் சுண்ணமாகும்
பாங்கான சிந்தூரம் மெழுகுமாகும்
நண்ணவே கட்டினமு முருக்கினமுமாகும்
நலமான சரக்கெல்லாம் பற்பமாகும்
உண்ணவே லேகியங்கள் கிருதம்எண்ணெய்
உத்தமனே யவிழ்தமென்ற வகைகட்கெல்லாம்
எண்ணவே பணவெடைதான் கூட்டவேண்டு.
மிலேயென்று லவிழ்தமது வீறில்லாதே. (370)

இல்லாத நோய்களது சடத்தின்மேவு
மேதென்றால் பஞ்சபா தகத்தால்காணும்
பொல்லாத கன்மவினை தீருதற்குப்
பூட்டுகிறேன் சாந்தியொன்று சொல்லக்கேளு
வல்லான ஓடுநீர் கலசந்தன்னில்
வளமாகக் கொண்டுவந்து தர்ப்பைபோட்டுச்
சொல்லான கலசத்தை மேலேவைத்துச்
சொகுசான அக்குமணி சேர்த்துக்கட்டே. (371)

கட்டப்பா மாவிலையை மேலேவைத்துக்
கலவான மஞ்சளைத்தா னரைத்துஅப்பிப்
பட்டான முக்கோணக் கலசத்துள்ளே
பாங்காகத் தானிட்டுச் சிகாரம்நாட்டி
மட்டான நோயாளி தன்னைத்தானு
மன்னவனே முன்வைப்பாய் மதியந்தன்னில்
வட்டப்பா தூபமொடு தீபங்காட்டி
வளமான வில்வமது நூற்றெட்டாமே. (372)

ஆமப்பா ஓமமொன்று அர்ச்சனைசெய்
தடைவாகக் கலசநீர் சிரசில்வார்த்துத்
தாமப்பா ஒருசிரங்கை யுள்ளுக்கீந்து
தயவாக வில்வமது மூன்றுநாட்கொள்
ஓமப்பா அருக்கன்முதல் சனிநாள்மட்டு
மொடுக்கமா யிப்படியே செய்தாயானல்
போமப்பா பஞ்சபா தகங்களியாவும்
பொல்லாத பிரமைபிணி யேவல்போமே. (373)

நோய்ச்சீதும் பேய்க்கும் ஓமசாந்தி.

போமேதான் ஓமத்தின் சாந்திகேளு
பொங்கமுட னைந்துபடி யரிசிகொட்டி
ஆமேதான் பச்சரிசி மேலேகேளு
அடைவான திரிகோணம் விந்துப்போட்டுத்
தாமேதான் றீங்கார முள்ளேபோட்டுத்
தயவாகக் கும்பமைந்தில் தனிநூல்சுற்றி
வாமேதான் சலமதுதா னிறையவிட்டு
வளமான சொர்னமொன்று கூடப்போடே. (374)

போடப்பா இருபத்தைந் தரையுமாறிப்
பொங்கமுடன் மாவிலையுந் தேங்காய்வைத்து
ஆடப்பா சந்தனத்தைக் கரைத்துச்சார்த்தி
அட்சதையும் சுகந்தபரி மளங்கள்பூசி
நாடப்பா பட்டுவஸ்தி ரங்கள்சாத்தி
நலமான புட்பமர்ச் சனையேசெய்து
ஈடப்பா பழந்தேங்காய் தாம்பூலங்கள்
இதமான பலகார மிளநீர்பாலே. (375)

பாலுடனே பானக்கம் வஸ்துவோடு
பரமானம் அவலுடனே சுத்தியண்டம்
ஏலுடனே பொரிகடலேச் சர்க்கரைவிளக்கு
இதமான வெண்ணெய்பொங்கல் பசும்பருப்புச்
சேலுடனே யித்தனையு மிலேதான்போட்டுச்
செப்பமுடன் பரிமாறித் தூபம்போடு
மாலுடனே ஓமகுண்டஞ் சமிதைகேளு
மைந்தனே மாவிலிங்கம் விளாத்தியாமே. (376)

ஆமேநீ வில்வமொடு எட்டி நொச்சி
அடைவான மாவோடு ஓமம்நெய்யாய்த்
தாமேநீ அக்கினிரு மகாவென்றேதான்
தயவாகச் சமித்துக்கா யிரத்தெட்டோதிப்
போமேநீ யெள்ளுளுந்து கடலேமொச்சை
பொலிவான துவரைபசும் பயற்றிஞேடு
வாமேகா ராமணியும் அரிகோதும்பை
வளமாக ஒன்பதையும் ஓமம்பண்ணே. (377)

பண்ணப்பா தேன்பாலு வஸ்துசுத்தி
பாங்கான பழந்தேங்காய் பலகாரங்கள்
நண்ணப்பா யிளநீர்சர்க் கரைபானக்கம்
நலமான தயிர்ச்சோறு நெற்பொரியுங்கூட
வண்ணப்பா அக்கினிக்கா குதியேபண்ண
வஞ்சனையு முறைப்பாடுந் தேவர்குற்றம்
ஒண்ணப்பா அசுத்தசுத்த கணமும்பூதம்
உத்தமனே பஞ்சபா தகமும்போமே. (378)

போமடா பில்லிவஞ் சனையும்ஏவல்
பிரமையொடு வியாதிமுதல் பசாசுபேயும்
ஆமடா முனிகறுப்பு லாடன்காட்டேரி
அடைவான பேய்ச்சிகக் திருவர்மூர்த்தி
தாமடா சாத்தனெடு இருளனையன்
தயவறுசப் பாணியிரு தலையின்கொள்ளி
ஓமடா பின்னும்வெகு பசாசாளுலும்
ஓமத்தில் ஓடிவிடுங் கண்டுபாரே. (379)

கண்டுநீ கும்பமமைந்து தூபதீபம்
கனிவாகத் தான்கொடுத்துச் சோடசஞ்செய்
பண்டுமுன்னே நோயாளி தனக்குமப்பா
பாங்காகக் கலசநீர் சிரசில்வார்த்துக்
கொண்டல்லோ அவுஷதங்கள் கொடுக்கச்செய்நீ
குற்றமெல்லாந் தான்தீர்ந்து வியாதிபோகும்
தொண்டுசெய்வா ரனைவோருஞ் சமர்த்தனென்று
தொல்லுலகில் செல்வமதாய் வாழ்வாய்தானே. (380)

கழிப்புச்செய்யும் விதம்.

தானென்ற கழிப்புக்குச் சொல்லக்கேளு
தயவாகப் பச்சைமாப் பாவைசெய்து
வானென்ற புதுமுறத்துக் குள்ளேயேத்து
வளமாக ஆபரணந் தன்னைப்போட்டுக்
கோனென்ற முப்பத்தி ரண்டுதீபங்
குறையாமல் நவரத்நஞ் சொர்னம்வைத்து
வானென்ற வஸ்திரபரி மளங்கள்சாத்தி
மைந்தனே சுகந்தபுஷ்பம் வாடைதூவே. (381)

இரத்தசாமுண்டி சக்கரம்.

தூவடா ரத்தசா முண்டிசக்ரந்
துலங்கவே பாவைமுன் எண்கோணம்போட்டு
மாவடா தானெடுத்து ரேகைபோட்டு
மைந்தனே எட்டறையில் கரியேதூவு
நாவடா நாலறையி னுட்கோணத்தில்
நலமான திருச்சூரணந் தன்னைத்தூவு
வாமடா உட்சதுர மஞ்சள்தூவு
வளமான முக்கோணம் பச்சையாமே. (382)

ஆமேதான் முக்கோணம் ஸ்ரீங்காரம்போ
டடைவான நாவரையில் அம்-ஓம்-தம்-தம்மென்று
தாமேதான் நாவரையில் ஒங்காரம்கட்டித்
தலைசுழித்துச் சூலமிட்டுத் தயவதாக
வாமேதான் கருப்புவண்ணம் அரைகளெட்டும்
வளமாக அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ என்ன
போமேதான் எட்டுமுனை சூலம்போடு
பொங்கமுடன் களபமுதல் சுகந்தஞ்சாத்தே. (383)

சாத்தப்பா ஏட்டுமுனைச் சக்கரத்தில்மூன்று
சார்வான பழக்தேங்காய் தாம்பூலங்கள்
மாத்தப்பா பலகார வகையுமன்னம்
வஸ்துசுத்தி கடலைபொரி யண்டத்தோடு
போத்தப்பா இளநீர்தேன் பானக்கம்பால்
பொங்கமுடன் மஞ்சள்நீர் கரித்தண்ணீரும்
ஏத்தப்பா கடலைமொச்சைப் பயற்றுச்சுண்டல்
இதமாக வெண்ணெயுஞ்சர்க் கரையும்வையே. (384)

வையப்பா பச்சைமா விளக்கிளுேடு
வளமாக இத்தனையு முன்னேவைத்துக்
கையப்பா புதுப்பானை வாயைத்தட்டிக்
கனிவான சுண்ணும்பை மேலேபூசிப்
பையப்பா கரிப்பொட்டு மேலேகுத்திப்
பாங்காகப் புழுங்கரிசிச் சோற்றைப்போட்டு
மையப்பா உளுந்தென்ற பருப்புங்கூட
மைந்தனே கத்தரிக்காய் கருவாடாமே. (385)

ஆமேநீ முருங்கைக்காய் மொச்சைச்சாறு
அடைவான புண்ணுக்குக் கீரையோடு
வாமேநீ வஸ்துவுடன் சுத்திகூட
வளமான பஞ்சவண்ணச் சோறும்வைத்து
தாமேநீ பழங்தேங்காய் தாம்பூலஞ்சுற்றித்
தயவாக ஓட்டிவிட்டுப் பாவைமுன்பு
போமேநீ யெட்டிமா விலிங்கம்ரண்டும்
பொங்கமுடன் வேப்பெண்ணெய் மிளகாயாமே. (386)

ஆமப்பா சொர்னபுஷ்ப மவர்க்குவைத்து
அடைவான தீபமொடு தூபங்காட்டித்
தாமப்பா சோடசோப சாரஞ்செய்து
தயவான வைத்திய மானபின்பு
வாமப்பா பாவையைத்தான் தலையைச்சுற்றி
வளமாக ஓடடையுந்தான் தலையைச்சுற்றிப்
போயப்பா காடுதன்னில் மயானந்தன்னில்
பொங்கமுடன் முப்பலியுங் கொடுத்துவையே. (387)

வைத்தவுடன் பில்லிசூ னியங்களேவல்
வலுவான பேய்பூதங் கறுப்புமாடன்
இத்தமுடன் முனிவீரன் இருள்காட்டேரி
இதமான மலக்குடனே சின்னுபீரும்
பத்தவுடன் பிரமராட் சதையும்பேயும்
பாங்கான சாத்தனொடு மாடன்பின்னும்
கத்தவுட னிருதலையின் கொள்ளியோடு
கருமுறையுந் தேவதைக ளோடிப்போமே- (388)

சிதம்பரமெழுதிக்கட்ட.

போமேநீ சிதம்பரத்தை யெழுதிக்கட்டப்
போகுமடா நோய்பிணியும் பஞ்சபாவம்
ஆமேநீ பிராமணர்க்கு அன்னம்போடு
அபிஷேகஞ் சங்கரற்குத் தீபம்வற்று
தாமேநீ மகேஸ்பரர்க்குப் பூசைசெய்வாய்
தயவுடனே நந்திக்குச் சலத்தைவாரு
வாமேநீ யரசுடனே வேம்புசுற்றி
வயிரவற்கும் வடைமாலை சாத்தநன்றே. (389)

பில்லிவஞ்சனையும்நோயுந்தீர்ப்பதற்குக் கிரியை.

நன்றான பில்லிவஞ் சனையும்நோயும்
நாயகனே தீர்ப்பதற்குச் சொல்லக்கேளு
குன்றாத மாவிலிங்கங் குப்பைமேனி
குணமாக மூடக்கற்றான் இவைகள்மூன்றும்
பண்டாக வகைவகைக்குப் பலம்பத்தாகப்
பாண்டத்தி லதனைவிட்டுத் தூணிநீரில்
துண்டாக வேகவைத்து விரல்பொறுக்கத்
தும்பையலர் மேலிடவே பிணிகள்போமே. (390)

வேதுதண்ணீர்.

போமேநீ பூவரசு ஆலின்பட்டை
பொங்குகடப் பன்பட்டை மூன்றுமாக
ஆமேநீ வகைவகைக்குப் பலந்தான்பத்து
அடைவாகத் தூணிநீர் தன்னிற்காய்ச்சித்
தாமேநீ மேலிடவே பிணிநோய்தீருந்
தயவான பில்லிவஞ் சனையுந்தீரும்
போமேநீ அறுகம்புல் சம்புகோரை
புகழ்பெறவே முன்போல பிணிகள்போமே. (391)

ஏவல்தீர்க்க.

போமடா கண்டங்கத் தரியின்மூலம்
பொங்கமுடன் காட்டுச்சி ரகத்தின்மூலம்
வாமடா பிரமரா்ட் சதையின்மூலம்
வகைவகைக்குப் பலம்நூறு நிறுத்துக்கொண்டு
தாமடா வெவ்வேறு பாண்டத்திட்டுத்
தயவான நூணிநீர் தன்னைவார்த்து
நாமடா வெந்திறக்கித் தினமொன்றாக
நலமாகத் தான்வார்க்க ஏவல்போமே. (392)

இரத்தசாமுண்டி மந்திரம்.

போமப்பா ரத்தசா முண்டிமந்த்ரம்
பொங்கமுடன் ஓம்ரீயும் ரத்தசாமுண்டி
ஆமப்பா தருதருமடிமடி சித்திகுருகுருஸ்வாகாவென்
றடைவாகச் சக்கரத்தா யிரந்தானேது
நாமப்பா பில்லிவஞ் சனையுமநோயும்
நலமான தேவரொடு கணங்கள்பூதம்
வாமப்பா பஞ்சபா தகங்கள்யாவும்
வலுவான ராட்சதையும் விலகும்தானே. (393)

ஆடாதபேய்ஆட.

தானென்ற பேய்மிரட்டி யிலையின் தூளுந்
தலைப்பிள்ளை கொடித்தூளுந் சமனுப்சேர்த்துப்
பானென்ற இவையுடன்சாம் பிராணிசேர்த்துப்
பாங்காகப் புகைபோடப் பிசாசுஆடும்
கோனென்ற ஓவாவா வென்றுஓதக்
கொற்றவனே பூதமெல்லா மாடும்பாரு
தேனென்ற போகரிட கடாட்சத்தாலே
தெளிவாகப் புலிப்பாணி பாடினேனே. (394)

கணங்கள் பில்லி வஞ்சனைபோக தீபம்.

பாடினேன் மேனிவேர் முட்டையோடு
பாங்கான கழுதையுட தண்டுங்கூட்டி
நாடினேன் கருச்சீலை தனிற்சுருட்டி
நற்கழுதை நெய்யாதல் வேட்பெண்ணெயாதல்
கூடினேன் சிரசோடு கிளிஞ்சியாதல்
குணமாகத் தீபமிட்டுப் பார்க்கும்போது
ஓடினே னென்றுசொல்லிக் கணங்கள்யாவும்
உத்தமனே பில்லிவஞ்ச னையும்போமே. (395)

### பயித்தியத்திற்கு.

ஷோமடா கோசலமும் பசுவின்பாலும்
பொங்குகரிப் பான்சாறு முசுமுசுக்கை
தாமடா வகைவகைக்குப் படிதானென்று
தயவான எள்ளெண்ணெய் படிதானென்று
ஆமடா கடுகுபதங் தன்னிற்காய்ச்சி
அடைவாக மூழ்கிவரப் பிரமைபித்தம்
சாமடா பயித்தியஞ்செய் வினையுந்தீருஞ்
சற்குருவாம் போகரிட கடாட்சந்தானே. (396)

### சகலபேய்க்குங் குளிசம்.

தானப்பா பிரமராட் சதையின்பூடு
தயவாக வெள்ளிநாள் காப்புக்கட்டி.
வானப்பா பஞ்சவண்ண நூலினாலே
வளமாகக் கட்டிக்கோ சலத்தைவாரு
மானப்பா எட்டுநா ளந்திசந்தி
மைந்தனே வார்க்கையிலே தியானமோது
ஆனப்பா அரிபிரம ராட்சதையென்
றானந்த வல்லியென்றும் நூற்றெட்டோதே. (397)

ஓதடா முப்பலியும் பொங்கலிட்டு
உத்தமனே நடுச்சாமந் தன்னில்தானும்
வாதடா நிருவாண ரூபங்கொண்டு
வண்மையுடன் ஆணிவே ரறுமல்லியும்
ஆதடா எடுத்துவந்து குளிசங்கட்ட
அடைவான பிரமராட் சதையுமேவல்
நாதடா முனிகருப்புப் பேயின்பூதம்
நலமான தேவனோடு ஓடிப்போமே. (398)

### பேய்பூதம் ஓடிப்போக மை.

போமடா இன்னுமொரு மையைக்கேளு
பொங்கமுடன் பன்றியுட மூஞ்சியொன்று
ஆமடா நாய்ப்பல்லு புலியுண்ணுக்கு
அடர்கழுதை மண்டைகரும் பூனையிரல்
வாமடா மனுஷர்மலங் கீட்டுச்சீலை
வளமாக நொறுக்கியப்பா பாண்டத்திட்டுத்
தாமடா குழித்தைல மாவாரைக்காஷ்டத்
தாலெரித்துக் குப்பியிலே அடைத்துக்கொள்ளே. (399)

கொள்ளப்பா மயானத்திற் பாழ்விடாதல்
　　கோரிவிடு குட்டிச்சுவர் தன்னிலாதல்
வள்ளப்பா வஸ்துடனே நெற்பொரியும்வைத்து
　　வளமில்லா எருக்கம்பூ அரும்பினாலே
மெள்ளப்பா நூற்றெட்டு உருத்தானோதி
　　மேன்மையாய் ஆத்தாளைத் தியானித்தேநீ
அள்ளப்பா தூம்தூம்தூசி தூசிசீசீபோபோவென்று
　　அடைவாகத் தைலத்தி னருமைபாரே. (400)

பாரேநீ திலதமிடப் பில்லிவஞ்சனை
　　பறக்குமடா தேவரொடு கணங்கள்பூதம்
நேரேநீ முனிகருப்பு பேய்பசாசு
　　நேரில்லாச் செய்வினையும் பயித்யந்தீரும்
சீரேநீ நெறிகட்டால் வாசல்மேலே
　　செயலாகப் பொட்டிடச்சொற் பனங்கள்கோடி
வேரேநீ வெடியிடுக்கில் தடவினாக்கால்
　　வீரான குறிமுகந்தான் சொல்லநன்றே. (401)

சொல்லான வெடிப்பிருந்த பொட்டினாலே
　　சொற்பெரிய சொற்பனங்கள் தீரவேண்டில்
அல்லான பொட்டைமிகச் சுரண்டியப்பா
　　அடைவாக முறந்தனிலே சிந்தாமற்றான்
வல்லான சாணியிட்டு மெழுகிநன்றாய்
　　வளமாகப் பசுவின்பால் கொண்டுதேய்நீ
சொல்லான வல்லாங்கால் படாநிலத்தில்
　　சூரையாய்க் கொட்டிவிடு சொற்பனம்போம். (402)

அக்கினிப்பிளாஸ்திரி.

போமென்று அக்கினிப்பிளாஸ் திரியைக்கேளு
　　பொங்கமுடன் மெழுகதுவும் விராகன்பத்து
ஆமென்று பாண்டத்தி லிட்டுமைந்தா
　　அடைவாக வீரமைந்து பொடித்துப்போடு
தாமென்று உருகையிலே விளக்கெண்ணெய்விட்டுத்
　　தானுருக்கி வடிகட்டிச் சலத்தில்வாரு
வாமென்று அதையெடுத்துச் சிமிழில்வைத்து
　　வளமாகச் சல்லாமேல் தடவிவையே. (403)

தடவியே கைகால்குத் தெடுக்குந்தேகந்
தயவாக எலுமிச்சம் பழச்சாறுபூசி
அடவியே சாரத்தைப் பொடித்துத்தூவி
அடைவான பிளாஸ்திரியை அளவாய்ப்போட்டு
மடவியே கட்டிடவே பொறுக்கொணாது
மயக்குஞ்சோ பங்கண்டா லவிழ்த்துப்போடு
கடவியே கொப்பளித்துச் சலமதாகுங்
கத்தரித்து விட்டுவிடு நீருபோமே. (404)

இரணமாறுகிற பிளாஸ்திரி.

போமேநீ வலிக்குத்துத் தீர்ந்துபோகும்
பொங்கமுடன் ரணமாறப் பிளாஸ்திரிசொல்வேன்
ஆமேநீ வெள்ளையென்ற குங்கிலியந்தன்னை
அடைவான மெழுகுடனே சமனுய்ச்சேர்த்து
வாமேநீ பாண்டத்தி லுருகும்போது
வளமான தேங்காயின் நெய்யைவார்த்து
நாமேநீ யுருக்கிவடி கட்டிநீரில்
நலமாகத் தான்வார்த்து எடுத்துக்கொள்ளே. (405)

கொள்ளப்பா சிமிளில்வைத்துப் பதனமாகக்
கொற்றவனே சல்லாவஸ் திரத்திற்பூசி
அள்ளப்பா அனல்தனிலே காட்டிக்கட்ட
அடைவில்லா ரணங்களெல்லா மாறிப்போகும்
மெள்ளப்பா சிரங்குபுண்ணில் பிளாஸ்திரிபோட
மேன்மையா யொடுங்கியது உதிர்ந்துபோகும்
தெள்ளப்பா போகரிட கடாட்சத்தாலே
தெளிவாகப் புலிப்பாணி பாடினேனே. (406)

பிளாஸ்திரி.

பாடுகிறே னின்னுமொரு பிளாஸ்திரிகேளு
பாங்கான விளாம்பிசினுங் கருங்குங்கிலியம்
நாடுகிறேன் சமன்கொண்டு உருகும்போது
நலமான விளக்கெண்ணெய் கூடவிட்டு
ஆடுகிறேன் வடிகட்டிக் கலசந்தன்னில்
அடைவாகத் தானெடுத்துத் துணியிற்பூசிச்
சூடுகிறேன் ரணங்கள்மேல் போடஆறுஞ்
சுகமாக அனல்காட்டிப் போட்டிடாயே. (407)

போட்டிடவே இன்னுமொரு பிளாஸ்திரிசொல்வேன்
புகழ்பெரிய மாத்துவெள்ளை பலந்தானைந்து
கூட்டிடுவாய் பூரமெடை விராகனைந்து
கூட்டியே தானரைத்துப் பொடியாய்ச்செய்து
மாட்டிடுவாய் தென்னங்கா யெண்ணெயாலே
மைந்தனே தானரைத்துத் தண்ணீர்விட்டு
ஆட்டிடுவாய் தவளம்போ லாகுமட்டும்
அப்பனே புண்மேலே போடப்போமே. (408)

மேகராஜாங்கத்தெண்ணெய்.

போமென்ற மேகரா சாங்கத்தெண்ணெய்
பூட்டுகிறே னன்றாகப் புகலக்கேளு
ஏமென்ற ஏரண்டத் தெண்ணெய்படிநாலு
இதமாக ஈருள்ளிச் சாறுபடி ரண்டு
ஆமென்ற கழுதைலத்திச் சாறுபடிரண்டு
அடைவாக வரிக்குமட்டிச் சாறுபடி ரண்டு
வாமென்ற கையான்புளி யாரைசங்கு
வல்லாரை பிரமிபொடு தலைசெருப்படியே. (409)

படியான கருநொச்சி பொன்னாங்காணி
பாரிநுணா ஆதொண்டை கிரந்திப்பூண்டு
செடியான வெள்ளறுகு சிவனார்வேம்பு
செயலான வகைவகைக்குப் படிதான்ரண்டு
கெடியான சாறெல்லா மெட்டொன்றாக்கிக்
கெணிதமாய் வேருவகை சொலலக்கேளு
பிடியான கொடிவேலி பூவரசன்வேரும்
பொங்குநில வாகைசுடு தூரத்தம்வேரே. (410)

வேரான கிளிமூக்கின் கிழங்கினோடு
விதமான அப்பையுட கிழங்குங்குப்பி
சீரான வகைவகைக்குப் பலமதாகச்
சேர்த்திடித்துக் குறுணிநீ ரெட்டொன்றாக்கிக்
காரான எண்ணெயிலே விட்டுமைந்தா
கடைச்சரக்கு இதிற்போடக் கருத்தாய்க்கேளு
பேரான சாதிக்காய் கிராம்புஏலம்
பேதமில்லாச் சிறுலவங்கப் பட்டைவால்மிளகே. (411)

மிளகுடனே அதிமதுரங் கோஷ்டந்திப்லி
    மிதமாந்திப் பிலிமூலம் அதிவிடையம்
அழகான வெண்காரம் குரோசாணியோமம்
    அடைவான தான்றிக்காய் கடுக்காய்காயம்
களமான கரியசீ ரகங்கார்போகங்
    கஸ்தூரி அரத்தைசுக்கு மக்ராகாரம்
புளகான கடுகுரோ கணியுமாஞ்சில்
    பொங்கமுடன் தாளிசபத் திரியுமாமே. (412)

ஆமென்ற கசகசா ஓமங்கஞ்சா
    அடைவான வலம்புரிக்காய் பறங்கிப்பட்டை
வாமென்ற சேனுமரப் பட்டையோடு
    வளமான வாலுழுவை சிறுநாகப்பூ
ஊமென்ற தக்கோலம் வசம்புசுக்கு
    உத்தமனே யபினிவசு வாசிசீரம்
போமெனும்யா னைத்திப்லி குங்குமப்பூ
    பொங்கமுடன் வாளஞ்சேங் கொட்டைதானே. (413)

தானென்ற ஏவாச்சாரஞ் சத்திச்சாரந்
    தயவான நவாச்சாரஞ் சாஸ்த்ரபேதி
ஆனென்ற வகைவகைக்கு விராகனிலு
    அடைவாகப் பொடித்தெண்ணெய் தன்னிற்போட்டு
வானென்ற மெழுகுபதந் தனிலிறக்கி
    வண்மைபெறக் கணபதியைப் பூசைசெய்து
தேனென்ற குருபதத்தை மனதிலுன்னித்
    தென்புபெற ஒருகாண்டி யுள்ளேகொள்ளே. (414)

கொள்ளப்பா அந்திசந்தி கொண்டபோது
    கொடிதான பத்தியந்தா னெதுவுமாகா
தெள்ளப்பா மூன்றுநா ளாறுவேளை
    தெளிவாக ஏழாநாள் நீரைவாரு
மெள்ளப்பா வறுத்தஉப்பும் பருப்புமாகும்
    மேன்மையாய் மற்றுநாள் புளியைக்கூட்டு
சுள்ளப்பா கிரந்தியரை யாப்புச்சூலை
    சுகமறுவிப் புருதிகண்ட மாலைபோமே. (415)

போமேநீ யிருபத்தோர் மேகமுந்தான்
பொங்குகின்ற குஷ்டமொடு சோகைபாண்டு
தாமேதான் சுழல்வாதம் அண்டவாதந்
தயவில்லாக் கால்வாதம் பச்சைவாதம்
ஆமேதான் பவுத்திரமு மூலப்புற்றும்
அடைவான மண்டையுட சூலேவாயும்
தீமேநீ ரணங்களொடு சூலைதீரும்
திறமான போகரிட கடாட்சந்தானே. (416)

தானான எள்ளெண்ணெ யேரண்டத்தெண்ணெய்
தயவான இலுப்பெண்ணெய் வேப்பெண்ணெய்தான்
மானான புங்கெண்ணெ யைந்துதானும்
வமைந்தனே வகைவகைக்குப் படிதானென்று
தானான பாண்டத்தி லளந்துவிட்டுத்
தயவாகக் கியாழவகை சொல்லக்கேளு
கோனான ஆதொண்டை மூலம்பத்ரி
கொற்றவனே செம்புடைய மூலங்கேளே. (417)

கேளேநீ தழுதாழை காட்டாமணக்குக்
கெணிதமாய்த் திருகுகள்ளி வேலிமேனி
நாளேநீ மாவிலிங்கம் ஆவிநொச்சி
நலமான வேம்புபுங்கு வெள்ளைநொச்சி
சூளேதான் கொடிவேலி கார்முருங்கைசங்கு
சுகமாக ஊர்முருங்கை தூதுவேளை
வாளேநீ மாம்பட்டை மூலிகைமூலம்
வகைவகைக்குப் பலமைந்து நிறுத்துக்கொள்ளே. (418)

கொள்ளப்பா இவையெல்லா மிடித்துப்போட்டுக்
குணமாகத் தண்ணீர் எட்டொன்றுக்கித்
தெள்ளப்பா எண்ணெயிலே எடுத்துவாரு
தெளிவாகச் சரக்குவகை சொல்லக்கேளு
மெள்ளப்பா அரத்தைசுக்கு ஓமந்திப்லி
மேன்மையாய்த் திப்பிலியின் மூலத்தோடு
அள்ளப்பா ஆனைத்திப் பிலியுங்காயம்
அடைவாகக் கருஞ்சீரகஞ் சதகுப்பைதானே. (419)

தானென்ற தேசாவரங் குரோசானியுள்ளி
தயவாக வெளிச்சியென்ற பிசினியோடு
வானென்ற வசம்புடனே தேக்குஇஞ்சி
மைந்தனே சடாமாஞ்சில் கிராம்புகுக்கில்
தேனென்ற வகைவகைக்குப் பலங்காலாகத்
தெளிவாக அரைத்திட்டெண் ணெயிலேபோட்டுக்
கானென்ற மெழுகுபதந் தன்னிற்காய்ச்சிக்
கணபதிக்குப் பூசைசெய்து எடுத்துக்கொள்ளே. (420)

கொள்ளப்பா தயிலங்கா செடைதானுண்டு
குணமாக மேலெங்கும் பூசினுக்கால்
கள்ளப்பா சந்நியெங்கே தோஷமெங்கே
கடிதான வலிப்பேழும் அண்டவாதம்
சுள்ளப்பா வாதமென்ற வகைகளெல்லாஞ்
சுழன்றெழுந்து ஓடிவிடு மெதிர்நில்லாது
மெள்ளப்பா மூன்றுநா ளாறுவேளோ
மேன்மையா யேழாநாள் நீரைவாரே. (421)

விஷமுட்டித்தைலம்.

வாரேதான் விஷமுட்டித் தைலமொன்று
வளமாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
சேரேதான் யோமிஞ்சி யெட்டிசங்கு
செயலான வன்னிபுங்கு செண்பகப்பூ
சாரேசங் கங்குப்பி கடம்புசின்னி
சார்வான வெள்ளறுகு ஆவிப்பட்டை
தீரேதான் மருக்காரை இண்டுகொத்தான்
திறஞ்செங்கா யுருவிகாஞ் சோரியாமே. (422)

ஆமேதான் குன்றிமணி கறுத்தகண்ணி
ஆவாரை சிவன்வேம்பு கழுதைமுள்ளி
தாமேதான் மருதோன்றி புரசுகருங்காலி
தயவான புடாத்தியொடு கிளுவைவாகை
போமேதான் புனவிண்டு கருவூமத்தை
பொங்கமுடன் கொடுவேலி முத்தக்காசு
வாமேதான் அமுக்கரா விடத்தாறிப்பூ
வரசுடனே சின்னபலாக் குமரிதானே. (423)

தானான மிளகருணை கொன்றையாத்தி
தயவான கழற்கொடியுஞ் செங்கத்தாரி
வானான பெருமரமும் அவுரிகட்டு
வளமாகச் சமனறுக்கி யுலர்த்திக்கொண்டு
பானான குழித்தயில மாகவாங்கிப்
பக்குவமாய்த் தானெடுத்துப் பதனம்பண்ணு
மூானான சீவசெந்து வகையைச்சொல்வேன்
மைந்தனே மூன்றூறு கருங்காகமாமே. (424)

ஆமேதான் அங்கோடு கழுகாமையாந்தை
அடைவுபச் சோந்தியுங்கூ கைதேவாங்கு
தாமேதான் பசுந்தவளை பெருவிரியான்
தயவான மனுஷன்மண்டை கழுதைமண்டை
போமேதான் மேதிக்கொம்பு பரிக்குளம்பினோடு
பொலியானை லத்திமுதல் புழுக்கைதானும்
வாமேதா னெட்டகத்தின் லத்திகூட
வன்பன்றி கழுதையுட னத்திதானே. (425)

தானப்பா வெள்ளாட்டுப் புழுக்கையோடு
தயவாகச் சமன்கொண்டு இடித்துலர்த்திப்
பானப்பா குழித்தயில மாகவாங்கிப்
பாங்கான இருதயிலஞ் சமனாய்ச்சேர்த்துக்
கோனப்பா சேங்கொட்டைத் தயிலமரைப்படிதான்
கொற்றவனே தயிலத்தின் கூடவாரு
வானப்பா கருப்புடைய குங்குலியம்
வளர்த்திகையின் பூட்டுடைய பூச்சிதானே. (426)

தானடா கருஞ்சீரங் கஸ்தூரிமஞ்சள்
தனித்தேதான் மாசக்கா யிரசகற்பூரம்
மானடா சேனுமரப் பட்டையோடு
மைந்தனே வகைகைக்குப் பலந்தானென்று
வானடா பரங்கிப்பட் டைபிரப்பன்கிழங்கு
வளமாகப் பலமிரண்டு நிறுத்துப்போட்டுப்
பானடா வலம்புரிக்காய் கடுக்காயோடு
பாங்காகப் பலமொன்று நிறுத்துக்கொள்ளே. (427)

கொள்ளேதான் ஓதியம்பட்டை கொடியிலச்சாறு
குணமாகச் சுரக்கெல்லா மரைத்துப்போடு
அள்ளேதான் மயிலெண்ணெய் வேப்பெண்ணெய்ரண்டும்
அடைவான தயிலத்தில் நேரேசேர்த்துத்
துள்ளேநீ திராவிமிகப் பதத்திற்காய்ச்சிச்
சுகமான கணபதிக்குப் பூசைபண்ணு
தெள்ளேதான் துவாலையிடு தேகமெங்கும்
தெளிவாக நோய்தீரும் விவரம்பாரே. (428)

பாரேதான் கால்முடங்கை முடமுந்தீரும்
பாங்கான சூலையொடு குஷ்டநோயும்
செரேதான் புடையன்செவ் வட்டைமரமட்டை
செய்யான்வண் டுகடிபில்லி வஞ்சனையும்போகும்
நீரேதான் பூதமுதல் பசாசுவேதாளம்
திறமான பிரமராட் சதையுங்கூட
வீரேதான் மற்றுநாள் வேதுதண்ணீர்
வீரான நோயறிந்து தண்ணீர்வாரே. (429)

வாரடா சைப்போடு புளிபுகையுந்தள்ளு
வளமான வுப்பைநன்றாய் வறுத்துக்கூட்டு
பாரடா சிறுபயறு கொடிக்காலின்பஞ்சு
பாங்கான முருங்கையுட பிஞ்சுமாகும்
கூரடா ஆவின்பால் நெய்யுமாகுங்
குணமான துவரையுட பருப்புமாகுஞ்
சீரடா வியாதியுட குறியுங்கண்டு
சிறப்பாகப் பத்தியத்தைச் சீராய்க்கூட்டே. (430)

விஷங்களுக்கு மெழுகு.

கூட்டப்பா வரிக்குமட்டிப் பழச்சாறுவாங்கிக்
குணமாகப் பாண்டத்தில் மைபோற்கிண்டி
மாட்டப்பா சிமிழ்தனிலே யடைத்துக்கொண்டு
மைந்தனே பசும்பயறு அளவாய்த்தானும்
மீட்டப்பா நாவுதனில் தடவிப்போடு
மிகுந்ததொரு விஷங்களெல்லா மிறங்கிப்போகும்
ஆட்டப்பா போகரிட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடித்தானே. (431)

அக்கினி மந்தத்திற்கு லேகியம்.

தானென்ற திரிகடுகு ஓமம்வாய்விளங்கந்
தயவாக வகைகைக்கு விராகனெந்து
போனென்ற பொடிபண்ணிச் சர்க்கரையேசேர்த்துப்
பொங்கியே தேன்படிகால் நெய்படிகால்வார்த்து
சோனென்று பிசைந்துமே வைத்துக்கொண்டு
குணமாக நெல்லிக்கா யளவுகொள்ள
வானென்ற வாயுஅக் கினியின்மந்தம்
வாங்குமடா போகரிட கடாட்சந்தானே. (432)

சுத்தவல்லாதி யெண்ணெய்.

தானப்பா சுத்தவல் லாதிஎண்ணெய்
தயவாச்சிற் றாமுட்டி மூலத்தோடு
ஆனப்பா பலமதுமுப் பத்திரண்டு
அடைவாக இடித்துஇரு தூணிநீரில்
பானப்பா நாலிலொன்று காய்ச்சிவாங்கிப்
பாங்காயைந் தெண்ணெயொரு படிதான்வாரு
வானப்பா கெந்தியதி மதுரங்கோஷ்டம்
வளமாகச் சாதிக்காய் சாதிப்பத்ரி. (433)

பத்தான ஏலமுடன் லவங்கப்பட்டை
பாங்கான அரத்தைகக்கு அக்ராகாரம்
முத்தான மாஞ்சில்தா லிசமாம்பத்ரி
மூடுக்கான வாய்விளங்கம் யானைத்திப்லி
சித்தான திப்பிலியுங் கடுகுரோகணியுந்
திருக்கைநீர் வான்மிளகு ஓமங்கூட
வித்தான குங்குமப்பூ கறுப்புச்சீரகம்
விதமான கடுக்காயுந் தான்றிக்காயே. (434)

காயான செண்பகப்பூ கொத்துமல்லி
கருவான வாலுழுவை சிறுநாகப்பூ
மாயான செவியமது களஞ்சுநாலு
மைந்தனே பொடிபணணி யெண்ணெயிலேபோடு
தயவான பழச்சாறு பசுவின்பாலுந்
தயவாக வகைவகைக்குப் படிதான்வாரு
சேயான மெழுகுபதந் தனில்வடித்துச்
செயமான புழுகுடன்கஸ் தூரிபோடே. (435)

போடேதான் வகைக்குவகை கழஞ்சுதானும்
பொங்கமுடன் கணபதிக்குப் பூசைபண்ணு
நாடேதான் காசெடைதான் எண்ணெய்கொள்ள
நாசியிலே யொருதுளி மேலேபூச
சாடேதான் முகவாதம் மண்டைவாதம்
சடிதான பித்தமொடு நீலகாசம்
சூடேதான் பீநசமும் வாயுசூலை
சுகமில்லாச் சொரிமுதலாய்த் திரும்பாரே. (436)

பாரேதான் மூன்றுநா ளாறுவேளை
பாங்காகக் கொள்ளுபத் தியத்தைக்கேளு
சேரேதான் சியக்காய் வெந்நீர்வாரு
சிறப்பான பசும்பயறு உப்புங்கூட்டு
தீரேதான் நாலாநா ளெல்லாங்கூட்டு
தீர்க்கமிப் படிமூன்று கெடுவேகொள்ளு
வீரேதான் சொன்னபிணி திரும்பாரு
விதமான போகரிட கடாட்சந்தானே. (437)

ஈளை, காசம், பெருழத்தீரத்திரட்சி, நீரடைப்பு, கிரிச்சினம், பெரும்பாட்டுக்கு, லேகியம்.

தானான வரிக்குமட்டி வேர்பலமும்பத்து
தயவான கடுக்காய்வேர் நெல்லிவேரும்
மானான தான்றிக்காய் வேரினோடு
மைந்தனே அந்திமல்லி கையின்வேரும்
கோனான வெட்டிவேர் வில்வவேரும்
குணமான விலாமிச்சை தூதுவேளைநாரி
வானான மாதுளைதாங்கி சிறுகாஞ்சொரி
வளமான் நெய்தலொடு செங்கழுநீர்க்கிழங்கே. (438)

கிழங்கும்பா காசுமல்லி நிலப்பனையும்வாகை
கிருபையுடன் கண்டங்கத் தரியின்மூலம்
புளங்கமப்பா வகைவகைக்குப் பலந்தானொன்று
போட்டிடித்துத் தூணிநீ ரெட்டொன்றாக்கி
விளங்கப்பா பசுவின்பால் படிநால்விட்டு
விதமான சரக்குவகை சொல்லக்கேளு
முளங்கப்பா சாதிக்காய் சாதிப்பத்ரி
முடியான கிராம்பேலம் வாலுடையபிளகே. (439)

மிளகான சிறுலவங்கம் மந்திஷ்டிகோஷ்ட
　　மிகுந்தநல்ல சந்தனமும் கரியசீரகமும்
அளகான சதகுப்பை வாய்விளங்கம்
　　அடைவான சாஸ்திரமாம் பேதியோடு
புளகான தாளிசபத் திரிதேவதாரம்
　　புனிதசீ ரகமிளகு சிறுநாகப்பூ
இளகான அதிமதுரம் காஞ்சினியும்
　　ஈமவா னுழுவைதேக் குசிங்கியாமே. (440)

ஆமேதான் கஸ்தூரி மஞ்சளோடு
　　அடைவான திப்பிலியும் திப்பிலிபின்மூலம்
போமேதான் ரோகணியும் நெருஞ்சில்முள்ளு
　　பொங்கமுடன் குரோசாணி முத்தக்காசு
தாமேதான் கடுக்காயும் நெல்லிக்காயுந்
　　தயவான குங்குமப்பூ மாதுளையின்பிஞ்சு
வாமேதான் வகைவகைக்குக் கழஞ்சுநாலு
　　வளமாகப் பசுவின்பால் தன்னாலாட்டே. (441)

ஆட்டியே கியாழமது தன்னிற்போட்டு
　　அடைவாகப் பசுப்பால்நெய் படிநால்விட்டு
நாட்டியே செவ்விளநீர் பழச்சாற்றோடு
　　நலமான வல்லாரைச் சாறுங்கூட
மூட்டியே வகைவகைக்குப் படிதான்ரண்டு
　　மூசியாத சீனியது பலந்தான்ரண்டு
கூட்டியே நல்லவெல்லம் பலந்தானாலு
　　கூடவிட்டு மெழுகுபதந் தன்னிற்காய்ச்சே. (442)

காய்ச்சியே வடிகட்டிக் கலசத்திட்டுக்
　　கணபதிக்குப் பூசைசெய்நெற் புடந்தான்திங்கள்
ஆய்ச்சியே எடுத்துமுக் களஞ்சுவீதம்
　　அந்திசந்தி கொண்டிடவே யீளைகாசந்
தாய்ச்சியே தலைநடுக்கம் பித்தமேகம்
　　தயவில்லா வலிப்பொடுகல் லடைப்புளியு
பேய்ச்சியே மூத்திரத்தின் கிரிச்சிகாந்தல்
　　பெரும்பாடு நீருடைய செறிவுபோமே. (443)

போமடா மலடிக்குப் பிள்ளையுண்டாம்
பொங்கியகைப் புப்புளியுந் தயிருமாகா
வாமடா நெய்விட்டா லெல்லாமாகும்
வளமான தேகமது காந்தியுண்டாம்
பாமடா பவளபற்பம் நெய்யுங்கூட்டிப்
பாங்காகக் கொண்டிடவே நோய்களெல்லாம்
தாமடா கைக்கறுப்பு மாறிப்போகும்
தயவான போகரிட கடாட்சந்தானே. (444)

பீநசத்துக்கு எண்ணெய்.

தானப்பா பீநசத்துக் கெண்ணெய்கேளு
தயவாக எள்ளெண்ணெய் படிதான்ரண்டு
வானப்பா கரிசாலை பொன்னாங்காணி
வளமாயவெற் றிலையவுரி முசுமுசுக்கை
மானப்பா மூக்குரட்டை அத்திப்பட்டை
மைந்தனே வகைவகைக்குப் படிசாறிட்டு
கோனப்பா ஆதொண்டை யிலையின்சாறு
கொற்றவனே படியிரண்டு அளந்துவாரே. (445)

வாரப்பா பீநசமாம் பூண்டுமூலம்
வகையுடனே இடித்தசா றுபடியொன்று
வீரப்பா பசுவின்பால் படிதானொன்று
வித்தகனே அடுப்பேற்றி வேகும்போது
சீரப்பா மிளகுகஸ் தூரிமஞ்சள்
சிறுகடுக்காய் நெல்விவித்து நிம்பவித்தும்
காரப்பா கருஞ்செம்பைப் பூவினோடுங்
கனமாக வகைவகைக்குப் பலந்தான்வாங்கே. (446)

வாங்கியே பொடித்துமுன் னெய்யிற்றாவி
வகையுடனே மெழுகுபத மானபோது
தூங்கியே போகாதே யிறக்கிக்கொண்டு
சுகுணமிகுங் கணபதியைப் பூசைசெய்து
தீங்கில்லாத் தயிலமதைத் தினமுநான்கில்
தீவிரமாய் முழுகிவரத் தீரும்ரோகம்
ஏங்கியே திரியாதே புளிபுகைப்பு
எள்ளெண்ணெய் மாங்கிஷமு மீனுகாதே. (447)

ஆகாது விடயங்க ளாகாதப்பா
அப்பனே வறுத்தவுப்பு துவரையாகும்
வேகாத பண்டங்க ளொன்றுமாகா
வெந்நீரு முருங்கைக்கா யவரைப்பிஞ்சும்
நோகாத வழுதலங்காய் வற்றலாகும்
நோயாளி கண்டறிந்து பத்யஞ்செய்தாற்
போகாத பிநசங்கள் பறந்துபோகும்
போகரிட கடாட்சத்தாற் பாடினேனே. (448)

மேகங்களுக்குத் தீப்புகை.

பாடுவேன் மேகமென்ற ரோகந்தீரப்
பாரிலுள்ள பண்டிதரே பகரக்கேளும்
நாடுவேன் பூரமது விராகனொன்று
நலமான சூதசிங் தூரமொன்று
கூடுவேன் தேன்மெழுகு பலமேகானு
குறியர்சுக் கரண்டியிலே உருக்கிக்கொண்டு
ஆடுவேன் முன்சரக்கைப் பொடித்துத்தூவி
அப்பனே யிறக்கியதை திரியிலூட்டே. (449)

ஊட்டியே ரோகிதனை யறையில்வைத்து
உத்தமனே திரியொன்றைத் தீபமேற்றி
நாட்டியே கண்சிரட்டை எதிரில்வைத்து
நலம்பெறவே ரோகியின்மேல் போர்வைபோட்டுத்
தாட்டிகமாய்த் திரியெரிந்து அணையுமட்டுந்
தானிருந்து வேர்வையெல்லாந் துடைத்துப்போட்டு
ஆட்டியே ஆவின்பால் உழக்குள்தந்து
அப்பனே பாலன்னம் பின்னுற்கொள்ளே. (450)

கொள்ளவே உப்பாகா மூன்றுநாளுங்
குணமாகப் பாலன்னம் கொள்ளவேண்டுந்
தள்ளவே மற்றொன்று மாகாதப்பா
தண்மையுடன் நான்காநாள் வெந்நீரோடு
மெள்ளவே நீர்முள்ளிச் சமூலங்கொண்டு
மிதக்கவிட்டுக் காய்ச்சியபின் னுறவிட்டு
அள்ளியே ஓமமிட்டு நீரைவார்த்து
அப்பனே செம்மறியின் மிளகுநீரே. (451)

நீரிலே மிளகாகும் உப்புமாகும்
நிட்சயமா யன்றதொட்டுக் காரசார
மாரியே நெய்யோடு பாலுமாகும்
மைந்தனே ஆட்டிறைச்சி யச்சமாகும்
பாரிலே பெண்ணுகா புளியுமாகா
பாலகனே வாட்டீரை ஆற்றலாகா
வீரியமா யிருபதா நாளோமந்தேய்
விருப்பமுடன் விளக்கெண்ணெய்முப் பதிலேமுழ்கே. (452)

முப்பதுடன் பத்துநா ளாகுமுன்னே
முக்கியமாய்த் தீருகின்ற வியாதிகேளு
தப்பதுடன் பீநசங்க ளேழுந்திருந்
தலைப்பிளவை உச்சிப்புற் றுக்கண்டமாலை
கப்பதுடன் கன்னப்புற் றிலிங்கப்புற்று
கனமாமண் டப்புற்று யோனிப்புற்று
இப்பதுடன் பல்லரணை சந்தப்புற்று
இயலான மார்பிளவை கொறுக்கைபோமே. (453)

போகுமே அரையாப்பா சனத்திற்புற்று
பொல்லாத பௌத்திரங்கள் மேகவெடிகுலை
சாகுமே குஷ்டவெடி துடையில்வாழை
சலக்கண்ணி அழுகண்ணி சதைவளர்தல்
ஏகுமே தவளைசொறி ஆனைச்சொறிபீலி
இயலில்லா ரணங்களெல்லா மெளிதிற்போகும்
ஆகுமே போகரிட கடாட்சத்தாலே
அவனிதனில் புலிப்பாணி ஆடினேனே. (454)

அண்டமெழுகு.

ஆடியே சிற்றண்ட மெழுகிதப்பா
அப்பனே சொல்லுகிறேன் வில்வமூலம்
தேடியே வீசைபத்துக் கொண்டுவந்து
தேர்ந்ததனை நறுக்கியபின் னிழலுலர்த்தி
வாடியே போகாதே பாண்டத்திட்டு
வாய்மூடிச் சீலைசெய்து குழித்தைலம்வாங்கி
நீடியே தலைஅண்டம் பிங்கானிலிட்டு
நிலவரமாய்த் தைலமதை நிறையவாரே. (455)

வார்த்தபின்பு நாற்பதுநாள் ரவியில்வைத்து
வற்றவற்றத் தைலமதை வார்த்துவந்தால்
பார்த்திருக்கப் பண்டிதர்கள் மாயமாகப்
பசுமையுள்ள மெழுகாகும் பகரக்கேளு
தூர்த்துவந்த வாதமெல்லாந் தொலைந்துபோகுஞ்
சுண்டைக்கா யளவெடுத்துத் தேனிலீந்தால்
ஆர்த்திருந்த சூலையெல்லா மயர்ந்துபோகு
மடைவாகப் புலிப்பாணி யறைந்திட்டேனே. (456)

இலவணச்செந்தூரம்.

அறைகிறேன் லவணத்தின் செந்தூரங்கேள்
அப்பனே கல்லுப்பு பலந்தானுறு
கறைகிறேன் சூதமது பலந்தானொன்று
கல்வத்தி விட்டுக்கூ விளத்தின்சாற்றால்
மறையவே தானரைத்து ரண்டுசாமம்
மார்க்கமாய்க் குகையில்வைத்துச் சொல்லக்கேளு
விரைகிறேன் போகரிட கடாட்சத்தாலே
விவரமுடன் புலிப்பாணி விளம்பக்கேளே. (457)

கேளேதான் உலையில்வைத்துப் பழுக்கஊதக்
கிருபையுட னுருகியது மணிபோலாகும்
கோளேதான் வாராமல் ஆறவிட்டுக்
கொற்றவனே கல்வமிட்டுப் பொடியாய்ச்செய்து
நாளேதான் அந்தரத்தா மரையின்சாற்றால்
நாற்சாமந் தானரைத்துப் பில்லைதட்டிப்
பாழேதான் போகாமல் காயவைத்துப்
பக்குவமாய்ச் சில்லிட்டுப் புடமுழமுமாமே. (458)

ஆமேநீ முன்போலே யைந்துபுடம்போட்டால்
அப்பனே சிந்தூர மாகும்பாரு
தாமேநீ எடுத்ததனைச் சிமிழில்வைத்துத்
தயவாகப் பணவெடைதான் தேனிற்கொள்ள
போமேநீ குன்மமென்ற எட்டுந்தீரும்
பொல்லாத நெஞ்செரிவு சூலைரோகம்
வாமேநீ சூதகத்தின் வாயுதீரும்
வல்லமையாய்ப் புலிப்பாணி வகுத்திட்டேனே. (459)

நமனசமெழுகு.

வகுத்திடவே நமனச மெழுகுதன்னை
வசமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
தொகுத்திடுவேன் லிங்கந்தா ளகமுஞ்சிங்கி
சொற்பெரிய மனோசிலையுங் கவுரிவெள்ளை
பகுத்திடுரு தங்கெந்தி வீரம்பூரம்
பாங்கான துரிசுடனே வகைக்குத்தானு
மகத்திடுவாய் விராகனெடை யொன்றேதானும்
மாசற்ற வாளமது பதினொன்றுமே. (460)

ஆமேதான் சாக்கெல்லாங் கல்வத்திட்டு
அப்பனே அன்னக்கா டியினாலாட்டி
தாமேதான் நாற்சாம மானபின்பு
தயவாக முழுச்சீலை அதிற்பரப்பிப்
போமேதான் திரித்ததனைக் காயவைத்துப்
பொங்கமுடன் ஆவினெய் பலமெட்டாகும்
தீமேதா னில்வைசுடர்த் தயிலமாகத்
தீவிரமாய் மூன்றுமுறை மடக்கிச்செய்யே. (461)

செய்தபின்பு தைலமதை யெடுத்துக்கொண்டு
செப்பரிய பனைவெல்லம் பலமுமூன்று
கொய்தசுக்குச் சூடனுமுன் தைலங்கூடக்
கொற்றவனே விராகனெடை சேர்த்துவைத்துக்
கைதவமாய்ச் சுண்டைக்கா யளவுகொள்ளக்
கடத்திலுள்ள வாதமெல்லாங் கதிகெட்டோடும்
பைதமுடன் மாதமொன்றுக் கைந்துநாள்தான்
பக்குவமா யிப்படிமூன் றுமுறைதானே. (462)

தானாகத் தீருகின்ற வியாதிகேளு
தகைமையிலெண் குன்மஞ்சூ தகத்திவாயு
மானாகத் திமிர்வாதக் குடலின்வாதம்
மன்னவனே பட்சமென்ற வாதம்போகும்
வானாகப் பத்தியந்தான் சொல்லக்கேளு
வண்மையுள்ள பசும்பாலும் பசுநெய்யாகும்
தேனாகப் பசும்பயறு வறுத்தவுப்பாங்
தெளிபத்தா நாள்விளக்கெண் ணெயினால்மூழ்கே. (463)

மூழ்கியபின் மதுமானம் பெண்ணுகாது
முக்கியங்தொண் ணூறுநா ளாகுமட்டும்
மாழ்கியே போகாதே மனம்விடாதே
மதிகெட்டு நில்லாதே மருந்தேருது
காழ்த்தபண்டந் தின்னுதே காலைமாலை
காலாற நீநடந்து திரும்பநன்று
வாழ்த்துவார் போகரிட் கடாட்சத்தாலே
வகையாகப் புலிப்பாணி வசனித்தேனே. (464)

ஆனைக்கால்தீரலேகியம்.

வசனகரும் குருவைமாப் படிகால்தானே
வகையாகத் திருகுகள்ளிப் பாலரைக்கால்
நசனித்த பசும்பால்தா னரைக்காலாகும்
நறுந்தேனும் படியரைக்கால் நவிலக்கேளு
தசனித்த மாவினிலே கலந்துகொண்டு
தயவாக லேகியமாய்க் கிண்டிப்போடு
அசனித்து ஆறவிட்டுக் கல்லிலாட்டி
அப்பனே கலசமதில் பதனம்பண்ணே. (465)

பண்ணப்பா கழற்சிக்கா யளவாய்க்கொள்ளு
பக்குவமா யைந்துதின மிருநேரந்தான்
நண்ணப்பா இம்முறையாய் மூன்றுமாதம்
நன்மையுடன் கொள்வதற்குப் பத்தியங்கேள்
உண்ணப்பா பால்நெய்பசும் பயறுமாகும்
உத்தமனே வறுத்தவுப்பு மிகவுமாகும்
கண்ணப்பா மறுபத்ய மிருந்துகொண்டு
கடியவிளக் கெண்ணெயால் மூழ்குதானே. (466)

அர்த்தனுரிசுரமாத்திரை.

தானேஅர்த் தனுதிமாத் திரையைச்சொல்வேன்
தனிவெள்ளைப் பாஷாணம் விராகனென்று
கோனேகோ ரோசனைவி ராகனென்று
கொற்றவனே முலைப்பாலால் சாமமாட்டிப்
பானென்ற பசுப்பயறு போலுண்டைசெய்
பக்குவமாய்த் தேனப்பாலா மதனிலீய
வானென்ற போகரிட கடாட்சததாலே
வன்மையுள்ள சுரம்நீங்கி அர்த்தமாமே. (467)

அர்த்தமென்ற இடமுலைப்பால் தன்னிலீந்தால்
ஐயஇடப் புறச்சுறம்போ யொருபால்நிற்கும்
வர்த்தமென்ற இருதனத்தின் பாலிலீந்தால்
வகைகெட்டுச் சுரமதுதா னுடனேநிற்கும்
கர்த்தனென்று உனைத்துதித்து லோகமெங்குங்
கால்விழுந்து கும்பிடுவார் கதிதாவென்று
விர்த்தனென்ற போகரிட கடாட்சத்தாலே
விவரமுடன் புலிப்பாணி விரித்ததாமே. (468)

அமிர்தசஞ்சீவி மாத்திரை.

ஆமென்ற அமிர்தசஞ் சீவிமாத்ரை
அடைவாகச் சொல்லுகிறே னப்பாகேளு
தாமென்ற சாஸ்திரபே தியினோடேலவ
த்ணிக்கோஷ்டங் கிராம்புடனே சாதிப்பத்ரி
ஏமென்ற சந்தனமுங் கடுகுரோணி
இலுப்பைப்பூ ஈன்னாரி விலாமிச்சைவேர்
வாமென்ற வெட்டிவேர் கடுக்காய்தான்றி
வற்றல்நெல்லி திப்பிலியு மதுரமாமே. (469)

மதுரமென்ற திராட்சமொடு முத்தக்காசு
மைந்தனே பேரீச்சங் காய்வகைக்குச்
சதுரமென்ற விராகனெடை நிறுத்துக்கொண்டு
சலியாமற் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
அதிரம்போ லரைத்திடுவாய் சாமம்நாலு
அப்பனே கடலைபோ லுண்டைசெய்து
நதிவரண்டு சுரமிஞ்சி யதிகமானால்
நன்முலைப்பால் வெந்நீரி லீயநன்றே. (470)

நன்றாகுஞ் சந்நிமுதல் தோஷமெல்லாம்
நன்மையாம் பிள்ளைபிணி நலிவுந்தீரும்
பன்றாகும் நாவரட்சி பறக்கும்பாரு
பரிதிகண்ட பனிபோலாம் நசவுள்ளோர்க்குக்
கன்றாத பத்தியமாய்க் காருகாரு
கதிகெட்டால் வியாதியது கதித்துக்கொல்லும்
குன்றாகும் போகரிட கடாட்சத்தாலே
குணமாகப் புலிப்பாணி கூறினேனே. (471)

அக்கிரசஞ்சீவி மாத்திரை.

கூறுகிறேன் அக்கரசஞ் சீவிமாத்ரை
குணம்பெறவே சொல்லுகிறேன் குறிப்பாய்க்கேளு
கோருகிறேன் அதிமதுரங் கோஷ்டஞ்சுக்கு
குணமுள்ள சாதிக்காய் கொடுக்காய்சீரம்
ஊறலவங் கப்பட்டை திப்பிமூலம்
உத்தமனே கடுக்காயும் ஓமமாமே
தேறுகொத்து மல்லிகஸ் தூரிமஞ்சள்
திறமுள்ள பழம்புளியுஞ் சீனிகாணே. (472)

காணவே அரத்தைரண்டு இந்துப்போடு
கருஞ்சீர கம்வகைக்கு விராகனென்று
தோணவே முகைப்பாலில் இரண்டுசாமந்
தொகுத்திடவே தானரைத்துத் துவரைபோல
மாணவே உண்டைசெய்து நிழலுலர்த்தி
மைந்தனே குப்பியிலே அடைத்துக்கொண்டு
நாணவே நாவறட்சி நங்கைதோஷம்
நலமில்லாச் சன்னிமுதல் சுரங்கள்போமே. (473)

போகுமே தனப்பாலிற் கொடுக்கநன்று
புனிதமுள்ள அநுபானந் தன்னிலீவாய்
ஆகுமே பிள்ளைபிணி யநந்தம்போகும்
அப்பனே பத்தியமா யிருக்கச்செய்து
பாகமா யேழுநாள் கொண்டபின்னர்
பாலகனே மறுவாரம் நீரைவாரு
சோகமாய் வியாதிசண்டு மருந்தையீவாய்
சொற்பெரிய போகரிட கடாட்சந்தானே. (474)

பிள்ளைகட்டுப் பேதியாத்திரை.

தானென்ற பிள்ளைகட்கு விரோசனந்தான்
தயவாகச் சொல்லுகிறேன் லவங்கமேலம்
மானென்ற சன்னபட்டை மதுரங்கோஷ்டம்
மைந்தனே சண்பகத்தின் மொட்டுத்தானும்
வானென்ற விராகனெடை நிறுத்துக்கொண்டு
வாளமது சுத்திசெய்து விராகனென்று
தேனென்ற பழச்சாற்றால் மூன்றுசாமம்
தெளிவாகத் தானரைத்துச் செப்பக்கேளே. (475)

கேளப்பா மிளகுபோல் மாத்ரைசெய்து
கெடியாக நிழலுலர்த்திச் சிமிழில்வைத்துக்
கோளப்பா இல்லையடா சர்க்கரையாற்
கொற்றவனே நல்லவெல்லங் கதலிதன்னில்
நாளப்பா எதிலேனும் பிள்ளைபலமறிந்தும்
நன்மணியி லொன்றுகொடு நல்கிப்பின்னே
ஆளப்பா மிளகுநீர் சாதமீவாய்
அந்தியிலே சுக்குச்சீ ரகமுமாமே. (476)

கட்டுவாதி மாத்திரை.

ஆமேதான் கியாழமிட்டுக் கொடுப்பாயப்பா
அறையுகிறேன் கட்டுவாதி தன்னைக்கேளு
தாமேதான் சாதிக்காய் சாதிப்பத்ரி
தகமையுள்ள மாசிக்காய் கடுக்காய்ப்பூவும்
நாமேதான் சீரகமும் விடையங்கிராம்பு
நலமுள்ள வெந்தயமும் அபினிதானும்
கோமேதான் கசாகசா கோரோசனையுங்
கொற்றவனே விராகனெடை நிறுத்துவாங்கே. (477)

வாங்கியே தனப்பாலால் அரைத்துநீயும்
வண்மையுள்ள மிளகதுபோ லுண்டைசெய்து
தாங்கியே நிழலுலர்த்திப் பதனம்பண்ணு
தாரணியில் கிராணிவகை யெல்லாம்போக
ஓங்கியதே னதிலும்வெண் ணெயிலுங்கொள்ள
ஓடிவிடும் பேதிமுதல் ரத்தக்ராணி
தீங்கில்லாப் போகரிட கடாட்சத்தாலே
திடமாகப் புலிப்பாணி திறஞ்சொன்னேனே. (478)

பச்சைக்கர்ப்பூர மாத்திரை.

சொன்னதொரு பச்சைக்கர்ப் பூரமாத்ரை
சொல்லுகிறேன் பச்சையென்ற கர்ப்பூரந்தான்
மன்னனென்ற வீரமுடன் பூரம்லிங்கம்
மைந்தனே சூதமுடன் ரசசெந்தூரம்
வின்னமில்லாச் சுத்திசெய்து வகைவகைக்கு
விராகனெடை தானெடுத்துக் கல்வத்திட்டு
அன்னநடை மின்னார்கள் தனப்பாலாலே
அப்பனே நாற்சாமம் அரைத்துவாங்கே. (479)

வாங்கியே குன்றிமணி போலுருட்டி
வண்மையுட னிழலுலர்த்தி வரிசைகேளு
தீங்குற்ற சூலேதிரி கிரந்திதோஷம்
தின்றிடவே எழுநாளில் தீர்ந்துபோகும்
ஓங்கியே வந்துற்ற சன்னிஓடும்
ஒருநொடியில் சூடெழுந்து ஓங்கிநிற்கும்
பாங்குற்ற பத்தியங்க ளிச்சாபத்யம்
பண்பான போகரிட கடாட்சந்தானே. (480)

சிறுபிள்ளைகட்குக் கட்டுவாதி மாத்திரை.

தானென்ற சாதிக்காய் தனைக்குடைந்து
தன்மையுள்ள அபினிபண வெடைதானிட்டுக்
கோனென்ற குளவிந்த மரைத்துக்காய்மேல்
கொற்றவனே கவசமிட்டுக் குணமதாக
மானென்ற வேதுபுட மாகவிட்டு
மைந்தனே கவசமதை மாற்றிப்பின்பு
தேனென்ற முகைப்பாலா லரைத்துமைபோல்
தெளிவாக உளுந்ததுபோ லுண்டைசெய்யே. (481)

செய்தவுண்டை தனையெடுத்து முகைப்பால்தேனில்
செயம்பெறவே கொடுத்துவரத் தீரும்நோய்கள்
நொய்யவந்த ரத்தகொட்டல் ரத்தபேதி
நொடிக்குமுன்னே ஓடிவிடும் நோய்தீரும்பார்
பையவந்த பேதிமுதல் கட்டுங்கட்டும்
பக்குவமாய்ப் பத்தியங்கள் பாகஞ்செய்வாய்
ஐயரெனும் போகரிட கடாட்சத்தாலே
அன்பாகப் புலிப்பாணி யருளினேனே. (482)

இரத்தங்கொட்டலுக்கும்-சீதபேதிக்கும் சூரணம்.

அருளுவேன் கற்கடக சிங்கியப்பா
அடைவான கிராம்புடனே கருவாப்பட்டை
உருளவே புரட்டிச்சிறு வறுப்பதாக்கி
உத்தமனே வகைவகைக்கு விராகனென்று
மருளவே சூரணித்து மைந்தாகேளு
மயக்கமில்லை ஆறபங்காய்ச் செய்துகொண்டு
குருவான போகரைநீ தொழுதவத்திக்
கொடுத்துவிடு வெண்ணெயிலே குலேந்துபோமே. (483)

குழந்தைகளுக்கு சூழுதலிய தோஷங்களுக்கு அமிர்தசஞ்சீவிக் குளிகை.

போமேதான் அமிர்தமென்ற குளிகைசொல்வேன்
புகழுங்கோ ரோசனையும் ஏலந்தானும்
தாமேதான் அதிமதுரம் சண்பகப்பூ
தலையான சாஸ்திரமாம் பேதியோடு
நாமேதான் வகைவகைக்கு விராகனென்று
நலம்பெறவே கல்வத்தில் நன்றாயாட்டி
ஆமேதான் வெட்டிவேர் விலாமிச்சைவேர்
அடைவாகக் கியாழமிட்டு அரைத்திடாயே. (484)

அரைத்திடுவா யிருசாம மானபின்பு
அப்பனே குன்றியைப்போ லுண்டைசெய்து
நிரைத்தனமாய் நிழலுலர்த்தி நினைவாய்க்கேளு
நீமகனே முலைப்பாலில் நுணுக்கிவைக்கில்
உரைத்துவந்த மாந்தமெட்டு நீர்ப்படுவனோடு
உத்தமனே அஸ்திசுரம் வெப்புந்தீரும்
மறைபுகழும் போகரிட கடாட்சத்தாலே
மகிழ்வாகப் புலிப்பாணி மனம்விட்டேனே. (485)

சிறுபிள்ளைகளுக்குக் காதில்சீய்வடிகிறதற்குத் தயிலம்.

விட்டதோர் கால்நண்டு விராகன்பத்து
வெள்ளுள்ளி குளவிந்தம் விராகனைந்து
திட்டமுற வெள்ளைக்காக் கணஞ்சாற்றாலே
திறமாகத் தானரைத்துத் தேங்காய்நெய்யில்
சட்டமுடன் தான்பிசைந்து ரவியில்வைத்துச்
சாதகமாய் மூன்றுநா ளானபின்பு
இட்டமுடன் வடிகட்டி யெடுத்துக்கொண்டு
என்மகனே செவியிலிடச் சீய்தான்போமே. (486)

சிறுபிள்ளைகள் பெருக்கநெய்.

தானென்ற தேறாத பிள்ளைகட்குத
தயவாகச் சொல்லுகிறேன் தண்ணீர்விட்டான்
மானென்ற சாறும்வெண் மறியின்பாலும்
மைந்தனே ஆவின்பால் தேங்காய்ப்பாலுந்
தேனென்ற ஆவினெய் திறமாய்வாங்கித்
தேறியே வகைவகைக்குப் படிகாலப்பா
கோனென்ற சீனியது கற்கண்டோடு
கொற்றவனே பலமைந்து கொண்டுசேரே. (487)

சேர்த்தபின்பு அடுப்பேற்றித் தீயைமூட்டு
சிறுகளரி மெழுகுபதஞ் சிவக்கும்போது
கோத்தெடுத்து வடிகட்டிக் கொண்டுதானும்
கொற்றவனே கரண்டிவிதங் கொடுத்தாயானால்
காத்திருந்த கணம்நீங்கிக் கரும்புபோலாம்
கட்டழகும் பிள்ளைக்குக் களையுமுண்டாம்
பூத்தமறைப் போகரிட கடாட்சத்தாலே
புலிப்பாணி புவிதனிலே பூட்டினேனே. (488)

குழந்தைகட்கு வாந்திகண்டால்.

பூட்டுகிறேன் குழந்தைகட்கு வாந்திகண்டால்
பூவென்ற கிராம்புமதி விடையத்திப்லி
நாட்டுகிறேன் மயிலிறகு சுட்டசாம்பல்
நன்றாகப் பொடிசெய்து தேனிற்சேர்த்து
ஊட்டவே வாந்தியது ஒழிந்துபோகும்
உண்மையிது தவறாது உறுதிமெத்த
ஆட்டமிகும் போகரிட கடாட்சத்தாலே
அன்பாகப் புலிப்பாணி அறைந்திட்டேனே. (489)

குழந்தைகள் சிரங்குக்கு.

அறையுகிறே னின்னுமொரு எண்ணெயப்பா
அனல்மீறிக் குழந்தைகட்கு அங்கமெல்லாம்
நிறையவே சொரிசிரங்கு நின்றதானால்
நிலவரமா யாமணக்கி னெண்ணெயோடு
மறையான மேனியுடன் மணித்தக்காளி
மைந்தனே முடக்கற்றான் வகைப்படிக்கால்
குறையாமல் முக்குரட்டை யரைத்தசாந்து
கூட்டிடுவா யெலுமிச்சம் பழத்தில்வாரே. (490)

வாராகக் காய்ச்சிவடித் தெடுத்துக்கொண்டு
வகையாகக் கரண்டிமுறை கொடுப்பாயப்பா
நேராகப் பத்திந்தா னிச்சாபத்யம்
நிச்சயமா யைந்துநா ளேழுநாளாம்
சீராகத் தலைமுழுகி வருவாராகில்
சிறுசிரங்கும் பெருசிரங்கும் நில்லாதோடும்
பேராகப் போகரிட கடாட்சத்தாலே
பேசினேன் புலிப்பாணி பேசினேனே. (491)

சிரங்குக்கு மேல்பூசுந்தயிலம்.

பேசுகிறேன் மேல்பூசுந் தயிலமொன்று
பெரியாம்பல் கிழங்குடனே செங்கத்தாரி
மாசறவே யெடைக்கெடைதா னெடுத்துக்கொண்டு
மைந்தனே அவுரிச்சா றதனிலாட்டி
நாசமென்ற வேப்பெண்ணெய் தன்னிற்கூட்டி
நான்குநாள் பூசிவரச் சிரங்குபோகும்
தேசிகனார் போகரிட கடாட்சத்தாலே
தெளிவாகப் புலிப்பாணி பாடினேனே. (492)

பிள்ளைபெற மாட்டாதார்க்கு.

பாடியே பிள்ளைவெளி காணாப்பேர்க்குப்
பண்பான கீழ்க்காயி னெல்லிமூலம்
வாடியே போகாமல் வளையமாடி
வசமான இடக்காலில் பெருவிரலிற்போட
நீடியே பிள்ளைவெளி காணுமப்பா
நினைவாக இன்னுமொரு வேரைக்கேளு
சூடியே முன்னைவேர் தனையெடுத்து
சுரபியெனும் பசுவின்பால் தனிலரைத்தே. (493)

அரைத்தெடுத்து உள்ளுக்குக் கொடுத்தாற்பிள்ளை
அப்பனே கீழ்விழுந்து அழுமேபாரு
மறைத்தபொரு ளென்றுநீ மயங்கவேண்டாம்
மகாகோடி புண்ணியங்க ளுனக்குண்டாகும்
துரைத்தனமாய் நீயலைந்து திரியவேண்டாம்
துய்யமெனும் நூல்களெல்லாந் துணிந்துபாரு
உரைத்தகுரு போகரிட கடாட்சத்தாலே
உரைத்திட்டேன் புலிப்பாணி யுலகில்தானே. (494)

கற்றாழை நாற்றந்தீரக் கட்டு.

உலகிலே மானிடர்க்குக் கற்றாழைநாற்றம்
ஓட்டிவிடச் சாங்கொன்று உரைக்கக்கேளு
நலநாரி கரந்தையுட வேருங்கூட
நன்னாரி வேருடனே முத்தக்காசுங்
குலமிலகுங் கஸ்தூரி மஞ்சள்தானும்
கூட்டியே வகைவகைக்கு விராகனேந்து
கலகமிலே யரைத்ததனைக் கமுகட்டில்பூச
கண்டோடுங் கற்றாழை நாற்றமெண்ணே. (495)

தலைப்பேனுக்கு மாரணம்.

எண்ணவே தலையிலுள்ள பேன்கள்சாக
எடுத்துரைப்பேன் சூதமொரு கழஞ்சுவாங்கி
நண்ணவே மேனியின்சா றுவிட்டுஆட்டி
நன்னூலில் தான்புரட்டி நவிலக்கேளு
திண்ணமே சிகையில்சிக்கம் போல்சொருகச்
சிரசிலுள்ள பேன்களெல்லாம் செத்துப்போகும்
கண்ணவே போகரிட கடாட்சத்தாலே
கலையறிந்து புலிப்பாணி பாடினேனே. (496)

காட்டினேன் முப்பூவே கலனில்லாமல்
கண்டறிந்து செய்தொழிலிற் கலந்துகொள்ள
நாட்டினேன் கபடமொன்று மில்லையப்பா
நன்மையுடன் நீயோட நாதனென்பார்
பூட்டினேன் கெவனமுத விதிலேயாகும்
புண்ணியனே வாதமொடு வைத்யமாடக்
காட்டினேன் போகரிட கடாட்சத்தாலே
கனமாகப் புலிப்பாணி கலையில்தானே. (497)

நூற்றேதப்பு.

கலையிலே பதினாறும் இருபத்தைந்துங்
கனமான வைம்பதுட னூறும்பாரு
நிலையிலே சண்முகத்தின் பூசைமார்க்கம்
நீமகனே சாலமிரு நூறும்பாரு
மலையிலே பலதிரட்டு முன்னூறப்பா
மைந்தனே சோதிடமு முன்னூறப்பா
குலையிலே சுகநூலா முன்னூறுதானுங்
குருவான போகரிட கடாட்சமாமே. (498)

வைத்தியர்க்குப்புத்திகூறல்.

ஆமேதான் பண்டிதரே அறையக்கேளும்
ஆதரையி லெளியோர்க்கு அவிழ்தமீந்து
தாமேதா னன்னமிட்டு வஸ்த்ரமீந்து
தயவாகத் தன்னுயிர்போ லவரைக்காத்துத்
தீமேதான் சேராமல் புண்யவானுய்த்
தீர்க்கமுள்ள வைத்தியனு யிருந்துவாழ்வாய்
நாமேதான் போகரிட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி நவின்றிட்டோமே. (499)

வியாதியஸ்தனுக்குப் புத்திகூறல்.

நவின்றிட்டோம் புவிதனிலே வைத்தியமார்க்கம்
நன்றாகச் சொல்லிவைத்தே னிந்நூல்வேண்டும்
பவின்றிட்ட நோயாளர் வைத்தியர்க்குப்
பண்பாகத் தொழுதேத்தித் தாம்பூலமீந்து
இவின்றிட்ட மவையெல்லா மவர்க்குச்சொல்லி
இதம்பெறவே செய்தபின்பு அவிழ்தங்கொள்வாய்
கவின்றிட்ட போகரிட கடாட்சத்தாலே
காசினியில் புலிப்பாணி யைந்நூறுமுற்றே. (500)

புலிப்பாணி வைத்தியம் ருா

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

புலிப்பாணி முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# நாடி சாஸ்திரம்.

ஒருவர்க்கு நாடி பார்க்கும்பொழுது, ஆடவர்களுக்கு வலக்கையும், ஸ்திரீகளுக்கு இடக்கையுமாக நாடி பார்க்கவேண்டும்.

அப்படிப் பார்ப்பதில் முன் கையில் ஒரு அங்குலந் தள்ளி நாடி பார்க்கவேண்டியது.

மனிதர்களுக்கு முக்கியமான நாடி மூன்று. அதாவது: வாத, பித்த, சிலேற்பனம்.

நாடி பார்க்கவேண்டியதாவது; மூன்று விரலால் பார்க்க வேண்டியது; அந்த மூன்று விரலில் முதல் விரல் வாதநாடி முழுமாத்திரையும், நடு விரலில் பித்தநாடி அரை மாத்திரையும், மூன்றும் விரலில் சிலேற்பனநாடி கால்மாத்திரையும், பேசவேண்டியது. தவறிப்பேசினால் வியாதி யின்னதென நிதானித்துப் பார்க்கவும்.

வாதநாடி: அன்னம், கோழி, மயில் போல நடக்கும். அப்படி நடக்குமானால் வியாதியில்லை.

பித்தநாடி: ஆமை, அட்டை போல் நடக்கும். அப்படி நடக்குமானால் வியாதியில்லை.

சிலேற்பனநாடி: தவளை, பாம்பு போல் நடக்கும். அப்படி நடந்தால் வியாதியில்லை.

இந்த நாடிகள் மூன்றுந் தவறி நடந்தால், வியாதிகள் இன்ன தென்று தெரிந்து கொள்ளவும்.

வாதநாடி யெழுந்தால், நாவில் புளிப்புண்டாகும். அது மேல், கால் வலியையும், உஷ்ண வாயுவையுங் கொடுக்கும், அசதியுண்டாகும்.

பித்தநாடி யெழுந்தால், நாவிற் கசப்புண்டாக்கும். அது கிறுகிறுப்பு, மயக்கம், அசதி, மந்த வாயுவையும் அன்னத் துவேசத்தையுங் கொடுக்கும்.

சிலேற்பணநாடியெழுந்தால் நாவிலினிப்புண்டாக்கும். அதுகபம்,தகை பெருமூச்சு, மயக்கமுங் குளிர்ச்சியையுங் கொடுக்கும்.

வாதத்தில் வாதமானால் அன்னம் போல் நடக்கும். தேகம் பதரும், அன்னத்துவேச முண்டாகும், வாதசுரங் காணும், நாவில் மழு மழுப்புண்டாகும்.

வாதத்தில் பித்தமானால் மயில் போல நடக்கும். ஓங்கி தலையாட்டுதல் போலுமிருக்கும். அது தலையிடி காணும், பித்த சுரமும் வாந்தியுமுண்டாகும்.

வாதத்தில் சிலேற்பனமானால் கானகத்து கோழி போலும் பாம்புபோலும் நடக்கும். அது மேல் வீக்கங்காணும், அன்னத்துவேச முண்டாகும், சுரங்காணும். இதை பயங்கரத்துடன் பார்க்க வேணும்.

பித்தத்தில் வாதமானல் சாரைபோல் நடக்கும். அது பிடரி காலுங் கையுங் குத்தும். அசதியுண்டாகும், கோபமிகுதியாயிருக்கும்,

பித்தத்திற் பித்தமானால் தவளைபோற் குதிக்கும். அதுகிறுகிறுப்பும், இளைப்பு முண்டாகும், தேகம் வற்றும். மேனி வெளுக்கும், அன்னத்துவேச முண்டாகும்.

பித்தத்திற் சிலேற்பனமானால் அரணை வால்போற் றுடிக்கும். அது வாய் குளறும். வாய் நீர் தன்னை யறியாமல் வடியும்.

சிலேற்பனத்தில் வாதமானல் அட்டை போல் நெளியும். அது, நரம்புகள் புடைத்து நிற்கும். பிடரி வலிக்கும், வாய் குளறும்.

சிலேற்பனத்திற் பித்தமானல் துடிதுடித்து ஓடும். அதுசாப்பிடும் பதார்த்தங்களெல்லாம் கசக்கும். பேச்சு மாறுதலாயிருக்கும், அசாத்தியமுண்டாகும்.

சிலேற்பனத்தில் சிலேற்பனமானல் நாடிஅமுங்கி விடும். அதுஇரண்டு கண்ணுமட்டமாகும். உடம்பு சில்லென்று தோஷித்திருக்கும்.

காலை வாதநாடி கடும்பகல் பித்தநாடி மாலை சிலேற்பனநாடி பேசினல் குற்றமில்லை.

நாடியானது புறந்துடித்து குருநாடி சேர்ந்தால் ஒரு மாதத்திற்குள் வியாதி தீரும். அப்படி தீராவிட்டால் நம்பவேண்டாம்.

நாடியானது பகலும் இரவும் பேதித்துப்பேசுமாகில் வாய்வு சம்பந்தத்தில் வந்த சிக்கென்று சொல்லவும்.

இராத்திரி பேசின சிலேற்பன நாடி விடிந்த பின்பு தவறிப் பேசினல் வாதநாடி விடைத்துப் பேசினுலும் மடித்துப் பேசினுலும் நம்பவேண்டாம்.

பித்தநாடி வாதத்துடன் தொந்தித்துகிமிர்ந்துநின்ருல்நம்பவேண்டாம்

சிலேற்பனநாடி சுழல் வண்டுபோற் சுழன்ருலும் நடுங்கினுலும் படபடப்பாய் நின்ருலும் நம்பவேண்டாம்.

நாடியானது தீபத்தின் முனைபோற் பேசுமாகில் பயமில்லை. மற்ற சோதனை நேரத்திலும் அதுபோலிருக்கு மாகில் மருந்து கொடுக்கலாம்.

பல்லுக்கருத்து வாயினுல் மேல்மூச்சு வாங்கிக்கொண்டிருக்கும்போது சிலேற்பனநாடி பேசினல் நம்பவேண்டாம்.

கண் பஞ்சடைந்து சுவாச மேல்வாங்கி விக்கல் கண்டிருக்கும்போது சேத்துமநாடி பேசினல் நம்பவேண்டாம்.

பேச்சுமாறுதலாகி வாரிச்சுருட்டியெழுந்திருக்கவும் ஓடவும் படுக்கவும் யிருக்கும்போது சிலேற்பனநாடி பேசினல் கடுமையான தோஷிப்பு நம்பவேண்டாம்.

உடம்பில் பசு நரம்பு தோன்றி நாவறட்சி கண்டு முகம் நீண்டு நகங்கருத்து தேகம் வெளுத்திருக்கும்போது சிலேற்பனநாடி பேசினல் நம்பவேண்டாம்.

சுரத்தில்நாவறட்சிகண்டு தாகமெடுத்து தோஷித்திருக்கும்போது வாதமுஞ் சிலேற்பனமுஞ் சேர்ந்து ஒரு நாடியிற் பேசினல் நம்பவேண்டாம்.

பேதியானவர்களுக்கு வாதபித்த சிலேத்தும மூன்றும் பேசாது. அதனுல் பயந்து விட்டுவிட வேண்டாம். தக்கமருந்துகளினுல் நாடிகள் பேசும்படி செய்யலாம்.

பூதநாடி பேசுமாகில் பேய் பிசாசு தோஷமென்று சொல்லவேண்டியது. அதற்கு மருந்தினுலும் தக்க மந்திரங்களினுலும் வாதபித்த சிலேத்துமநாடி மூன்றும் பேசும்படி செய்யலாம்.

மற்ற நாடிகளின் நுட்பந் தெரிய வேண்டுமானுல் குருநாடியைப் பார்க்கவும்.

புலிப்பாணிமுனிவர் நாடிசாஸ்திரம்

முற்றிற்று.

திருச்சி மேட்டுச்சிந்தாமணி வைத்தியம் கோவிந்தசாமி நாயுடு அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

புலிப்பாணிமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியம் நூற்றைம்பது - ௱ன்

பரிபாஷை மருந்து முதலியவைகளின்

# அரும்பதவுரை.

2-வது பாட்டில்— பாச்சானென்பது - பயத்துக்கள்ளி, அதாவது கொடிக்கள்ளி யென்றுஞ் சொல்லுவார்கள், கடிகை யென்பது-நாழிகை.

3-வது பாட்டில்— அமுரியென்பது-சிறுநீர், கடிகையென்பது-நாழிகை, பாச்சானென்பது-பயத்துக்கள்ளி.

6-வது பாட்டில்—சார்த்திகையின்கிழங்கென்பது-கார்த்திகைக்கிழங்கென்றும் பேர், அதாவது காட்டுவெங்காயமென்றும் பேர், கலப்பைக்கிழங்கு யென்றும் பேர்.

7-வது பாட்டில்— வெந்தோன்றி யென்பது-கண்ணுப்பூளைச் செடி யென்றும் பேர்.

9-வது பாட்டில்— கரந்தை யென்பது - நாராகரந்தை, அதாவது கொட்டகரந்தை, ஆண்செருப்படையென்பது-பெரிய செருப்படை.

10-வது பாட்டில்— சூதகமென்பது-வீட்டுக்கு விலக்கம்.

14-வது பாட்டில்— நாவல்பட்டை யென்பது-நவ்வாப்பட்டை.

17-வது பாட்டில்— கவிசையென்பது-பெறுவயிறு, அருவைக்கட்டியென்பது-அரையாப்புக்கட்டி.

19-வது பாட்டில்— ஆதொண்டை யென்பது-காத்தொட்டிச்செடி.

22-வது பாட்டில்— வெந்துதீர்ந்த பின்-அடியிலிருக்குங்கடுகு.

23-வது பாட்டில்— அண்டமென்பது-விரைவீக்கம்.

25-வது பாட்டில்— தனப்பாலென்பது-பிள்ளைப்பால்.

26-வது பாட்டில்— கள்ளியென்பது-பயத்துக்கள்ளி, புன்ன முருங்கை யென்பது புனல்முருங்கை.

28-வது பாட்டில்— சங்குயென்பது-கடற்சங்கு, கரியமால்தாரம் - அரிதாரம், மேதிக்கொம்பு யென்பது-எருமைக் கொம்பு, வனமென்பது - பன்றி.

29-வது பாட்டில்— நந்திபத்திரி யென்பது-நந்தியாவட்டையிலை.

31-வது பாட்டில்— நீர்ப்பூண்டென்பதை முன்னவர்கள்-நீர்முள்ளி யென்று ஆண்டு வந்திருக்கிறார்கள். இப்போது சில வயித்தியர்கள் நீரவெங்காயமென்று ஆண்டு வருகிறார்கள்.

33-வது பாட்டில்— கருவேலி யென்பது-கருவேலங்கொழுந்து.

34-வது பாட்டில்— சீனமென்பது-சீனிக்காரம்.

36-வது பாட்டில்— புண்ணாக்கிலையென்பது - புண்ணாக்குகீரையிலை, கோளங்கட்டி யென்பது-ஒருதுணியில் பொட்டண முடிப்புக்கட்டி.

38-வது பாட்டில்— அரப்பொடி யென்பது-இரும்புப்பொடி, தந்தமென்பது-பல் மாசக்காயென்பது-மாச்சக்காய்;

40-வது பாட்டில்— கன்னியுடநூலென்பது-சிறுபெண்கள், நூற்கிறநூல் அல்லது வெள்ளைத் தாமரை நூல்.

42-வது பாட்டில்— பாச்சானென்பது-பயத்துக்கள்ளி, இதை கொடிக்கள்ளி யென்று சொல்லுவார்கள், கொடிக்கள்ளி வேறே யிருக்கிறது, இந்த பயத்துக்கள்ளியானது, கள்ளி மரமாகவும் தட்டாங்காய் போலவு மிருக்கிறது.

45-வது பாட்டில்— குதிரையஸ்தி யென்பது-குதிரை யெலும்பு.

48-வது பாட்டில்— கொல்லனென்ற கொலவையென்பது-கொல்லன் கோவை, அப்பை யென்பது - அப்பைக் கோவை.

49-வது பாட்டில்— நீர்ப்பூண்டு-ஈருள்ளி.

56-வது பாட்டில்— மேனியென்பது-குப்பைமேனி.

60-வது பாட்டில்— மயிர்பீலியென்பது-மயிலிறகு.

63-வது பாட்டில்— அண்டமென்பது கோழி முட்டை.

64-வது பாட்டில்— யொட்டைத் தூளென்பது - புகையிரல்தூளென்று சிலர்உபயோகித்து வருகிறார்கள், சிலர்கள் ஒட்டரைத்தூளை உபயோகித்து வருகிறார்கள்.

66-வது பாட்டில்— கையானென்பது-கரிப்பான்செடி, சம்புத்தளிரென்பது-நவ்வற்கொழுந்து.

72-வது பாட்டில்— வெள்ளுள்ளி யென்பது-வெள்ளைப்பூடு, புண்ணுக்குப்பூண்டு யென்பது -புண்ணுக்குக்கீரை.

77-வது பாட்டில்— பிரம்பினுடகிழங்கு யென்பது-பிரம்பின்வேர்,

79-வது பாட்டில்— கொடுப்பையென்பது-பொன்னாங்காணி, கையானென்பது-கரிப்பான், ஆதொண்டையென்பது-காத்தொட்டியிலை.

80-வது பாட்டில்—பாச்சானென்பது-பயத்துக்கள்ளி, சங்கென்பது-சங்கஞ்செடி.

83-வது பாட்டில்—அசுவகெந்தி யென்பது-அமுக்கிராச்செடி, நிலக்குமி ளென்பது-குமிளமரம், சித்திரமூலமென்பது-கொடிவேலி, பூமிச்சக்கரை யென்பது-பூமிச்சக்கரைக் கிழங்கு, நீர் நெருப்பென்பது-நீர் மேல் நெருப்புச் செடி.

84-வது பாட்டில்—மதுரமென்பது-அதிமதுரம், மாஞ்சிலென்பது-சடா மாஞ்சில், திரிகடுகு யென்பது-சுக்கு திப்பிலி, மிளகு திரிபலாதி யென்பது - நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய்.

85-வது பாட்டில்—சிறு லவங்கம் என்பது-சன்னலவங்கப் பட்டை, கார்போக மென்பது-கார்போக அரிசி, முத்தக்காசென்பது-கோரைக்கிழங்கு.

88-வது பாட்டில்—காடியென்பது புளிச்ச தண்ணீர், ஆதொண்டையென்பது-காத்தொட்டி, நீர்ப்பூண்டு யென்பது-நீர்முள்ளி, சீன மென்பது-சீனிக்காரம்.

95-வது பாட்டில்—பூனை தொழும் பட்டையென்பது-துப்பைமேனிப்பட்டை, நீலிவேரென்பது-அவுரிவேர்.

98-வ்து பாட்டில்—ரசபதங்கம் என்பது-வாலைரசம்.

99-வது பாட்டில்—ஞாளிமல மென்பது-முன்னவர்கள் நாய் மலத்தை ஆண்டுவந்திருக்கிறார்கள். இப்போது சில வயித்தியர்கள் பூனை மலத்தை கையாண்டு வருகிறார்கள்.

100-வது பாட்டில்—கொல்லனிட கோவை யென்பது - கொல்லன் கோவை, மயிர் பீலி யென்பது-மயிலிறகு, வெள்ளி யென்பது-கிழமை.

101-வது பாட்டில்—மட்டிப்பா லென்பது-சாம்பிராணிப்பால்.

102-வது பாட்டில்—எட்டியதின் பழமென்பது-காஞ்சூரையின் பழ

107-வது பாட்டில்—முருங்கை யென்பது-கீரை முருங்கை.

109-வது பாட்டில்—நீலிவேரென்பது - அவுரிவேர், காடியென்பது - புளிச்ச தண்ணீர், ஊனேரி யென்பது-கெற்பம்.

110-வது பாட்டில்—ஊனேரி யென்பது-கெற்பம், மாவு யென்பது மாக்கொடி.

111-வது பாட்டில்—வச்சிநீ ரென்பது-இரத்தம் சூதகநீர்.

112-வது பாட்டில்—கிளத்திரி யென்பது-பெண்குறி, ஊனேரி யென்பது-கெற்பம்.

113-வது பாட்டில்—வச்சிநீர் என்பது-இரத்தம், பச்சினி யென்பது-பத்தா மாதம்.

114-வது பாட்டில்—கிலப்பயிரென்பது-பெண், கெச்சணி யென்பது-சேர்தல், சூதச்செம்பு என்பது-வீட்டு விலக்கம். ஊனேரி யென்பது-கெற்பம், சென்னிவளை யென்பது தலைமண்டை.

115-வது பாட்டில்—புண்ணாக்கிலை யென்பது-புண்ணாக்கு கீரை, வீழி யென்பது-வீழியிலை, சங்கு யென்பது-சங்கஞ்செடி, கோவை யென்பது-கோவைச் செடி, சின்னி யென்பது-சிறுசின்னிச்செடி, முட்டைநாறி யென்பது-மூஷ்ட்டைக்கீரை, இராஜகனி

வித்தென்பது-எலுமிச்சம்பழவித்து, முசல்க்கா தென்பது-முயற்காதினிலே, வாகையப்பை யென்பது.வாகை மரம்,அப்பை-அப்பைக்கோவை, கோழியுட அவரை யென்பது-கோழியவரை இலை.

116-வது பாட்டில்—வேலி யென்பது-வேலிப்பருத்தி, சீனமென்பது-சீனிக்காரம், அப்பையுட சாறு யென்பது-அப்பை இலைச்சாரு.

119-வது பாட்டில்—எட்டி விதை யென்பது-காஞ்சிரை விதை, கொட்டவிரை யென்பது-காட்டா மணக்கு கொட்டைமுத்து.

122-வது பாட்டில்,—கபாலமென்பது-தலையோடு, சீனமென்பது-சீனிக்காரம்.

123-வது பாட்டில்—கதபத்தின் பால் யென்பது-கழுதைப்பால்.

124-வது பாட்டில்—பேய்மிரட்டி யென்பது-கிலுகிலுப்பைச்செடி.

129-வது பாட்டில்—சுடுதருத்தி யென்பது-சுடுதாத்தியிலே, தவமுருங்கை யென்பது-தவசு முருங்கை, அசுவகெந்தி யென்பது-அமுக்கிரா, முயற்காது யென்பது-முயற் காதினிலே, சூரி யென்பது-நத்தைச்சூரி.

130-வது பாட்டில்—முட்டி யென்பது-சித்தா முட்டி, தாமக்கொவ்வை யென்பது-ராமக்கோவை, மேனி யென்பது-குப்பைமேனி.

131-வது பாட்டில்— திகைப்பூண்டென்பது - தீகைப்பூண்டு பூச்சி, வேம்பாடமென்பது-வேம்பாடம்பட்டை.

136-வது பாட்டில்— மூலமென்பது-கிழங்குவேர்.

138-வது பாட்டில்— சங்கோடென்பது-சங்கஞ்செடி, பாச்சானென்பது-பயத்தாங்கள்ளி, நீர்ப்பூண்டுயென்பது-ஈருள்ளி.

1 9-வது பாட்டில்— கார்போகமென்பது-கார்போக அரிசி.

154-வது பாட்டில்— இலகிநடபட்டை யென்பது - உலகம்பட்டை காடியென்பது - புளிச்சதண்ணீர், சங்கம்வேர் யென்பது-சங்கஞ்செடிவேர்,

155-வது பாட்டில்— அமுரியென்பது-சிறுநீர், காடியென்பது-புளிச்ச தண்ணீர்.

156-வது பாட்டில்— கொட்டைப்பாலை யென்பது - சிறு கொட்டை முத்துயிலை.

159-வது பாட்டில்— பொரிச்சாரென்பது - புளியிலாச்சாறு, வேலி யிலையென்பது-வேலிப்பருத்தியிலை,

161-வது பாட்டில்— அகிலின்கட்டை யென்பது-அகில் சந்தனக்கட் சட்டை.

166-வது பாட்டில்— உதகமென்பது - சஞ்சீவி பச்சிலை, காஞ்சன மென்பது-பொன், தங்கம்.

168-வது பாட்டில்— காணிச்சாறென்பது - பொன்னுங்காணிச்சாறு, சங்கம்பழமென்பது-சங்கஞ்செடிப்பழம்.

170-வது பாட்டில்— துலாமென்பது-ஆறுவீசைகொண்டது, தூணி யென்பது-எட்டுப்படிகொண்டது.

176-வது பாட்டில்— சின்னியென்பது-சின்னியிலை.

181-வது பாட்டில்— அசுவகெந்தி யென்பது-அமுக்கிராச்செடி, நஞ் சுண்டபட்டையென்பது-விஷப்பாலைப்பட்டை.

182-வது பாட்டில்— பசுமூலியென்பது-பச்சைப்புல்.

187-வது பாட்டில்— ஓடுக்காமெனன்பது-ஆமை.

189-வது பாட்டில்— தூணியென்பது-யெட்டுப்படிகொண்டது,

199-வது பாட்டில்— அரப்பொடி யென்பது-இரும்புப்பொடி,

201-வது பாட்டில்— கோசலமென்பது - பசுக்கோமயம், ரோசனை யென்பது-கோரோசனை.

203-வது பாட்டில்— வெள்ளுள்ளி யென்பது-வெள்ளைப்பூடு, குப்பை யொன்பது-சதகுப்பை, மேனி யென்பது குப் பைமேனி.

206-வது பாட்டில்— பொற்றலை யென்பது-பொற்றலைக்கரிப்பான்.

208-வது பாட்டில்— இரசிதமென்பது-வெள்ளி.

210-வது பாட்டில்— கழல் பருப்பென்பது-கழர்ச்சிப்பருப்பு, ரோக ணி யென்பது - கடுகுரோகணி, தாரமென்பது அரிதாரம்.

213-வது பாட்டில்— வெள்ளையென்பது-சங்குப்பாஷாணம்.

215-வது பாட்டில்— கெந்தியென்பது-கெந்தகம்.

216-வது பாட்டில்— திரிகடுகு-சுக்கு திப்பிலி மிளகு.

217-வது பாட்டில்— அண்டமென்பது - கோழிமுட்டை, குக்கிடப் புடமென்பது - கோழிப்புடம், கோழி வுயரப் புடம் யெரு பத்து.

221-வது பாட்டில்— வேசரியென்பது-கழுதை, லத்தியென்பது-விட்டை, மேனி யென்பது-குப்பைமேனி, கையானென்பது-கரிப்பான், குப்பியென்பது - சங்கக் குப்பி.

225-வது பாட்டில்— பூவந்தி யென்பது-பூந்திக்கொட்டை, எட்டியென்பது-காஞ்சிரை.

227-வது பாட்டில்— சேங்கொட்டை மூக்குவெட்டி யென்பது-சேங்கொட்டையை முனியில் வெட்ட வேண்டியது.

231-வது பாட்டில்— நல்லாரை யென்பது-ஆரைக்கீரை.

235-வது பாட்டில்— ஒன்பானென்பது-ஒன்பது.

249-வது பாட்டில்— சம்பு யென்பது-நாவல், பிரம்மிமூலமென்பது-பிரம்பின் கிழங்கு,

257-வது பாட்டில்— பாவட்டை யென்பது பாவட்டைச்செடி, நல்ல வேளை யென்பது-தைவேளை.

258-வது பாட்டில்— பிரம்பினுட கிழங்கு யெனபது - பிரம்பின்வேர் கிழங்கு.

265-வது பாட்டில்— சித்திரமூலமென்பது-கொடிவேலி.

272-வது பாட்டில்— மால்கரந்தையென்பது-விஷ்ணுகரந்தை.

278-வது பாட்டில்— முத்தக்காசென்பது-கோரைக்கிழங்கு.

279-வதுபாட்டில்— முசுக்கை யென்பது-முசுமுசுக்கை.

284-வது பாட்டில்— உள்ளிப்பாலென்பது - வெங்காயச்சாறு, ரோசனையென்பது-கோரோசனை.

286-வது பாட்டில்— வில்லோடு யென்பது-வில்வபழத்தின்ஓடு, விளாவிேனாடு யென்பது-விளாம்பழத்தின்ஓடு, உத்திராக்கமென்பது-உத்திராச்சமணி.

287-வது பாட்டில்— மயிர்பீலி-மயிலிறகு.

288-வது பாட்டில்— அரசினுடகொழுந்து யென்பது-அரசமரத்தின் கொழுந்து, முத்திரிக்கா யென்பது - முந்திரிக் காய்.

292-வது பாட்டில்— குமரிச்சாறென்பது - சோற்றுக் கற்றாழையின் சாறு.

294-வது பாட்டில்— குமரி-சோற்றுக்கற்றாழை.

297-வது பாட்டில்— முருங்கையீர்க்கு யென்பது-முருங்கையினுடை மரக்கொம்பில்-கீரையிருக்கிறயீர்க்கு.

299-வது பாட்டில்— மயிர்பீலி யென்பது-மயிலிறகு.

301-வது பாட்டில்— கலைத்தோலென்பது - மான்தோல், தழுதாழை யென்பது-வாதமடக்கி, மேனியென்பது-குப்பை மேனி.

302-வது பாட்டில்— வட்டவாகை யென்பது—நிலவாகை,உத்தாமணி யென்பது-வேலிப்பருத்தி.

304-வது பாட்டில்— விளாவென்பது-விளாமரம், சங்குயென்பது-சங் கஞ்செடி, தாங்கியென்பது - மலைதாங்கிச்செடி, காட்டுமொச்சை யென்பது - அஞ்சிலைநொச்சி.

305-வது பாட்டில்— புண்ணாக்குப்பூடு யென்பது-புண்ணாக்குக்கீரை, சித்திரமூலமென்பது - கொடிவேலி, கொவ்வை யென்பது-கோவை,கையானென்பது-கரிப்பான்.

306-வது பாட்டில்— திரிகடுகென்பது-சுக்குத் திப்பிலி மிளகு.

308-வது பாட்டில்— சத்திசாறு யென்பது-சத்திசாரணை.

309-வது பாட்டில்— நாரிச்சாறென்பது-முசுட்டைக்கீரை.

313-வது பாட்டில்— நீலிவேரென்பது-அவுரிவேர்.

314-வது பாட்டில்— நெல்லியென்பது-நெல்லிமரம்,முள்ளியென்பது- நீர்முள்ளி, பசும்பய றென்பது-பாசிப்பயறு.

323-வது பாட்டில்— திரிகடுகென்பது-சுக்குத் திப்பிலி மிளகு,

324-வது பாட்டில்— சித்திரமூலமென்பது - கொடிவேலி, முத்தக்கா சென்பது-கோரைக்கிழங்கு.

325-வது பாட்டில்— திரிபலையென்பது-கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய், அசுவகெந்தி யென்பது - அமுக்கிரா, பூனையென்ற காலிவித்தென்பது - பூனைக்காலி வித்து.

326-வது பாட்டில்— நீர்விட்டான் கிழங்கென்பது-தண்ணீர் விட்டான்கிழங்கு.

330-வது பாட்டில்— அண்டமென்பது - கோழி முட்டை, பச்சைபூரமென்பது-பச்சைக்கற்பூரம்.

334-வது பாட்டில்— அசுவகெந்தி யென்பது - அமுக்கிரா, இருகுமிழென்பது-சிறுகுமிழ் பெருகுமிழ்.

335-வது பாட்டில்— திரிகடுகுயென்பது - சுக்குத் திப்பிலி மிளகு, அரத்தை யென்பது—சிற்றரத்தை.

339-வது பாட்டில்— கருப்பஞ்சாறு-கரும்புச்சாறு.

341-வது பாட்டில்— மேனி யென்பது-குப்பைமேனி.

342-வது பாட்டில்— குக்குடப்புடமென்பது-கோழிப்புடம் வெரு10.

343-வது பாட்டில்— திரிபலை யென்பது - தான்றிக்காய் மாச்சக்காய் கடுக்காய், கெந்தியென்பது-கெந்தகம்.

348-வது பாட்டில்— சித்தர்மூலமென்பது-கொடிவேலி,

350-வது பாட்டில்— வேளையென்பது - தைவேளை, சித்தர்மூலமென்பது-கொடிவேலி,

351-வது பாட்டில்— அரத்தை யென்பது-சிற்றரத்தை, காயமென்மென்பது - பெருங்காயம், ரோகணியென்பது கடுகுரோகணி.

356-வது பாட்டில்— ஆக்கிராண மென்பது - பொடி.

362-வது பாட்டில்— பாண்டமென்பது—மண்பானை, நெல்பிசறியென்பது - நெல்பிசறி.

363-வது பாட்டில்— சிப்பிநூறென்பது-காக்காசிப்பிநூறு, இரைச்சியென்பது-சதைவீரம், சௌவீரம், பச்சைப்பூரம்-பச்சைக்கற்பூரம்.

365-வது பாட்டில்— சீனமென்பது-சீனிக்காரம், சாரமென்பது-நமச்சாரம், பாடுவண்டுயென்பது—குருவண்டு.

366-வது பாட்டில்— பேரண்டமென்பது-தலைமண்டைஓடு.

367-வது பாட்டில்— பேரண்டமென்பது - தலைமண்டை, சிற்றண்டமென்பது-கோழிமுட்டை.

371-வது பாட்டில்— அக்குமணி யென்பது-பலகரைமணி.

376-வது பாட்டில்— வஸ்திவென்பது-சாராயம், அண்டமென்பது-கோழிமுட்டை.

377-வது பாட்டில்— அரியென்பது-அரிசி.

389-வது பாட்டில்— நந்திக்கிசலத்தைக்கட்டுயென்பது-நந்தியிருக்கிறயிடத்தை சுத்திவளைந்து தண்ணீர்கட்டுதல்.

392-வது பாட்டில்— பிர்மராக்ஷத மூலமென்பது-குருக்குச்செடி.

394-வது பாட்டில்— தலைப்பிள்ளைக்கொடியென்பது-பசளையுற் பத்திக்சொடி

395-வது பாட்டில்— மேனிமேவர் குப்பைமேனிமேவர் கழுதைத்தண்டுயென்பது-கத்தவத்தின் தண்டு, கருச்சிலை யென்பது-சிகப்புசிலை.

400-வது பாட்டில்— பாழ்வீடாதல்-குட்டிச்சுவர்வீடு.

404-வது பாட்டில்— சாரமென்பது-நமச்சாரம்.

408-வது பாட்டில்— மரத்துவெள்ளை யென்பது-வெள்ளைகுங்கிலியம்

409-வது பாட்டில்— ஏரண்டமென்பது - ஆமணக்கின் கொட்டை முத்து.

410-வது பாட்டில்— ஆதொண்டை யென்பது - காத்தொட்டி, கிரந்திப்பூண்டென்பது-கிரந்திநாயகம்.

411-வது பாட்டில்— சிறலவங்கமென்பது - சன்னலவங்கம், கிளிமூக்கின்கிழங்கு யென்பது-கற்றாழைக்கிழங்கு, குப்பியென்பது - சங்கங்குப்பி, குறுணியென்பது-நாலுபடி.

413-வது பாட்டில்— வாளமென்பது-நேர்வாளம், சேனுமரப்பட்டையென்பது-அழிஞ்சிப்பட்டை.

417-வது பாட்டில்— ஏரண்டமென்பது ஆமணக்கின்கொட்டை முத்மு ஆதொணடை யென்பது-காததொட்டி, பத்திரியென்பது-சாதிப்பத்திரி, சேம்புடையமூலம்-சேமபின்தண்டு.

418-வது பாட்டில்— வேளையென்பது-தைவேளை, மேனியென்பது-குப்பைமேனி ஆலியென்பது-ஆலவிழுது. கார்முருங்கை யென்பது-முள்ளுமுருங்கை.

420-வது பாட்டில்— வெளிச்சிப்பிசின் யென்பது-வெளிச்சிப்பிசின்.

422-வது பாட்டில்— எட்டியென்பது-காஞ்சிரை, சங்கு யென்பது-சங்கஞ்செடி, ஆவிப்பட்டை யென்பது-ஆவிமரப்பட்டை, கொத்தானென்பது-கொத்தான்செடி

423-வது பாட்டில்— கருத்தகண்ணி யென்பது-கரிப்பான், கழுதைமுள்ளிநீர் முள்ளி புடாததியென்பது - காட்டாத்தி, முத்தக்காசென்பது - கோரைக் கிழங்கு, விடத்தாரியென்பது-விடத்தலையிலை, சின்னபலாவென்பது-குட்டிப்பலா, சிறுபலாக்காய் குமரியென்பது-சோற்றுக்கற்றாழை.

424-வது பாட்டில்— கொன்றை யென்பது-கொன்னை, ஆத்தியென்பது-ஆத்திமரம், கழற்கொடி யென்பது - கழர்ச்சிககொடி.

425-வது பாட்டில்— பசுந்தவளை யென்பது-பச்சைத்தவளை, மேதிக்கொம்பு-எருமைக்கொம்பு, பரிக்குளம்பு - குதிரைக்குளம்பு.

428-வது பாட்டில்— கொடியிலை யென்பது-வெற்றிலை.

431-வது பாட்டில்— வரிக்குமட்டி யென்பது - பேய்க்கு மட்டி பசும்பயறு யென்பது-பாசிப்பயறு.

432-வது பாட்டில்— திரிகடுகு சுக்குத் திப்பிலி மிளகு.

433-வது பாட்டில்— மதூரமென்பது-அதிமதூரம், கெந்தியென்பது-கெந்தகம்.

434-வது பாட்டில்— மாஞ்சிலென்பது - சடாமாஞ்சில், திருக்கைநீர் யென்பது-கூகைநீர்.

435-வது பாட்டில்— பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு, புழுகு யென்பது-புனுகு.

437-வது பாட்டில்— பசும்பயறு யென்பது-பாசிப்பயறு.

438-வது பாட்டில்— நாரியென்பது-நன்னாரி, தாங்கியென்பது - மலைதாங்கி, நெய்தல்யென்பது-நெய்தல்கிழங்கு.

439-வது பாட்டில்— வாகையென்பது-நிலவாகை.

440-வது பாட்டில்— சிறுலவங்கமென்பது-சன்னலவங்கம், மஞ்சிஷ்டி யென்பது-மஞ்சிட்டிகிழங்கு, தேவதார மென்பது-தேவதாரமரம், காஞ்சினியென்பது - மஞ்சள், சிங்கியென்பது-கடுக்காய்ப்பூ.

441-வது பாட்டில்— ரோகணி யென்பது—கடுகுரோகணி, முத்தக்காசென்பது-கோரைக்கிழங்கு.

446-வது பாட்டில் — நிம்பவித்தென்பது-வேப்பமுத்து.

455-வது பாட்டில்— சிற்றண்டமென்பது-கோழிமுட்டை, தலையண்டமென்பது-தலைமண்டை.

457-வது பாட்டில்— கூவிளமென்பது-வில்வம்.

458-வது பாட்டில்— அந்தாத்தாமரையென்பது-குழிதாமரை.

460-வது பாட்டில்— மாசற்றவாளமென்பது-சுத்திசெய்தநேர்வாளம்

463-வது பாட்டில்— பசும்பயறு யென்பது-பாசிப்பயறு.

468-வது பாட்டில்— முகைப்பாலென்பது-அமுர்தப்பால்

470-வது பாட்டில்— முத்தக்காசென்பது-கோரைக்கிழங்கு, முகைப்பாலென்பது-அமுர்தப்பால்.

472-வது பாட்டில்— கொடுக்காயென்பது-கொடுக்காப்புளி.

473-வது பாட்டில்— முகைப்பால் யென்பது-அமுர்தப்பால்.

474-வது பாட்டில— அரத்தை ரெண்டு யென்பது-பேரரத்தை சித்தரத்தை.

475-வது பாட்டில்— பழச்சாறென்பது-எலுமிச்சம்பழச்சாறு.

477-வது பாட்டில்— விடையமென்பது-அதிவிடையம்.

478-வது பாட்டில்— தனப்பாலென்பது-அமுர்தப்பால்.

479-வது பாட்டில்— சூதகமென்பது-ரசம்.

481-வது பாட்டில்— முகைப்பாலென்பது-அமுர்தப்பால், குளவிந்தமென்பது—மஞ்சள்.

489-வது பாட்டில்— விடையமென்பது-அதிவிடையம்.

492-வது பாட்டில்— பெரியாம்பலென்பது-அல்லி.

495-வது பாட்டில் — நாரிகரந்தை யென்பது-நாராகரந்தை, முத்தக்காசென்பது-கோரைக்கிழங்கு.

496-வது பாட்டில்— நல்காரியென்பது-சிவகரந்தை.

497-வது பாட்டில்— சூதமென்பது-ரசம்.

500-வது பாட்டில்— அமிழ்தமென்பது—மருந்து.

பரிபாஷை அரும்பத வுரை

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

புலிப்பாணி முனிவர் அருளிச்செய்த

# வயித்தியம் 500.

## அட்டவணை.


| | பாடற்றொகை. |
|---|---|
| அமிர்த சஞ்சீவி மாத்திரை | 469 |
| அக்கர சஞ்சீவி மாத்திரை | 472 |
| அர்த்தனாரி சுரமாத்திரை | 467 |
| அண்டமெழுகு | 455 |
| அக்கினிமந்தத்திற்குலேகியம் | 432 |
| அக்கினிப் பிளாஸ்திரி | 403 |
| அரிதாரப் பற்பம் | 341 |
| அக்கினி மந்தத்திற்குகற்பூரக் குளிகை | 194 |
| அரையாப்புக்கு மருந்து | 48 |
| அண்டவாயுவிற்கு எண்ணெய் | 21 |
| அரையாப்புக்கு யெண்ணெய் | 138 |
| ஆக்கிராணம் | 350 |
| ஆடாத பேய் ஆட மந்திரம் | 394 |
| ஆணிக்கால் தீர லேகியம் | 465 |
| இரத்தங் கொட்டலுக்கும்சீத பேதிக்குஞ் சூரணம் | 483 |
| இரணங்களுக்குப் புகை | 355 |
| இரணம் ஆருகிறதற்கு பிளாஸ்திரி | 405 |
| இருமலுக்கு லேகியம் | 168 |
| இரணங்களுக்குப் புகை | 74 |
| இரணங்களுக்கு களிம்பு | 53 |
| ஈளை காசத்திற்கு லேகியம் | 438 |
| உள்மூல முளைக்கி வேதுநீர் | 272 |
| உடம்பில் கற்றாழை நாற்றம் தீரமருந்து | 495 |
| எலி கடிக்கு மருந்து | 92 |
| ஏவல் தீர்க்க கிரியை | 390 |
| ஒருதலை மண்டையிடிக்கி நசியம் | 24 |
| கண்படலந் தீர இரத்தினாதிக் குளிகை | 28 |

| | பாடற்றொகை. |
|---|---|
| கண்ணில் நீர்வடிதலுக்குமை | 33 |
| கண் வலிக்கு மருந்து | 36 |
| களிப்பு செய்யும் விதம் | 381 |
| கட்டுவாதி மாத்திரை | 477 |
| காதுவலிக்கு யெண்ணெய் | 26 |
| காதடைப்புக்கு தைலம் | 189 |
| காங்கைக்கு மருந்து | 297 |
| கிரந்திக் குயெண்ணெய் | 79 |
| கிரந்தி அரையாப்புக்கு யெண்ணெய் | 138 |
| கிரகசாரத்திற்குச் சாந்தி | 126 |
| குன்மம் ஆறுக்கு உப்பு | 15 |
| குஷ்டத்திற்கு மருந்து | 105 |
| குஷ்டம் கிரந்திக்கு இடிவல்லாதி | 227 |
| குமட்டிக்காய் பதங்கம் | 257 |
| குக்கச் செந்தூரம் சகலவியாதிக்கும் | 265 |
| குடைச்சலுக்கு தைலம் | 299 |
| குழந்தைமாந்ததோசத்திற்கு குளிகை | 314 |
| குன்மம்-வாய்நீரூறலுக்கு இயாளம் | 314 |
| கெற்பமுண்டாகயெண்ணெய் | 156 |
| கெந்தக ரசாயனம் | 268 |
| ஷை | 323 |
| சன்னிக்குத் தயிலம் | 5 |
| சன்னிக்குஅகஸ்தியர்கலிக்கம் | 56 |
| சன்னிக்கு யெண்ணெய் | 60 |
| சகல விஷங்களுக்கு மருந்து | 102 |
| சதுரகிரி வளப்பம் | 166 |
| சயித்தியஞ் சன்னிக்கு கடுகெண்ணெய் | 203 |

சகல மேகத்துக்கும் ரசகெந்தி மெழுகு 248
சகுணம் பார்க்க 275
சகலரோகத்திற்கு குளிகை 343
சகல ரோகத்திற்கும் சித்திர மூல யெண்ணெய் 348
சகல பேய்களுக்குங் குளிசங் கட்ட 397
சாதிலிங்கக்கட்டு செய்கிறபாகம் 179
சிறு பாம்பு கடிக்கு மருந்து 104
சிவகிரி வளப்பம் 163
சிதம்பர மெழுதிக்கட்ட மந்திரம் 389
சிறு பிள்ளைகளுக்கு கட்டுவாதி மாத்திரை 481
சுரத்திற்கு மாத்திரை 2
சுக்பேதிக்குச் சூரணம் 174
சுரத்திற்குகியாழம் 278
சுரத்திற்குராமபாணகுளிகை 321
சுத்த வல்லாதி யெண்ணெய் 433
சூதக வலிக்கு உப்பு 9
சூனியந்தீர புகை 119
சூனியத்திற்கு யெண்ணெய் 129
சூலைக்கு மருந்து 155
சூலைவாயுவுக்கு மேகத்திற்கு தயிலம் 170
சூலை 18 க்கும் கியாழம் 181
சூலை 18 க்கும் வல்லாதித் தயிலம் 225
சூட்டுக்கு மருந்து 292
சூட்டுக்கு முழுக குளிதாமரைத் தயிலம் 358
செய்யான் கடிக்கு மருந்து 100
செங்கிரந்திதடிப்புக்குமருந்து 185
சோகை காமாலைக்கு கியாழம் 66
சோகைகாமாலைக்கு லேகியம் 210
தந்த வியாதிக்குப் பொடி 38
தலைவலி சன்னிக்குப் புகை 193
தலைப்பேனுக்கு மருந்து 496
தளப் கண்ட அவிழ்தம் 286
தாகத்திற்கு கியாழம் 288
தாளக பஸ்பம் 311
தீரும் வியாதி 76
ஷை 328
துவாலைக்கு மருந்து 160
தேள்கடிக்குமூலிகைமருந்து 101
தேவி ஏகமூல மந்திரம் 118
நஞ்சுண்டவர்க்கு மருந்து 109
நவக்கிரக தியானம் 127
நமஞை மெழுகு 460
நாய் நரி கடிக்கு 94
நீரடைப்புக்கு மருந்து 18
நீரில் ரெத்தம் விழுதலுக்கு மருந்து 71
நீரெறிவுக்கு மருந்து 219
நீரடைப்பு கிரிச்சனம் பெரும்பாட்டுக்கு லேகியம் 438
நூற்றெருகுப்பு 498
நோய்க்கும் பேய்க்கும் ஓம சாந்தி 374
நோய்வந்த நாளின் நட்சேத்திர பலனறிய 232
நெஞ்சடைப்புக்குபஞ்சீகரண மாத்திரை 213
பற்புழுச்சாக மருந்து 40
பல் வியாதிக்குப் பொடி 199
பஞ்சீகரண செந்தூரம் 205
பயித்தியந்தீரமருந்து 273
பரங்கிப்பட்டை ரசாயனம் 334
பயித்தியத்திற்கு மருந்து 396
பச்சைக் கற்பூர மாத்திரை 479
பார்வைக்கு குளிகை 115
பிரமை பிடித்தவர்களுக்கு அண்டப்பறபம் 122
பிரமேகத்திற்குயெண்ணெய் 172
பில்லி சூனியம் ஏவலுக்கு துவாலை 256
பித்ததிற்கு சீரகச் சூரணம் 338
பித்தபயித்தியத்திற்குபற்பம் 345

பித்த வெடிப்புக்கு மருந்து 70
பில்லிபயித்தியத்திற்குமருந்து 347
பில்லி வஞ்சனை தீர்ப்பதற்கு கிரியை 390
பிள்ளைகளுக்குபேதிமாத்திரை 475
பிள்ளைகளுக்கு சுரதோஷத்திற்கு குளிகை 484
பிள்ளைகளுக்கு காதில் சீவடிதலுக்கு தயிலம் 486
பிள்ளைகள் சதை பிடிக்கநெய் 487
பிளளைகளுக்கு வாந்தி கண்டால் மருந்து 489
பிள்ளைகளுக்கு கரப்பான் சிரங்குக்கு மருந்து 490
பிள்ளைகளுக்கு சிரங்கிற்குப் போடத் தயிலம் 492
பிள்ளைபெற மாட்டாததற்கு மருந்து 493
பீனிசத்துக்கு யெண்ணெய் 445
பீனிசத்திற்கு நசியம் 25
புரையாதி ரணங்களுக்கு தயிலம் 220
பூனைக்கடிக்கு மருந்து 95
பூரான் கடிக்கு மருந்து 99
பூரக்களிம்பு 296
பூதபில்லி வஞ்சனைக்குதீபம் 395
பெரும் பாட்டு மருந்து 14
பெருச்சாலி கடிக்கு மருந்து 100
பேதியாக மாத்திரை 192
பேய் பூதம் ஓடிப்போக மை 399
மண்டை யிடிக்கு எண்ணெய் 19
மருந்து யீடு முறிய மருந்து 154
மருந்தீட்டுக்கு சிட்சை 107
மருந்தீட்டுக்கு முறிவு வாந்தியாக 177
மரண நாளறிய 246
மாலைக்கண்ணுக்கு மை 81
மாந்ததோஷத்திற்குக் குளிகை 304
முக சன்னிக்கு யெண்ணெய் 58
முழங்கால்வாதத்திற்குமருந்து 72
மூளைமூலத்திற்கு மருந்து 320
மூலரோகத்திற்குச் சூரணம் 136
மேகத்தடிப்புக்கு மருந்து 47
மேகம் 21 க்கு எண்ணெய் 88
மேகவகை 21 க்குப் பரங்கிப் பட்டை பதங்கம் 221
மேகராஜாங்கத் தெண்ணெய் 408
மேகங்களுக்குப் புகை 449
மேருக்கு வடக்கு மனிதர் 146
வயிற்றுக்கடுப்புக்கு மருந்து 191
வண்டு கடிக்கு மருந்து 96
வராககிரி வளப்பம் 165
வண்டுகடி தடிப்பு களிம்பு 295
வயிற்றிரச்சல் சீதபேதிக்கு மருந்து 317
வயித்தியர்க்குப் புத்தி கூறல் 499
வலிப்புகளுக்கு ஜாதி லிங்கக் கட்டு 330
வயித்திய முப்பு 360
வாய்ப் புண்ணுக்கு யெண்ணெய் 42
வாய்வுக்குத்தலுக்கு கிசாயம் 77
வாய்நாற்றத்திற்கு யெண்ணெய் 88
வாய்வுவிக்கல் சோகைக்கு மருந்து 201
வாயுவுகளுக்கு மருந்து 290
விக்கலுக்கு மருந்து 55
விஷத்திற்கு நசியம் கலிக்கம் 103
விப்புருதிகட்டிக்கு மருந்து 175
விஷமுட்டித் தைலம் 422
விஷங்களுக்கு மெழுகு 431
வியாதியஸ்தனுக்கு புத்திகூறல் 500
வெடிசூலை குஷ்டத்திற்கு பஞ்சமுக செந்தூரம் 215
வலணச்செந்தூரம் 457
லிங்கப்புற்றுக்குஇரசசெந்தூரம் 217

# பிழை திருத்தம்.

| பாட்டு நம்பர் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 14 | 2 | பொருமை | யெருமை |
| 15 | 1 | அறுக்கும் | ஆறுக்கும் |
| 23 | 8 | பேகாதென்னே | போகாதென்னே |
| 50 | 4 | பலமலரை | பலமரை |
| 67 | 6 | விதமாகன | விதமான |
| 103 | 7 | கண்ணிக் | கண்ணில் |
| 111 | 4 | லாறுவேலே | லாறுவேளே |
| 116 | 3 | பெருமருந்தி | பெருமாத்தி |
| 118 | 3 | ஸ்ரீமுடனே | ஸ்ரீயுடனே |
| 223 | 5 | வாலையப்பா | பாலையப்பா |
| 223 | 8 | வித்னோ | தேன் |
| 130 | 2 | தாமக்கொவ்வை | ராமக்கொவ்வை |
| 134 | 1 | பதிலி பாம்பு | பகலி பாம்பு |
| 150 | 2 | கோளு | கேளு |
| 208 | 6 | வளமாகத் | தளமாகத் |
| 251 | 1 | இதுபேரே | இது நேரே |
| 254 | 4 | தமக்காய்ச் | தமரக்காய்ச் |
| 254 | 8 | கண்ணுசை | கண்ணேசை |
| 255 | 7 | கெடியாத | கெடியான |
| 257 | 8 | கடைச்சியாமே | சடைச்சியாமே |
| 261 | 7 | உருவை | எருவை |
| 262 | 3 | துளேயெல்லாம் வென்றி | தாளேயெல்லாம் ஒன்றி |
| 283 | 4 | சிரும்பாரு | தீரும்பாரு |
| 284 | 4 | யீண்டு கொஞ்சம் | யிண்டுகொஞ்சம் |
| 288 | 5 | முத்திரிக்காய் | முந்திரிக்காய் |
| 305 | 2 | முட்டைநாறி | மூட்டைநாறி |
| 330 | 1 | வலிகளுக்கு | வலிப்புகளுக்கு |
| 357 | 2 | புரைதான் | புகைதான் |
| 361 | 5 | விட்டில | விட்டு |
| 411 | 1 | கிளிமுங்கின் | கிளி மூக்கின் |
| 417 | 8 | செம்புடைய | சேம்புடைய |